Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா

சுடர் :35 கதிர் :21 மார்கழி 01ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 17 டிசெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050



# சரிவராது சமஷ்டி!

## கோத்தாவும் கைவிரித்தார்

கொழும்பு, டிசெம்பர் 17

இலங்கையில் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கும் நடைமுறை சாத்தியமற்றது என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார். ஊடக நிறுவனங்களின் ஆசிரியர்களுடன் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடத்திய சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

23 ▶



கசிப்புக் காய்ச்சியோரை

## மடக்கிப் பிடித்த கிராம அலுவலர்

கிளிநொச்சி, டிசெ. 17

40 போத்தல் கசிப்பை உடமையில் வைத்திருந்தனர் என்றகுற்றச்சாட்டில் இருவர் அந்தப் பகுதி கிராம அலுவலரால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். கண்டாவளைப் பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

23 ▶

வவுனியா வடக்கு

## உதவிப் பிரதேச செயலரின் வீடு நேற்று தீக்கிரையானது

வவுனியா, டிசெ. 17

வவுனியா பண்டாரிக்குளம் பாடசாலை வீதியிலுள்ள வவுனியா வடக்கு உதவி பிரதேச செயலர் தர்மேந்திராவின் வீடு நேற்றுத் தீக்கிரையானது. மின் ஒழுக்குக் காரணமாக வீடுதீக்கிரையாகியிருக்கலாம் என்று அந்தப் பகுதி மக்கள் சந்தேகம் வெளியிட்

23 ▶



## குறைந்தது கோதுமை வரி

கொழும்பு, டிசெ. 17

இறக்குமதி செய்யப்படுகின்ற கோதுமை மாவுக்கான ஒன்றிணைந்த தீர்வை வரியை நீக்குவதற்கு

23 ▶

முச்சந்தி முரளி



" மற்ற ஆக்கள் மாதிரி சமஷ்டி தாறன் தாறன் என்டு ஏமாத்தாமல் சரிவராது என்டுறது பரவாயில்லை பாருங்கோ...!"

## காணாமல் போனோருக்கு அதற்குரிய சான்றிதழ்கள்

இதுவேதான் தீர்வு என்கிறார் கோத்தா

கொழும்பு, டிசெ. 17

'போர்க்காலத்தில் காணாமல்போனோர் உயிரிழந்திருக்கலாம். எனவே, அப்படியானவர்களுக்கு காணாமல்போனோர் தொடர்பான சான்றிதழ் வழங்கு

23 ▶

சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரியின்

## சாட்சியத்தில் முரண் நிலை

கோத்தா தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 17

'சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரி கடத்தப்பட்டார்' எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் தொடர்ந்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. எனினும்,

23 ▶

யாழில் நாளை

## மணல் கொள்ளைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 17

மணல் நகர்த்தல் அனுமதி நீக்கப்பட்டதைத் தொடர்ந்து மணல் அகழ்வு தீவிரம் பெற்றுள்ள நிலையில், மணல் கொள்ளைகளுக்கு எதிராக யாழ்ப்பாணம் பேருந்துத் தரிப்பிடத்துக்கு முன்னதாக நாளையதினம் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது.

காலை 10 மணிமுதல் இடம்பெறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சி, அரசியல், அமைப்புக்கள் என்ற பேதமின்றி அனைவரும்

23 ▶

முல்லைத்தீவில்

## ஐயங்கன்குளத்தில் மட்டும்தான் மணலை அகழ்வதற்கு அனுமதி

*கனியவளத் திணைக்களத்தின் பணிப்பாளர் இப்படித் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ. 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் மண் அகழ்வுக்காக ஐயங்கன்குளத்தில் மட்டுமே கனியவளத் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளதாக அதன் பணிப்பாளர் நேற்றையதினம் தெரிவித்

23 ▶

சுவிஸ் தூதரகத்தின் அதிகாரி

## கைது!

கொழும்பு, டிசெ. 17

கொழும்பில் இனம்தெரியாத நபர்களால் துப்பாக்கி முனையில் வெள்ளைக்காரில் கடத்தப்பட்டு கூட்டுப் பாலியல் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார் என்று

23 ▶



## சுவிஸ் தூதுவரை அழைத்து விளக்கமளித்தார் கோத்தா

இட்டுக்கட்டிய பொய் என்றும் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 17

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்று இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் ஹென்ஸ் பீட்டர் மொக்கை ஜனாதிபதி அலுவலகத்துக்கு நேரில் அழைத்துக் கலந்துரையாடியதுடன் கொழும்பிலுள்ள சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரி கடத்தப்பட்டதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு முழு

23 ▶

# அனலைதீவுக்கான போக்குவரத்து தடை

யாழ்ப்பாணம்,டிசெ.17
அனலைதீவுக்கான சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் கடந்த இரண்டு வாரங்களாகப் பழுதடைந்து சேவை தடைப்பட்டுள்ளது. அதனால் அந்தப் பகுதி மக்கள் போக்குவரத்துச் செய்வதற்கு பல்வேறு இன்னல்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

அனலைதீவில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று மட்டுமே சேவையில் ஈடுபடுகிறது. நாளொன்றுக்கு 6 தடவை இந்த பஸ் சேவையில் ஈடுபடும். மாணவர்கள், தொழிலாளர்கள், அரச அலுவலர்கள் எனப் பலர் பயணம் செய்கின்றனர். கடந்த இரண்டு வாரங்களாக பஸ் சேவைகள் இடம்பெறவில்லை.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளிடம் மக்கள் பிரதிநிதிகள் கேட்ட போது, பஸ் பழுதடைத்துள்ளது. அதனைத் திருத்துவதற்கு கடல் வழியாக யாழ்ப்பாணம் கொண்டு செல்ல வேண்டும். கடல் வழியாக பஸ்ஸைக் கொண்டு செல்வதற்குப் பயன்படும் கடற் படையின் கடல் கலமும் பழுதடைந்துள்ளது. அடுத்து மாதமளவில் பஸ் சேவைகள் நடைபெறும் என்று தெரிவிக்கப் பட்டது. (க-7)

# ஈழத் தமிழர்களின் கண்ணீரை திமுக எப்போதும் துடைக்கும்

## ஸ்டாலின் அறிக்கை

சென்னை, டிசெ. 17

ஈழத் தமிழர்கள் சிந்திய கண்ணீரைத் துடைக்கும் கடமையைச் செய்ய திமுக எப்போதும் தயங்காது என அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது: 'வடக்கு வாழ்கிறது! தெற்கு தேய்கிறது! என்று, அண்ணா தெற்கிலிருந்து எழுப்பிய முழக்கம், அன்று திசையெட்டும் பரவி, இந்திய அரசியலின் போக்கையும் நோக்கையும் மாற்றிக் காட்டியது.

அது ஆக்கபூர்வமான ஆரோக்கியமான மாற்றம். சமச்சீரான வளர்ச்சியை நோக்கிய மாற்றம். அதற்கு நேர்மாறாக, இப்போது மத்திய பாஜக அரசின் குடியுரிமை திருத்தச் சட்டத்தால், வடக்கு கொழுந்து விட்டு எரிகிறது, வடகிழக்கு கொந்தளிக்கிறது, தெற்கு குமுறுகிறது என்ற அவல நிலை உருவாகியுள்ளது.

அண்டை நாடுகளான பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கதேசம் ஆகிய மூன்று முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த, முஸ்லிம்கள் நீங்கலாக மற்ற மதத்தைச் சேர்ந்தவர்கள் வரலாம் என்கிறார்கள். இந்துக்களை, கிறிஸ்தவர்களை, சீக்கியர்களை, புத்த மதத்தினரை வரவேற்கும்போது, முஸ்லிம் சிறுபான்மையினரை எதற்காக வெறுத்துப் புறக்கணிக்க வேண்டும் என்பதுதான் திமுக உள்ளிட்ட மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகள் எழுப்புகின்ற கேள்வி.

அதுமட்டுமல்ல, அண்டை நாடுகளான இந்த மூன்று நாடுகளிலிருந்தும் இந்துக்கள் உள்ளிட்டோர் வரலாம் என்கிறபோது, இந்தியாவின் தென்முனையில் கண்ணீர்த்துளி போலக் காட்சியளிக்கும் அண்டை நாடான இலங்கையைச் சேர்ந்தவர்கள் வருவதற்கு வாய்ப்பளிக்காமல், தடை விதித்தது ஏன் என்பது திமுக எழுப்புகின்ற மிக முக்கியமான கேள்வி.

அந்த நாட்டில் நடைபெற்ற இனப்படுகொலையால், 30 ஆண்டுகளுக்கு முன்பாக தாய்த் தமிழகத்தில் தஞ்சம் அடைந்த தொப்புள்கொடி உறவுகளான ஈழத் தமிழர்களின் எதிர்காலம் என்னவாகும் என்கிற கவலை தோய்ந்த கேள்வியை முன்வைத்தே, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் திமுக இந்தத் திருத்தச் சட்டத்தை எதிர்த்தது - என்றுள்ளது. (ம)



# வவுனியாவில் விரைவில் நவீன வர்த்தக நிலையம்

## ரூ.450 மில்லியன் நிதி ஒதுக்கீடு

வவுனியா,டிசெ.17
ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டத்தின் கீழ் வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள பகுதியில் 450 மில்லியன் ரூபா நிதியில் நவீன வணிக வளாகம் அமைக்கப்படவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 700 மில்லியன் ரூபா நிதி உதவியில் வவுனியாவில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்பாடுகள் தொடர்பாக, வவுனியா நகரசபையில் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. அதில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

ஒதுக்கப்பட்ட நிதியில், வவுனியா பொதுப் பூங்கா வளாகத்தில் 100 மில்லியன் ரூபா செலவில் திறந்த அரங்கம், அதனுடன் இணைந்த வகையில் அறைகளும், பொதுமக்கள் இருப்பதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்படும். அத்துடன் வவுனியா பொது நூலகதுக்கு அண்மையில் 150 மில்லியன் ரூபா செலவில் திருவள்ளுவர் அருங்காட்சியகம், அதனுடன் இணைந்த வகையில் கலாசார மண்டபமும் அமைக்கப்படவுள்ளது.

இந்த வேலைதிட்டங்களை விரைவில் ஆரம்பிப்பதற்கான அனைத்து பணிகளும் நகரசபையால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கலந்துரையாடல் தவிசாளர் இ.கௌதமன், உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (க-110)

# சமுர்த்தி கெக்குலு கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 17
சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக மாவட்டமட்டப் போட்டியும் கௌரவிப்பு நிகழ்வும் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் க.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்துகொள்வார். (த)

# குளங்களில் விடப்படும் மீன், இறால் குஞ்சுகள்

வவுனியா,டிசெ.17
வவுனியாவில் உள்ள குளங்களில் மீன் மற்றும் இறால் குஞ்சுகள் விடப்படுகின்றன என்று தேசிய நீர் உயிரினச் செய்கை அதிகாரசபையின் வவுனியா,மன்னார் மாவட்டங்களுக்கான பொறுப்பதிகாரி யோகநாதன் நிசாந்தன் தெரிவித்தார்.

அநேகமான குளங்கள் தண்ணீர் நிரம்பியுள்ளது. குளங்களின் கமக்காரர் அமைப்புகள் மற்றும் கமநல அபிவிருத்தி நிலையங்களூடாக திணைக்களம் மீன்குஞ்சு களை விடுகின்து.

பெரிய மற்றும் சிறிய நீர்ப் பாசனக் குளங்களுக்கு 15 லட்சம் பெறுமதியான மீன் குஞ்சுக ளும், 9 இலட்சம் பெறு மதியான இறால் குஞ்சுகளும் விடப்பட்டுள்ளன. மீனவர்கள் சட்ட விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அவ்வாறான செயற்பாடுகளுக்கு நீதி மன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்டவிரோதமான வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்த வருடம் 60 வழக்குகள் நீதி மன்றில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இரண்டு இலட்சத்து 45 ஆயிரம் ரூபா தண்டபணமாக அறவிடப்பட்டுள்ளது. - என்று மேலும் தெரிவித்தார். (க-110)

# பாவனையற்ற காணிகளை துப்பரவு செய்யவும்

யாழ்ப்பாணம்,டிசெ.17
யாழ்.மாநகர பிரதேசத்தில் டெங்கின் தாக்கம் அதிகரித்துச் செல்வதை அடுத்து, பாவனை இன்றி இருக்கும் வெற்றுக் காணிகளைத் துப்புரவு செய்யுமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

அநேகமான இடங்களில் பராமரிப்பு இன்றி இருக்கும் வெற்றுக்காணிகளில் படர்ந்து வளர்ந்திருக்கும் புற்பற்றைகளை வெட்டி அழிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மழை காலம் ஆகையால் காணிகளை மூடிப் பற்றைகள் வளர்ந்துள்ளன. இந்தப் பற்றைகள் செடிகளில் இருந்து நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றன. வெற்றுக் காணிகளை உடன் துப்புரவு செய்யுமாறு கோரி மஞ்சள் அறிவிப்புக்கள் சம்பந்தப்பட்ட காணிகளின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

துப்புரவு செய்யத் தவறும் பட்சத்தில் மாநகர சபை அந்தக் காணிகளைத் துப்புரவு செய்யும். துப்புரவு செய்யப்பட்டதற்கான கொடுப்பனவு பின்னர் சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்களிடம் இருந்து அறவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-17)

# பொய்ச் சாட்சி கூறியதால் ஓராண்டு சிறை தண்டனை

கொழும்பு, டிசெ.17
வழக்கு ஒன்றில் பொய்ச் சாட்சியமளித்தமைக்காகப் பொலிஸ் அதிகாரி ஒருவருக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் ஒரு வருடச் சிறைத் தண்டனை விதித்துள்ளது. ஹெரோயின் வழக்கு ஒன்றில் பொய்ச் சாட்சியம் வழங்கினார் என்று இந்தப் பொலிஸ் அதிகாரிக்கு எதிராக குற்ற ஞ்சாட்ட ப்பட்டிருந்தது. இந்தக் குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதை அடுத்துக் கொழும்பு மேல் நீதிமன்று பொலிஸ் அதிகாரிக்கு ஒரு வருடச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது என்று சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

# அசமந்தமாக செயற்பட்ட சி.ஐ.டி.

## ஆணைக்குழு முன் குற்றச்சாட்டு குவிகிறது

கொழும்பு, டிசெ. 17

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்களில் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டுகள் தயாரிக்கப்பட்டன எனக் கூறப்படும் வெல்லம்பிட்டி செப்புத் தொழிற்சாலை குறித்த விசாரணையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் (சிஐடி) அதிக அக்கறை காட்டவில்லை என்று வெல்லம்பிட்டி பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி, பொலிஸ் தலைமை ஆய்வாளர் அனில் ஜெயந்த தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற, உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்கள் குறித்து விசாரணை நடத்தும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முன்பாக சாட்சியங்களை அளித்த போதே இதனைத் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்தபோது தெமட்டகொட பொலிஸ்நிலைய பதில் பொறுப்பதிகாரியான இவர், பின்னர் வெல்லம்பிட்டிக்கு மாற்றப்பட்டு, தற்போது தலங்கம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகச் செயற்படுகிறார்.

விசாரணையை நடத்துவதற்காக சி.ஐ.டி அதிகாரிகள் வெல்லம்பிட்டி செப்புத் தொழிற்சாலைக்குச் சென்றார்களா என்பது தனக்குத் தெரியாது என்று தெரிவித்தார்.

கடந்த ஜூன் மாதத்தில் வெல்லம்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு இடமாற்றப்பட்டதைத் தொடர்ந்து, வெல்லம்பிட்டி செப்புத் தொழிற்சாலை குறித்து விசாரிக்க சி.ஐ.டி. அதிக முயற்சி எடுக்கவில்லை. பணியாளர்களை நியமித்து வெல்லம்பிட்டி செப்பு தொழிற்சாலையின் வளாகத்தை பாதுகாக்க, உரிமையாளருக்கு சிஐடி அனுமதி வழங்கியிருந்ததை ஜெயந்த வெளிப்படுத்தினார்.

இதேவேளை, ஆணைக்குழுவின் முன் பௌத்த பிக்கு ஒருவர் இரகசிய வாக்குமூலம் வழங்கினார். சுமார் 3 மணித்தியாலங்கள் அவர் சாட்சியமளித்தார். இன்று விசாரணை மீண்டும் இடம்பெறவுள்ளது. (ஒ.5)


### வவுனியா – ஓமந்தையில்

# சங்கிலி அறுக்க முயற்சி ஒருவர் துரத்திப் பிடிப்பு

## ஓடித் தப்பினார் இன்னொருவர்

வவுனியா, டிசெ. 17

வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுக்கமுற்பட்டனர் என்று கூறப்படும் இருவரில் ஒருவரை இளைஞர்கள் துரத்திப் பிடித்து நையப்புடைத்த பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.



சம்பவம் வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமோட்டையில் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

சங்கிலி அறுக்க முயற்சித்த போது சங்கிலியைப் பற்றிப் பிடித்தவாறு சத்தமிட்டுள்ளார். அங்கு மக்கள் ஒன்று கூடியபோது சந்தேகநபர்கள் இருவரும் தப்பி ஓடினர். எனினும், இளைஞர்கள் விரட்டிச் சென்றனர். ஒருகட்டத்தில் இரண்டு சந்தேகநபர்களும் தமது மோட்டார் சைக்கிள்களைக் கைவிட்டு பற்றைக் காட்டுக்குள் தப்பிச் செல்ல முற்பட்டனர். இளைஞர்கள் விடாது விரட்டிச் சென்று ஒருவரை மடக்கிப் பிடித்து நையப்புடைத்தனர். பின்னர் ஓமந்தைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அவர்ஆண்டியா புளியங்குளத் தைச் சேர்ந்தவர். தாம் பரிசங்குளம் பகுதிக்கு கட்டட வேலைக்காக வந்திருந்தோம் என்றும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள்களைப் பொலிஸார் மீட்டனர்.

தப்பிச்சென்ற மற்றைய நபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (து-110)

# தேயிலைக் கொழுந்தின் விலை திடீர் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.17



தேயிலைக் கொழுந்தின் விலை திடீரென அதிகரித்துள்ளது என்று தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள்தெரிவித்துள்ளனர். கடந்த செப்ரெம்பர் மாதம் ஒரு கிலோ தேயிலைக் கொழுந்தின் விலை 84 ரூபாவாகக் காணப்பட்டது. தற்போது ஒரு கிலோ தேயிலைக் கொழுந்தின் விலை 94 ரூபாவாக அதிகரித்துள்ளது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஏ)

# மரக்கறி விலைகள் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.17

மரக்கறி விலைகளில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாகவே மரக்கறி விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று தம்புள்ள பொருளாதார மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. பெரிய வெங்காயத்தின் விலை ஒரு கிலோ 550 ரூபாவாகவும், கரட் விலை ஒரு கிலோ 250 ரூபாவாகவும் காணப்படுகின்றது. இவற்றை விட போஞ்சி போன்ற ஏனைய மரக்கறிகளின் விலைகளும் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)



# மாற்றுத் திறனாளிகளுக்கு மன்னாரில் மதிப்பளிப்பு


மன்னார்,டிசெ.17

மாற்றுத் திறனாளிகளுக்கான மதிப்பளிப்பு, மருத்துவ முகாம் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுகள் மன்னார் நகரசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றன. மன்னார் மாவட்டச் செயலகமும், தேனீ மன்னார் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பும் இணைந்துநிகழ்வை ஏற்பாடு செய்தன.

மத்திய மாகாண சமூகசேவைகள் திணைக்களம், மன்னார் மாவட்டச்செயலகம், கொழும்பைச் சேர்ந்த தனியார் நிறுவனங்கள் நிகழ்வுகளுக்கான அனுசரணையை வழங்கின. நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர்சி.ஏ.மோகன்றாஸ், மன்னார் மாவட்ட மேலதிக செயலர் சி.குணபாலன், மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ அதிகாரி நடராசா திலீபன் மற்றும் மாவட்டச் செயலகத்தின் பிரதம கணக்காளர் செல்வக்குமார், மாந்தை மற்றும் மன்னார் பிரதேச செயலர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையாளர்கள், மன்னார் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (க-213)






# பொங்கலுக்கு வெளியாகும் தனுஷின் 'பட்டாஸ்'

தனுஷ் நடிப்பில் உருவாகியுள்ள 'பட்டாஸ்' படத்தின் போஸ்டர் வெளியாகியுள்ளது. அதில் படத்தின் வெளியீட்டுத் திகதியையும் படக்குழுவினர் அறிவித்துள்ளனர். 'கொடி' பட இயக்குநர் துரை செந்தில் குமார் இயக்கத்தில் தனுஷ் நடிக்கும் படம் 'பட்டாஸ்'. புதுப்பேட்டை படத்துக்கு பின்னர் நடிகை சினேகா இந்தப் படத்தில் தனுஷுடன் இணைந்திருக்கிறார். இவர்களுடன் மெஹ்ரின் பிர்ஜதா, நவீன் சந்திரா உள்பட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகின்றனர். விவேக்மெர் வின் இசையில் இந்தப் படத்தை சத்யஜோதி நிறுவனம் தயாரிக்கிறது.

கடந்த ஜூலை மாதத்தில் தனுஷின் பிறந்த நாளை முன்னிட்டு இப்படத்தின் பெயரை வெளியிட்டிருந்த படக்குழு அண்மையில் படத்தின் முதல் பாடலை வெளியிட்டது. அதைத்தொடர்ந்து தற்போது இந்தப் படத்தின் போஸ்டர் வெளியாகியுள்ளது. அதில் படம் ஜனவரி 16ஆம் திகதி திரைக்கு வரும் என்ற அறிவிப்பும் வெளியாகியுள்ளது.

முகமூடி™ @mugamoodi11

உன் முன்னால் புகழப்படும்
பொன்னான வார்த்தைகளை விட,

உன் பின்னால் புகழப்படும்
சாதாரண வார்த்தைகள் தான்
உனக்கான மதிப்புமிக்க சான்று..!!

சீனிமுகம்மது.k@mseeni33

மின்னுவது எல்லாம்
பொன் அல்ல புன்னகையே
பெண்ணுக்கு அழகு

சீனிமுகம்மது.k@mseeni33

வெளியே சொல்ல முடியாத
ரகசியம் ஒவ்வொருவரிடம்
உள்ளது..
அது அவர்களின் password தான்

ஆர்வக்கோளாறு™

வெங்காயமும் மனைவியும்
ஒன்னு இருக்குற வரை
அழுகவைக்கும் இல்லேன்னா
ஏங்கவைக்கும் ..!!

மாஸ்டர் பீஸ்@Kannan_Twitz


திங்கள் வந்ததுக்கெல்லாம்
கவலை இல்லை... ஞாயிறு
போயிடுச்சேனுதான்
கவலையாருக்கு.

twitter

## யாழில் சுவரோவியங்கள்










எவன் தன்னைத்தானே செலவழிக்கிறானோ அவன் பணக்காரனாகிவிடுகிறான்

**ஸாரா பெர்ன்ஹர்ட்**

நீயே விரும்பினாலும் மனித இனத்திலிருந்து உன்னை உன்னால் பிரித்துக் கொள்ள இயலாது. மனித இனத்துக்காக மனித இனத்துடன் சேர்ந்தே நீ வாழ வேண்டும். நாமெல்லோரும் ஒருவரையொருவர் நேசிக்கவும் ,ஒருவருடன் ஒருவர் கலந்துரையாடவும்,கருத்துக்களை பரிமாறிக்கொள்ளவுமே படைக்கப்பட்டு இருக்கிறோம் . தன்னல மறுப்பு இன்றி இது முடியாது.


**மார்கஸ் அரிலீயஸ்**



## பட்டதாரி கதை


"ஏம்பா தம்பி!
படிப்பு முடிஞ்சு ஒரு வருசம் ஆச்சு ,
எங்கையாவது வேலைக்கு சேர்ந்துட்டியா?
எப்பவும் போனும் கையுமா இருக்காய்?"
"அதுவா பெரியவரே!
என் போன்ல பேஸ்புக் , வாட்ஸப் வசதி எல்லாம் இருக்கு, அதனால தான் எப்பவுமே அதிலையே இருக்கேன்.
பேஸ்புகில் 3 குரூப் அட்மினா இருக்கேன், எனக்குக் கீழ் 5 ஆயிரம் பேர் இருக்காங்க. வாட்ஸப்புல 2 குரூப்புக்கு ஓனரா இருக்கேன்"
"அடேங்கப்பா!
எப்படியும் மாசம் ஒரு லட்சம் தேறும் போல இருக்கே...
பரவாயில்லைப்பா! நல்லா இருப்பா. உங்க அப்பா தான் கூலி வேலை செஞ்சுக்கிட்டு கஷ்டப்பட்டுகிட்டு இருந்தாரு, நீயாவது ஓனர் ஆயிட்டியே! ரொம்ப சந்தோசமப்பா..."

பட்டதாரி!!! ?



# எறும்பும் வெட்டுக்கிளியும்

மதிய வெயில் நேரத்தில் வெட்டுக்கிளி ஒன்று இங்கும் அங்கும் குதித்து பாட்டுப்பாடி ஆடிக்கொண்டிருந்தது. அப்போது எறும்பு ஒன்று அரிசி ஒன்றை எடுத்துக் கொண்டு அதே பாதையில் தன் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தது. அதைப் பார்த்த அந்த வெட்டுக் கிளி எறும்பிடம் "இப் போது என்ன அவசரம். சிறிது நேரம் என்னைப் போல நீயும் என்னுடன் விளையாடலாமே" என் றது.



அதற்கு எறும்பு "இன்னும் சில நாள்களில் வெயில் காலம் முடிந்து, மழைகா லம் தொடங்கப் போகிறது. மழைக்காலத்தில் எவரும் வெளியே செல்லமுடியாது. அதனால் அந்த நேரத்திற் குத்தேவையான உணவை இப்போது இருந்தே நான் என் வீட்டில் சேகரித்து வைத்துக்கொள்கிறேன்" என்றது.

வெட்டுக்கிளி எறும்பிடம் "மழைக்காலம் வர இன் னும் நாள்கள் இருக்கி ன்றன. நான் விளையாடச் செல்கிறேன்" என்று சிரித்துக் கொண்டே நடனமாடிச் சென்றது.

நாள்கள் கடந்தன. மழைக்காலமும் வந்தது. தான் சேக ரித்த உணவை உண்டு தன் வீட்டிலே எறும்பு இருந்தது. ஆனால் அந்த வெட்டுக்கிளிக்கோ உணவு ஏதும் கிடைக் காமல் உணவு தேடி மழையில் சுற்றித்திரிந்தது.

அப்போது வெட்டுக்கிளிக்கு "எறும்பு உணவு சேகரித்து வைத்து இருக்கும் அதனிடம் கேட்டுப் பார்க்கலாம்" என்ற எண்ணம் வந்தது.

வெட்டுக்கிளி எறும்பின் வீட்டுக்கு வந்து எறும்பிடம் "எனக்கு மிகவும் பசிக்கிறது. ஏதாவது உணவு கிடைக் குமா?" என்று கேட்டது.

தன்னிடமிருந்த சேகரித்த உணவில் இருந்து சிறித ளவை வெட்டுக்கிளையிடம் கொடுத்த எறும்பு. "அன்று என்னைப் பார்த்துச் சிரித்தாயே. இப்போது நான் சேக ரித்த உணவு தான் இன்று எம் இருவருக்கும் உதவியது. இனி நீ எப்போதும் சோம்பலில்லாமல். வெயில் காலத் தில் மழைக்காலத்திற்கு வேண்டியதைச் சேமித்துக் கொள்" என்றது.

கால நேரம் பாராது உழைத்தால் வாழ்வு பிரகாசிக்கும் என்று வெட்டுக்கிளி உணர்ந்தது.

கடின உழைப்பு உடனடியாகப் பலன் தராவிட்டாலும் என்றாவது ஒருநாள் கண்டிப்பாகப் பலன் தரும்.

## படத்தின் நிழல் உருவங்களை சரியாகப் பொருத்துங்கள்





## மரண அறிவித்தல்கள்



மலர்வு
09 - 01 - 1948

உதிர்வு
16 - 12 - 2019

### சின்னையா சிவசுப்பிரமணியம் (மணியம்)

யாழ். கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவசுப்பிரமணியம் (மணியம்) (இளைப்பாறிய ஊழியர் - Nothern Tyres Rebuilding Industries) நேற்று (16.12.2019) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா செல்லம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ்சென்ற சிவசம்பு நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சகுந்தலாதேவியின் பாசமிகு கணவரும் அரவிந்தன் (உற்பத்தி இணைப்பாளர் - NEFAD Foundation Pvt Ltd - குருநகர்), ஆதவன் (தாதிய உத்தியோகத்தர், யாழ் போதனாவைத்தியசாலை), ஆதித்தன் (மாணவன் - க.பொ.த உயர்தரம் - 2020 விஞ்ஞானப்பிரிவு, யாழ் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் மயூரி (அசிரியை - யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்) அவர்களின் அன்பு மாமனாரும் நயனிகாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் 18.12.2019 புதன்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

முத்தட்டுமட வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்
077 269 6484



### மார்க்கண்டு சரஸ்வதி

ஏழாலையை பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை (நந்தாவில்) வதி விடமாகவும் கொண்ட மார்க்கண்டு சரஸ்வதி நேற்று **(16.12.2019)** திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி - வள்ளி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னு - நாகி தம்பதிகளின் மரு மகளும் காலஞ்சென்ற பொன்னு மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான லச்சுமி, ஞானமுத்து, தேவராஜா, அப்புத்துரை மற்றும் நல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கந்தகுமார் (பிரான்ஸ்), சாந்தகுமார் (இத்தாலி), கௌசலா (சுவிஸ்), செல்வ குமார் (கடை- பிள்ளையார் ஸ்ரோர்ஸ்), பிரதீபா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் சிவலிங்கம், கேதீஸ்வரன், கவிதா, ஜனனி, வாணி, அபர்ணா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(18.12.2019)** புதன்கிழமை முற்பகல் **11.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளி கோவிலடி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

CS30000(16/17)

தொடர்பு: 076 419 4822

# அகவை அறுபதில் சேவை நலன் பாராட்டு



## இராமலிங்கம் செல்வரத்தினம்

(ஆய்வுகூட உதவியாளர் (விசேட தரம்), தாவரவியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

தாவரவியல்துறை. யாழ். பல்கலைக்கழகத்தில் 1985 ஆம் ஆண்டு தொடக்கம் மார்கழி 2019 ஆம் ஆண்டு வரை 34 வருடங்கள் நற்பணி செய்து ஓய்வு பெற்றுச் செல்லும்

**இராமலிங்கம் செல்வரத்தினம்**

அவர்களை என்றென்றும் வளமுடன் பல்லாண்டு வாழ்கவென இன்றைய நன்நாளில் வாழ்த்துகின்றோம்.

**தாவரவியல்துறை சமூகம்**
**யாழ். பல்கலைக்கழகம்**
**17.12.2019** (CS 29841)(14,17)


# வர்ணம் தீட்டுவோம்



# மரண அறிவித்தல்கள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 | 14 |
| ..... | ..... |
| 08 | 12 |
| ..... | ..... |
| 1934 | 2019 |

## சுவாமிநாதர் பூரணம்

எருவன் கொடிகாமத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், வரணி இயற்றாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதர் பூரணம் கடந்த **(14.12.2019)** சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கார்த்திகேசு சுவாமிநாதரின் அன்பு மனைவியும், யோகலீலா, சந்திரவதி, காலஞ்சென்ற கனகரத்தினம், சாந்தா, கதிர்காமநாதன் (France), காலஞ்சென்ற கனகசிங்கம், காராளசிங்கம், இந்திரா, குலசிங்கம் (London), யோகநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும், குட்டித்தம்பி, சிவராசா, அன்னலஷ்மி, கந்தசாமி, சந்திரராணி, காலஞ்சென்றவர்களான புஸ்பராணி, கணேஸ் மற்றும் தயாளினி, சடாச்சரம் (CTB ஊழியர்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை **(18.12.2019)** புதன்கிழமை நண்பகல் **12.00** மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**எருவன், கொடிகாமம்.** **தகவல்: குடும்பத்தினர்.**

**077 216 4588, 077 129 4049** C11980(16/17)



## குமாரசாமி குணரெத்தினம் (ராசன்)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி குணரெத்தினம் நேற்று (16.12.2019) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - சற்குணம் தம்பதிகளின் அன்பு மகனும், விஜயலெட்சுமியின் (பொன்னு) அன்புக் கணவரும், நயினாதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான முருகேசு - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், பிரண்டன் (கனடா), நிலாவினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:- மு.துரைரத்தினம்**
**மைத்துனர் குடும்பத்தினர்.**

**கனடா.** (CS/29994)(11,17)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்




## அருட்சகோதரி M. அஞ்சலிக்கா A.C
**(SLPS - III, B.A, P.G.D.E, M.A)**

நேற்று (16.12.2019) திங்கட்கிழமை எமது அதிபர் மாகாணநிலை பிரதீபா பிரபா விருதினைப் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல விருதுகள் பெற்று வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

மனதார வாழ்த்தும்:-

**யா/ நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க.வித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலைச் சமூகம்.**


# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **செல்வி. சி.விஜிதா** அவர்களின் அன்புத் தந்தையார்

## ஆறுமுகம் சின்னராசா

அவர்கள் கடந்த **(14.12.2019)** சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். C11979(16/17)

**நலன்புரிக்கழகம், மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்.**

# 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணகம் | விண்ணகம் |
|---|---|
| 10 | 27 |
| .... | .... |
| 11 | 12 |
| .... | .... |
| 1924 | 1999 |

திதி: 17.12.2019

அளவெட்டி - வடக்கு

## ஆசிரியமணி அமரர் நமசிவாயம் வாதவூரர்

அப்பா!

நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து இருபது ஆண்டுகள் உருண்டோடியும், எம் நெஞ்சங்களில் உந்தன் நினைவுச் சுவடுகள் அழியவில்லை. இருபது ஆண்டுகள் என்ன? ஈர் ஆயிரம் ஆண்டு ஆனால் என்ன? உம் இழப்புக்கு ஈடு ஏதும் இல்லை.

**மாவிலங்கை,**
**அளவெட்டி.**

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

**071 856 1625, 077 691 5296**

# பொது அறிவுத் தகவல்கள்

1. உடலின் மிக வலிமையான சதைப் பகுதி "நாக்கு"
2. எப்போதும் கெட்டுப்போகாத ஒரே உணவு "தேன்"
3. வானத்தை நிமிர்ந்து பார்க்க இயலாத ஒரே விலங்கு "பன்றி"
4. காண்டா மிருகத்தின் கொம்புகள் உண்மையில் எலும்புகள் அல்ல. அவை மிகக் கடினமான மயிரிழைகளால் உருவானவை.
5. அஞ்சல் தலையில் தனது நாட்டின் பெயரைக் கொண்டிராத நாடு ஐக்கிய இராச்சியம்.
6. பூனையின் கண்பார்வை மனிதனைவிட எட்டு மடங்கு கூர்மையானது.
7. உலகிலேயே குளிர்ந்த இடம் சைபீரியா (ரஷ்யா).
8. உலகிலேயே மிகப் பெரிய நூலகம் மாஸ்கோவில் உள்ள லெனின் நூலகம்.
9. தொலைக்காட்சியில் பயன்படுத்தப்படும் மூன்று அடிப்படை நிறங்கள் பச்சை, நீலம், சிவப்பு.
10. முதன் முதலில் காகிதத்தினால் ரூபாய் நோட்டை அச்சிட்டு வெளியிட்ட நாடு சீனா.
11. நத்தைகளால் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் வரை நித்திரை கொள்ள முடியும்.
12. பிளாஸ்டிக்குகளை எரிக்கும் பொழுது டையாக்சின் என்ற நச்சுப் புகை வெளியாகிறது.



# அம்மா

அன்பு என்றால் அம்மா
ஆறுதல் தருபவள் அம்மா
இரத்தத்தை பாலாக்கி தந்தவள் அம்மா
ஈகை விளக்கியவள் அம்மா
உயிரைக் கொடுப்பவள் அம்மா
ஊழ் உரைத்தவள் அம்மா
என்னைப் பெற்றவள் அம்மா
ஏணியாய் இருந்தவள் அம்மா
ஐயம் நீக்கியவள் அம்மா
ஒற்றுமை விதைத்தவள் அம்மா
ஓய்வின்றி உழைத்தவள் அம்மா
ஔடதம் ஆனவள் அம்மா
எஃகின் உறுதி அம்மா


## வேலையாள்கள் தேவை

கடையில் வேலை செய்யக்கூடிய படித்த அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.

தொடர்பு - 076 196 6600

## A/L Maths Tuition Master தேவை

A/L Maths நுண்கணிதம் (calculus). vector, Matrics வீடுவந்து கற்பித்து கொடுக்க கூடிய பட்டதாரி மாணவன்/ ஆசிரியர் தேவை. (Fast Track)

தொடர்பு - ஆனந்தன்
077 049 2089

## சிறுநீரகம் தேவை

35 வயதுக்குக் குறைந்தவர்களிடமிருந்து $0^+$ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. சன்மானம் வழங்கப்படும்.

**076 894 6820, 077 508 4464**

## வசந்தம் இலவச திருமண சேவை

எம்மிடம் பட்டதாரிகள், அரச உத்தியோகத்தர்கள், வெளிநாட்டு மணமக்கள் உண்டு. இலவசமாக நீங்களும் உங்கள் குறிப்பு விபரங்களை பதிவுசெய்து உங்களுக்குரிய மணமக்களை தெரிவு செய்யமுடியும்.

தொடர்பு - Bala 077 049 2089
Viber/ IMO +16476079624 (Widows க்கு முற்றிலும் இலவசம்)

# இலங்கைத் தமிழரசுக் கட்சி

## 70 ஆண்டுகள் நிறைவு விழா

**காலம் :- 18 - 12 - 2019 புதன்கிழமை மு.ப 9.30 மணி**
**இடம் :- இளங்கலைஞர் மண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்**
**தலைமை :- மாவை.சோ.சேனாதிராசா (பா.உ)**

## நிகழ்ச்சி நிரல்

**வரவேற்புரை, தொடக்கவுரை**

திரு. சிவஞானம் சிறிதரன் (பா.உ)

(அ) **வாழ்த்துரை**

அதி.வண.கலாநிதி.எஸ்.ஜெபநேசன்,

(ஆ)முன்னாள் பேராயர்,சி,எஸ்,ஐ, தலைவர், தந்தை செல்வா அறக்காவற்குழு
தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் உரைகள்

**தமிழரசுக்கட்சித்தலைவர்கள் உரைகள்**

(அ) திரு சி.வி.கே சிவஞானம்
"70 ஆண்டுகளில் தமிழரசுத் தலைவர்கள் மாண்புகளும், ஆளுமையும்"

(ஆ) திரு.க.துரைராஜசிங்கம்
"அரசியல் 70 ஆண்டுகள் தமிழரசுக்கட்சியின் தீர்மானங்கள்,
பரிணாமமும் வகிபாகமும்"

(இ) திரு.எம்.ஏ.சுமந்திரன் (பா.உ)
70 ஆண்டுகளில் தமிழரசுக்கட்சியின் நீதிமன்ற வழக்குகள்;
தமிழரசுக் கட்சிக்கு எதிரான அரசுகளின் வழக்குகள்;
உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள், ஐ.நா.மனித உரிமைப்
பேரவைத் தீர்மானங்கள்.

(ஈ) திருமதி.சாந்தி சிறீஸ்கந்தராசா (பா.உ)
"இனவிடுதலைப் போரில் தமிழ்ப் பெண்கள்
வகிபாகமும், விளைவுகளும்"

(உ) தமிழரசு மாதரணி, இளைஞர் அணியின்
பிரதிநிதிகள் உரைகள்

**பிரதான உரை**

திரு.இரா.சம்பந்தன் (பா.உ)
" 70 ஆண்டுகளிலும் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான
முயற்சிகள், சர்வதேசம், இந்தியா ஐ.நா.மனித உரிமைப்
பேரவைக்கான முறையீடுகள், எதிர்காலம்"

**நன்றியுரை**

திரு.பெ.கனகசபாபதி

**தமிழரசு உறுப்பினர்கள் அபிமானிகள் அனைவரும்
அணிதிரண்டு வருகைதந்து பங்கு கொள்ளுமாறு
அழைக்கின்றோம்.**

## இலங்கைத் தமிழரசுக்கட்சி

---

# யூனியன் அஷ்யூரன்ஸ்
# மீண்டும் உயர் விருதை வென்றுள்ளது!



National Business Excellence Awards 2019 நிகழ்வில் காப்புறுதிப் பிரிவில் யூனியன் அஷ்யூரன்ஸ் இம்முறையும் அதியுயர் விருதான சிறப்பு தங்க விருதை சுவீகரித்துள்ளது.
செயல்திறன் சிறப்பு மற்றும் கூட்டாண்மை சமூக பொறுப்புணர்வு செயற்பாடுகளுக்கான மெரிட் விருதுகளையும் யூனியன் அஷ்யூரன்ஸ் வென்றுள்ளது.

1. Gold Award for Excellence in the Insurance Sector
2. Merit Award for Excellence in Performance Management
3. Merit Award for Excellence in Corporate Social Responsibility


இதை சாத்தியமாக்கிய உங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

யூனியன் அஷ்யூரன்ஸ்
உங்கள் நாளைய நம்பிக்கை, இன்றே.
www.unionassurance.com

Union Assurance PLC (Company No. PQ 12)

# மரண அறிவித்தல்

## நடராசா கதிர்காமநாதன் (வசாவிளான்)



வசாவிளானை பிறப்பிடமாகவும், பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட நடராசா கதிர்காமநாதன் கடந்த **(08.12.2019)** ஞாயிற்றுக்கிழமை தனது **73**ஆவது வயதில் பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - பூபாக்கியம் தம்பதியினரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் இரத்தினம் தம்பதியினரின் மருமகனும், யோகேஸ்வரியின் பாசமிகு கணவரும், காயத்திரி, கஜந்தினி, கமலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரதீபனின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தவமணி, செல்வ பாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஆறுமுகத்தின் மைத்துனரும், ராஜேஸ்வரி (அவுஸ்ரேலியா), புவனேஸ்வரி, யோகேந்திரன் (ஜேர்மனி), இராசேந்திரன் (கனடா), புவனேந்திரன் (இங்கிலாந்து), விமலேஸ்வரி, அகிலேஸ்வரி (கனடா), விமலேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் கமலாம்பாள், சிந்தாதேவி, சறோஜினிதேவி, சற்குணதேவி, செல்வேந்திராதேவி, செல்வேந்திரராசா (கனடா) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை **(18.12.2019)** புதன்கிழமை பிரான்ஸ் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் **2.00** மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

CS29995(16/17)

**தகவல்:-** இ.பிறேமராசன் (சகலன் - திருநெல்வேலி) - 077 376 0575
ஆ.கந்தசாமி (மைத்துனர் - திருநெல்வேலி)- 077 280 2632
த.ஆறுமுகம் (மைத்துனர் - சில்லாலை) - 077 055 7516

# நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
## ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
### (பதவி வெற்றிடங்கள்)

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளிற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப படிவங்களை சங்கக் காரியாலயத்திற்கு 10/- செலுத்தி பெற்றுக்கொள்ளவும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்வி, பிறப்புச்சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் என்பவற்றின் பிரதிகளை இணைத்து தலைவர், நல்லூர் ப.நோ.கூ.சங்கம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி எனும் முகவரிக்கு 31.12.2019ம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

**01: பதவி - வர்த்தக முகாமையாளர் (106/09)**

சம்பள அளவுத்திட்டம் - 18010 - 22510 / 220 x 10 - 230 x 10)
(4/2018ன் படி)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :**

அ) கூட்டுறவுப் பணியாளர் 10வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறையிலான முகாமை மட்ட அல்லது மேற்பார்வை மட்டப் பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 11வது சம்பளத்திட்ட அப்படிப்பட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது,

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம் அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக் கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் விற்பனை அல்லது பொருள்கள் விநியோ கம் செய்தலும் வழங்குதலும் அல்லது பொருட்கள் ஏற்றுமதி, இறக்குமதி ஆகிய துறைகளில் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவற்றில் முகாமை மட்டப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களிற்கு குறையாத அனுபவம்.

அல்லது,

இ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் சந்தைப்படுத்தல் அல்லது பொருட்கள் வழங்குதலும் விநியோகம் செய்தலும் மற்றும் ஏற்றுமதி, இறக்குமதி ஆகிய துறைகளில் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவற்றில் முகாமை மட்டப் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களிற்கு குறையாத அனுபவம்.

**02. பதவி - விற்பனையாளர் (308/17)**

சம்பள அளவுத்திட்டம் - 14725 -17175 / 115 x 10 -130x10
(4/2018ன் படி)

**தகைமைகள் :**

அ) கூட்டுறவுப் பணியாளர் கணிஸ்தரச் சான்றிதழ்.

அல்லது,

ஆ) 08" வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று (03) வருடங்களிற்கு குறையாத அனுபவம்.

**03. பதவி - வாகனச் சுத்திகரிப்பாளர் (314/16)**

சம்பள அளவுத்திட்டம் - 15135 -17685 / 120 x 10 -135x10
(4/2018ன் படி)

**தகைமைகள் :**

அ) கூட்டுறவுப் பணியாளர் 17வது சம்பளத்திட்டப் பதவியொன்றில் ஒரு (01) வருடத்துக்கு குறையாத அனுபவம்.

அல்லது,

ஆ) 05ம் வகுப்பு கல்விச் சான்றிதழும் நல்ல தேகாரோக்கியம் இருத்தல் வேண்டும்.

**04. பதவி - லொறிச்சாரதி (312/13)**

சம்பள அளவுத்திட்டம் - 16365 -19265 / 140 x 10 -150x10
(4/2018ன் படி)

**தகைமைகள் :**

அ) 05ம் வகுப்பு கல்விச்சான்றிதழும் பஸ் அல்லது லொறி அல்லது இழுவைப் பெட்டியுடன் டிராக்டர் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**குறிப்பு** :- மேற்படி பதவிகளுக்கான வயதெல்லை 18 - 45 வரை.
சங்கத்தால் கோரப்படும் பிணைப்பணம் செலுத்துதல் வேண்டும்.
சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்கழிக்கப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**நல்லூர் ப.நோ.கூ.சங்கம்.**
**தொ.பே. இல 021 222 2143, 021 222 2969**

**17.12.2019**

HOTLINE 0777 17 35 17



IT மற்றும் ஆங்கிலம்
இரட்டை டிப்ளோமா
TVEC
APPROVED CENTRE
புதிய பிரிவுகள் ஆரம்பம்
18-12-2019 - (புதன்)
9 am or 3pm

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான

IT Courses
Dip.in Information Teachnology
Office Automation
PC Application
Microsoft Office
Web Designing
Hardware,Mulitmedia,
Auto CAD,Java,C++,PHP

DMI
COMPUTER EDUCATION
TVEC Reg.No.:P25/0056

NVQ COURSES
ICT -Full Time (Level 4 )
CAA -Full/Part Time
புதிய பிரிவுகள் 2/1/2020 ஆரம்பம்

- இலங்கை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.
- NVQ சான்றிதழ்களை வழங்கிவரும் ஒரேஒரு தனியார் கணினி நிறுவனம்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்

DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
Reading Writing Listening Speaking
Foundation ENGLISH | Diploma in Fluent English Part-I | Diploma in Fluent English Part-II

சர்வதேச ஆங்கிலப்பரீட்சைகள்
IELTS
# Unique Test Tips
# 40 hrs with free 4mock exam
# Latest course Material ( Book 12
IELTS Life Skills
திருமணம் செய்து UK செல்வோருக்கானது
* DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் அருகாமை காளி கோவில் முன்பாக) | கண்டி வீதி, (HNB வங்கி அருகாமை) | No.130, கே.கே.எஸ் வீதி, (NSB வங்கி அருகாமை) | சீரணிச்சந்தி | A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) |
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |

# மரண அறிவித்தல்

## திருமதி சிவக்கொழுந்து இராமலிங்கம்



தோற்றம் 13.02.1923 மறைவு 16.12.2019

புங்குடுதீவு **10**ஆம் வட்டாரம் கண்ணகைபுரத்தைப் பிறப்பிடமாகவும் இல.**165**, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து இராமலிங்கம் நேற்று **(16.12.2019)** திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், இராஜராஜேஸ்வரி, சண்முகராசா, யோகேஸ்வரி, மகேஸ்வரி, கனகேஸ்வரி, ஞானேஸ்வரி, மங்களேஸ்வரி, முருகதாஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் நீலாம்பிகை, தங்கராசா, தெய்வேந்திரம், பத்மராஜசிங்கம், கனகராசா, ஞானசேகரன், புனிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், நாகம்மா, பசுபதிப்பிள்ளை மற்றும் அமிர்தம்மா, காலஞ்சென்ற திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரியும் சயந்தினி - ராசகுமாரன், பபிதாஸ் - ராதிகா, சுபாஸ்கரன் - இரதினி, லோகதர்ஜினி - சிறினிவாசன், நிலானி - புஸ்பராசா, ரஞ்சித்குமார் - கிரிசாந்தி, அபிராமி, மதியழகன், சர்மிளா - சுபாஸ், பிறேமினி- கோபிதாஸ், காந்தரூபன்-தர்ச்சிகா, சுனேக்கா, தனுசியா, பத்மபிரகாஸ், சஜித்திரா, செல்வகாந்- விஹாலினி, கௌசல்யா - பரமேஸ்வரன், விமலகாந் - சிந்துஜா, பவித்திரா - பாரத், துவாரகிஷன், பவின்கிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் நிக்சலா, சதாங்கி, சதுர்ஜா, அக்ஷரன், தருணிகா, ஹேசிகன், சதுவர்ஷன், சுபாங்கி, ஆரதி, மிதுன், வினிக்ஷன், விதுஷிகன், கிசாணிகன், சாணுகா, சஸ்மிகா, பிரவீனன், துவாரகி, கவின், பவிஷா, கம்ஷனா, யதுர்ஷா, ஷோபினி, ஆதீஷன், சஞ்சனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(17.12.2019)** செவ்வாய்க்கிழமை முற்பகல் **09.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.165, ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

CS24211(16/17)

**தொடர்பு: 021 205 4248**

# உளநலமும் சமூக பொறுப்பும்

**இந்தக் கட்டுரையானது குடும்ப புனர்வாழ்வு நிலையம் மற்றும் இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம் இணைந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் உளநல வாழ்வைப் பாதிக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மேற்கொள்ளும் உளநல விழிப்புணர்வு செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக எழுதப்பட்டுள்ளது.**

வருடந்தோறும் ஒக்டோபர் 10 ஆம் திகதியன்று உலக உளநல தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. உலக சுகாதார அமைப்பால் இந்த நாள் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. உலகிலுள்ள பல்வேறு நாடுகளிலும் இலங்கையுட்பட ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு தொனிப்பொருள்களை உள்ளடக்கி இந்த தினத்தை அனுஷ்டிக்கின்றனர். முதன்முதலில் 1992 ஆம் ஆண்டு உலக உளநல மையத்தினால் உலக உளநலத் தினம் கொண்டாடப்பட்டது. இவ்வமைப்பில் 150 நாடுகளுக்கு மேற்பட்ட நாடுகள் அங்கம் வகிப்பதுடன் அவுஸ்திரேலியாவில் இதனை ஒரு வாரத்துக்கு பிரகடனப்படுத்தி கொண்டாடப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

**மனப்பாதிப்பு**

உடலும் மனமும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. உடலுக்கு ஒன்று ஏற்பட்டால் அது மனதைப் பாதிக்கிறது. அதேசமயம் மனதுக்கு ஒன்று என்றால் அது உடலைப் பாதிப்படையச் செய்துவிடுகிறது. இங்கு உளநலம் என்று குறிப்பிட்டு நோக்கும் பொழுது உடலும் மனமும் இணைத்து வைத்தே பார்க்கப்படுகிறது. உடல், உளவியல், சமூக, ஆன்மீக ரீதியான மற்றும் நிதி நல்வாழ்வின் சமநிலை மூலமே முழுமையான ஆரோக்கியம் அடையப்படுகின்றது. ஒரு மனவடுவினை எதிர்கொள்ளும் போது தனிநபர்கள் இந்த முழுமையான சமநிலையில் ஒரு இடையூறினை அனுபவிப்பதுடன் அது மேலும் தனிநபர்கள் குடும்பங்கள் மற்றும் சமுதாயத்தின் உறுப்பினர்கள் ஆகியோரின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

**அனைவருக்கும் ஏற்படும்**

மனவடுவானது பொதுவாக ஒரு தனிநபரின் வாழ்க்கையில் ஏற்பட்ட துக்ககரமான அல்லது அதிர்ச்சிகரமான அல்லது சகித்துக்கொள்ள முடியாத சம்பவம் ஒன்றின் அல்லது பல மூலம் குறித்த நபருக்கு ஏற்படும் உள ரீதியான தாக்கம் ஆகும். துக்ககரமான அல்லது அதிர்ச்சிகரமான அல்லது சகித்துக்கொள்ள முடியாத சம்பவம் என்று குறிப்பிடும் போது அவை அனைவருக்கும் ஏற்பட கூடியதான சம்பவமாகும். உதாரணமாக அன்புக்குரியவர் ஒருவரின் இறப்பு, போர் வடுக்கள், குடும்பப் பிரச்சினைகள், பாலின ரீதியான பிரச்சினைகள் என குறிப்பிட்டு கொண்டே போகலாம். இவை தவிர இன்னும் பல சம்பவங்கள் மக்களின் மனவடுவிற்குறிய காரணங்களாக அமையலாம்.

**உதவி நாடல்**

எவ்வாறாயினும் இவை அனைவருக்கும் பொதுவானவை ஆகும். இப்படியான சம்பவங்களின் போது ஒருசிலர் அவற்றை எதிர்கொள்வார்கள். இன்னும் சிலர் மற்றவர்களின் உதவியை நாடிச் செல்வார்கள். ஆனால் சிலர் அவற்றை தாங்கிக்கொள்ள முடியாமலும், அவற்றை எதிர்த்துப் போராட முடியாமலும் தனக்குள் அனைத்தையும் அடக்கிக்கொள்ள முயற்சிப்பார்கள். அவ்வாறானவர்களே எளிதில் மனவடுவுக்கு ஆளாகின்றார்கள். இப்படி மனவடுவுக்கு ஆளானவர்களை கேலி செய்தல், அவர்களின் பலவீனத்தை தமக்குச் சாதகமாக பயன்படுத்தல் மற்றும் சமூகத்திலிருந்து அவர்களை ஒதுக்குதல் (சமூக அந்தஸ்தினை இழிவுபடுத்தல்) போன்ற மோசமான செயற்பாடுகளை எமது சமூகம் அவர்களுக்கெதிராக மேற்கொள்கிறது. இதனால் சமூகத்தின் மீதான நம்பிக்கை இல்லாதவர்களாகவும் தமது பிரச்சினைகளை நம்பிக்கைக்குரியவர்களிடம் பகிர்ந்து கொள்ள முடியாதவர்களாகவும் அவர்களது நிலைமை இன்னும் மோசமான நிலைக்குச் செல்ல சமூகமே மூலக்காரணியாகும்.



**சமூகத்தின் பொறுப்பு என்ன?**

இவ்வாறு மனவடுவுக்கு ஆளானவர்கள் மனநோயாளியோ அல்லது சிந்தித்து செயற்பட முடியாதவர்களோ அல்ல. அவர்கள் எங்களை போல் சாதாரண மனிதர்களே. அவர்கள் அனுபவித்த அல்லது அனுபவிக்கும் துக்ககரமான சம்பவம் அல்லது சம்பவங்கள் அவர்களை மனதளவில் பலவீனமடையச் செய்து சமூகத்துடன் ஒன்றித்து வாழ முடியாதளவுக்கு பின்னடைவினை எதிர்கொள்ள வைத்துள்ளது. இவ்வாறு உளநலப்பிரச்சினைகளை முகங்கொடுக்கக் கூடியவர்களை அணுகி அவர்களுக்கு நீங்கள் உதவ முன் வருவீர்கள் எனும் நம்பிக்கையினை முதலில் ஏற்படுத்துங்கள். அதாவது அவர்களையும் ஏனையோரை போல் மதித்து அவர்களுடன் பண்பாக உரையாடுங்கள். உளநலம் சார்ந்த சேவைகளை முறையாக பெற்றுக்கொள்ள வழிகாட்டுங்கள். அவ்வாறு உளநலத்துணை சேவைகளை பெறுவதன் தேவையினை உணர்ந்துங்கள்.



**உளவளத்துணை**

உதாரணமாக இலங்கையில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகத்திலும் இலவசமாக உளவளத்துணை சேவையைப் பெற்றுக்கொள்ள கூடிய வகையில் உளவளவாளர்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள் என்பதைத் தெரியப்படுத்தல், அதேபோல் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ளும் உளநலம் சார்ந்த சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் அவர்களுக்கு உதவி செய்தல் போன்றன அவர்களை மிக விரைவாக அவர்களது மனவடுக்களிலிருந்து மீண்டுவர பெரிதும் உதவி செய்யும்.

ஆகவே மனவடுக்களுடன் நாளாந்த வாழ்க்கையைக் கடத்திச் செல்லும் மக்களை இழிவு படுத்தாமல் மற்றும் தமது சொந்தத் தேவைகளுக்கு அடிமைப்படுத்தாமல் அவர்களது உளநல மேம்பாட்டு தேவையறிந்து அவர்களுக்கான உதவிகளை எங்களால் முடியுமானவரை மேற்கொள்வோம்.



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# பிற்போக்கான நகர்வு!

சிலர் தன்னைக் கடத்திச்சென்று பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்திய அதேநேரம் தனது அலைபேசியில் இருந்து தகவல்களைத் திருடினர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்த சுவிஸ் தூதரகத்தின் பெண் அதிகாரி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ளார். பலரும் எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று மேற்குறித்த அதிகாரி தொடர்பான இலங்கை அரசின் விசாரணைகளும், அதன் பின்னரான கைதும் இடம்பெற்றுள்ளன. புருவத்தை உயர்த்தி ஆச்சரியப்படுவதற்கு இதில் ஒன்றும் இல்லை. ஆனால் மிகப்பெரும் தாக்கத்தை இந்தக் கைது ஏற்படுத்த வல்லது என்பதையும் மறுப்பதற்கில்லை.

தூதரக அதிகாரியின் குற்றச்சாட்டை அரச தரப்பினர் ஆரம்பம் முதலே மறுத்துவந்த நிலையில் குறித்த அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார். தூதரக அதிகாரி முன்வைத்த குற்றச்சாட்டு பொய்யானது. பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்து இலங்கை அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தினார் என்பதே இந்தக் கைதுக்கு இலங்கை அரசு கற்பிதம் செய்துள்ள நியாயப்பாடு.

தனது தூதரக அதிகாரி கடத்தப்பட்டு பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டார் என்று சுவிஸ் ஆணித்தரமாக வலியுறுத்தி வருகின்றது. சுவிஸ் மட்டுமல்லாமல் அமெரிக்கா, பிரான்ஸ், இந்தியா, பிரிட்டன் உள்ளிட்ட சர்வதேசச் சமூகமும் இந்த விடயத்தை ஆழமாக உற்றுநோக்கிக் கொண்டுதான் உள்ளன. இத்தகையதொரு பின்னணியில் அந்த அதிகாரியைக் கைதுசெய்துள்ளமையானது ஏற்றுக்கொள்ளக்கூடிய நகர்வு அல்ல.

பொதுவாக தூதகர அதிகாரிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அந்தந்த நாடுகளில் இருதரப்பு மற்றும் சர்வதேச உறவுகளை வெகுவாகவே பாதிக்கும். இதனால்தான் தூதகரம் சார்ந்த எந்தவொரு முடிவை எடுப்பதானாலும் ஆழ்ந்து, அவதானித்து, நன்கு சிந்தித்து போதிய கால இடைவெளியின் பின்னர் அனைத்து நாடுகளும் மேற்கொள்ளுகின்றன. இது எழுதப்படாத வரைவு. தூதரகம் ஒன்றின் வலிமையைப் பறைசாற்றக்கூடிய எடுத்துக்காட்டுக்கள் இன்று தாராளமாக எம்மத்தியில் கொட்டிக் கிடக்கின்றன. விக்கி லீக்ஸின் நிறுவுனர் ஜூலியன் அசாஞ்சே கைதுசெய்யப்பட்ட விடயம் ஆகப்பிந்தியதும், பெரியதுமான எடுத்துக்காட்டு.

இவ்வாறிருக்கையில் சுவிஸ் தூதரக அதிகாரியைக் கைதுசெய்தமையானது பெரும் மடமைத்தனமேயன்றி வேறொன்றுமில்லை. இந்தக் கைது சர்வதேச தளத்தில் பெரும் அதிர்வலைகளை இலங்கைக்கு எதிராக ஏற்படுத்தத்தான் போகின்றது. முதல்கட்டமாக இலங்கை - சுவிஸ் இடையிலான இருதரப்பு உறவு, வர்த்தகம் என்பன இந்தக் கைதால் பெரும் பாதிப்பை எதிர்கொள்ளும். பின்னர் இந்தப் பாதிப்பு இலங்கை - ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான இரு தரப்பு உறவிலும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

சர்வதேச சமூகத்தை இலங்கையில் முதலிடுமாறு அழைப்புவிடுக்கும் கோத்தாபய அரசு, அதற்குரிய சூழ்நிலைகளை இங்கு ஏற்படுத்திக்கொடுக்க முன்வரவேண்டும். அதைவிடுத்து இவ்வாறான கைதுகளும், அதனூடான எச்சரிக்கைகளும் இலங்கைக்கு பின்னடைவையே கொடுக்கும்.

# பிரிந்தவர்கள் வருவார்கள்!

## வினோநோகராதலிங்கம் நம்பிக்கை



யாழ்ப்பாணம், டிசெ.17

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தில் (ரெலோ) இருந்து பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வருவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது என்று தெரிவித்தார் தமிழீழ விடுதலை இயக்கத்தின் முக்கியஸ்தரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வினோநோகராதலிங்கம்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மாவட்டக் கிளையின் விசேட கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் பல சோதனைகளைக் கடந்து வந்த கட்சி. அதன் வளர்ச்சிப் பாதையை ஆராய்ந்தால் அந்த உண்மை புலப்படும். கொள்கைரீதியான முரண்பாடுகள் முன்னரும் உருவாகியபோதும் அவற்றையெல்லாம் களைந்து காலத்தின் தேவைக்கு ஏற்ப வளர்ச்சியடைந்து வந்திருக்கின்றோம். 2010ஆம் ஆண்டும் இவ்வாறான நிலைமை ஒன்று உருவாக்கி சிறிகாந்த விலகிச் சென்றார்.

எமது கட்சியின் உறுப்பினர்கள்; ஆதரவாளர்கள் விருப்பத்துக்கு அமைய மீண்டும் தாய்க் கட்சியில் இணைந்து கொண்டார்.

மக்களோடு மக்களாக இருந்து அரசியல் பயணம் செய்யும் நாம், ஓரணியில் நின்று செயற்பட்டாலே சிறந்த பயணத்தை மேற்கொள்ள முடியும் - என்றார். (எ-04)

# ஹெரோயின் வைத்திருந்த மூவர் கைது

மன்னார், டிசெ.17

ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் மன்னாரில் மூவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையின் போதைப் பொருள் தடுப்பு சிறப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கோந்தைப்பிட்டியில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 450 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவரிடம் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் கடற்படையினரும், பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட தேடுதலில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-111)

# விட்டுக்கொடுப்புக்கு தயார்!

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.17

தமிழ் மக்களின் அபிலாசைகளை, எமது சுயநிர்ணய உரிமையைவென்றெடுப்பதற்குத் தமிழ்த் தேசியக் கட்சி எந்த விட்டுக் கொடுப்புக்கும் தயாராக உள்ளது என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம். கே. சிவாஜிலிங்கம்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் போராட்ட வரலாற்றில் இருந்து வந்த சமூகம். சுயநிர்ணய உரிமைக்கான எமது போராட்டம் இன்னமும் முடியவில்லை. சுயநிர்ணய உரிமையை வென்றெடுத்துக் கூட்டாட்சித் தத்துவத்தின் கீழ் நாம் வாழ்வதற்கான நிலையை ஏற்படுத்துவதே எமது நோக்கம். இந்த நோக்கம் கொண்ட கட்சிகளுடன் நாம் இணைந்து செயற்பட முடியும்.

கடந்த காலப் போராட்ட வரலாற்றில் வரலாறாகிப் போன எமது தலைவர்கள் அனைவரையும் நாம் நினைவு கூருவோம் - என்றார். (எ-104)

# காணியை அபகரித்தால் வீதியில் இறங்க நேரிடும்

## சிவமோகன் எம்.பி. எச்சரிக்கை

மன்னார், டிசெ.17


இராணுவத்தின் பிடியில் உள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். காணிகளை அபகரிக்கும் நடவடிக்கை தொடர்ந்தால் மக்கள் ஜனநாயகப் போராட்டத்தில் இறங்க வேண்டிவரும் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:


பொதுமக்களின் காணிகள் தற்போதும் இராணுவத்தின் பிடியில் உள்ளன. அந்தக் காணிகள் இன்னமும் விடுவிக்கப்படாதுள்ள நிலையில், தற்போதும் பொதுமக்களின் காணிகளை அபகரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்தகாலத்தில் வெண்புறா அமைப்பு இயங்கிய காணி பொதுமக்களுக்குச் சொந்தமான அரச காணி. அந்த 75 ஏக்கர் காணியை அபகரிப்பதற்காக இராணுவம் வேலியிட்டு வருகின்றது என்று தகவல் கிடைத்துள்ளது.

இராணுவத்தினரின் காணி அபகரிப்பு நடவடிக்கைகளுக்கு அரசு முண்டுகொடுக்க முயற்சித்தால் பொது மக்கள் ஜனநாயகப் போராட்டத்தில் இறங்கவேண்டிய நிலைமை ஏற்படும். என்றார். (எ-213)

# மக்களின் ஆதரவு உள்ளவரை கூட்டமைப்பு நிலைத்து நிற்கும்

இந்துமதி





தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தொடர்பாக நிலவிய வதந்திகளுக்கு அதன் தலைவர் முற்றுப்புள்ளி வைத்துள்ளார். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் ஒற்றுமையாகச் செயற்படுவதாகக் கூறிய அவர் கூட்டமைப்பை எவராலுமே உடைத்துவிட முடியாதென உறுதிபடத் தெரிவித்துள்ளார். இதை உறுதிப்படுத்தும் வகையில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர். ஆனால் இடம்பெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தலின்போது ஆசனப்பகிர்வில் பங்காளிக் கட்சிகளிடையே குழப்பம் ஏற்பட்டுவிடாது என்பதை உறுதியாகக் கூற முடியவில்லை. புளொட் மற்றும் ரெலோ கட்சித் தலைவர்கள் இதை சாடைமாடையாகத் தெரிவித்திருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பலமான அரசியல் கட்டமைப்புக்காக உருவாக்கப்பட்டது தமிழ் கூட்டமைப்பு தமிழர்களுக்கு ஒரு பலமான அரசியல் கட்டமைப்பை உருவாக்கும் நோக்குடன் புலிகளின் தலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியது. இலங்கைத் தமிழரசுக்கட்சி அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் ஆகிய ஐந்து கட்சிகளைக் கொண்டதாகக் கூட்டமைப்பு விளங்கியது. காலப்போக்கில் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்க் காங்கிரஸ் கூட்டமைப்பிலிருந்து விலகிக் கொண்டது. எஞ்சியிருந்த நான்கு கட்சிகளுடன் கூட்டமைப்புத் தொடர்ந்தும் செயற்பட்டு வந்தது. பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ் கூட்டமைப்பிலிருந்து தன்னைக் கழற்றிக் கொண்டுவிட்டது. தற்போது இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி, ரெலோ, புளொட் ஆகியன கூட்டமைப்பில் நீடித்து வருகின்றன. இலங்கைத் தமிழரசுக்கட்சி ஈழத்துக் காந்தி என அழைக்கப்பட்ட தந்தை செல்வநாயகத்தால் ஆரம்பிக்கப்பட்ட மகத்துவமானதொரு கட்சியாகும். தமிழர்களின் உரிமைப் போராட்டங்களில் தமிழரசுக் கட்சியின் பங்கு அளப்பரியது. பணத்துக்கும் பதவிகளுக்கும் அடிபணியாது தமிழரசுக்கட்சியை வழி நடத்திய தந்தை செல்வா தமது இறுதிக் காலம்வரை தமிழர்களின் உரிமைகளுக்காக அறவழியில் போராடினார். இதனால் வடக்குக் கிழக்கில் உள்ள தமிழர்கள் தமிழரசுக் கட்சியின்பால் அளப். பெரிய மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கின்றனர். அதன் தற்போதைய தலைவரான மாவை சேனாதிராசாவும் தமிழர்களின் உரிமைகளுக்காகப் பல தியாகங்களைப் புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் தமிழரசுக் கட்சியே முதலிடத்தை வகிக்கின்றது. தொண்டர்களின் எண்ணிக்கையும் அந்தக் கட்சிக்கே அதிகளவில் உள்ளது. உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் கூட்டமைப்பே தமிழர்களின் அரசியல் அடையாளமாகக் கருதப்படுகின்றது. அயல் நாடுகளிலிருந்து வருகை தருகின்ற தலைவர்களும், அரசியல் பிரமுகர்களும் கூட்டமைப்பின் தலைவரைச் சந்தித்துக் கலந்துரையாடுவதை ஒரு வழக்கமாகவே கொண்டிருக்கின்றனர். அவரின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்குவதற்கும் அவர்கள் தவறுவதில்லை. உள்நாட்டில் தமிழர்களின் ஏக பிரதிநிதி என்ற மதிப்பும் கூட்டமைப்புக்கு உள்ளது. கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் எதிர்க் கட்சித் தலைவர் பதவியில் அமர்ந்திருந்தமை இந்த நாட்டுத் தமிழர்களின் அரசியல் வரலாற்றில் ஒரு பொற்காலமாகும்.

### கூட்டமைப்பு தொடர்பான தேவையற்ற பரப்புரைகள்

சமீப நாள்களாக கூட்டமைப்பு உடைந்துவிடப் போகின்றது என்ற வதந்தியை சில தனி நபர்களும் ஊடகமொன்றும் பரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. கூட்டமைப்பு உடைந்துவிட்டால் தாம் நினைத்ததைச் சாதித்துவிட முடியும் என்பதே இவர்களின் எதிர்பார்பாகும். ஆனால் கூட்டமைப்பை உடைத்த எவருமே தமது அரசியல் வாழ்வில் உயர்ச்சி காணவில்லை என்பதுதான் யதார்த்தமாகும்.

கூட்டமைப்பில் இணைந்திருந்தபோது கஜேந்திரகுமார் தலைமையிலான கட்சிக்கு மூன்று நாடாளுமன்ற ஆசனங்கள் கிடைத்தன. கூட்டமைப்பில் இருக்கும் போது கஜேந்திரகுமார், கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியவர்களால் நாடாளுமன்ற வாசலை மிதிக்க முடிந்தது. கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய பின்னர் இவர்களுக்கு என்ன நடந்தது? இறுதியாக இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மிகக் குறைந்தளவிலான வாக்குகளைப் பெறுவதற்கே கஜேந்திரகுமாரின் கட்சியால் முடிந்தது. நாடாளுமன்றத்துக்கு எவருமே தெரிவு செய்யப்படவில்லை.

தமக்கு நியமன அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்கவில்லை என்ற காரணத்துக்காக ஈ.பி.ஆர்.எல்.எல். கட்சியின்தலைவரானசுரேஷ் பிரேமச்சந்திரன் கூட்டமைப்பிலிருந்து விலகிச் சென்று கூட்டமைப்புக்கு எதிரானவர்களுடன் இணைந்து கொண்டார். நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் அந்தக் கட்சி படுதோல்வியைத் தழுவியது.

எந்தவிதமான அரசியல் அனுபவமும் இல்லாத விக்னேஸ்வரனை அவர் உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பதவி வகித்த ஒரே காரணத்துக்காக கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் வடக்குத் தமிழ் மக்களின் விருப்பத்தை அறியாது வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் பதவியில் அமர்த்தினார். ஆனால் விக்னேஸ்வரனால் மாகாண சபையில் குழப்பங்கள் ஏற்பட்டனவே தவிர மக்களுக்குரிய சேவைகள் எவையும் உரிய வகையில் இடம்பெறவில்லை. அது மட்டுமல்லாது தம்மைப் பதவியில் அமர்த்திய தமிழரசுக் கட்சிக்கும் கூட்டமைப்பின் தலைவருக்கும் துரோகம் இழைக்கின்ற வகையில் நடந்து கொண்டார். தமது அரசியல் தகுதியை ஆராய்ந்து பார்க்காது அவர் நடந்து கொண்டதால் தமது செல்வாக்கை இழந்த நிலையில் அவர் காணப்படுகின்றார். அவரால் ஆரம்பிக்கப்பட்ட அவரது அரசியல் கட்சியும் அவருக்குக் கை கொடுக்கவில்லை. தற்போது கூட்டமைப்புக்கு எதிரானவர்கள் விக்னேஸ்வரன் தலைமையில் கூட்டமைப்புக்கு எதிரான அணியொன்றை உருவாக்குவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தமிழ் மக்கள் சந்தர்ப்பவாதிகளை நன்கு அறிந்து வைத்துள்ளனர். கூட்டமைப்பு உடைந்து போவதற்கு அவர்கள் ஒருபோதுமே அனுமதிக்க மாட்டார்கள் மக்களின் ஆதரவு இருக்கும் வரையில் கூட்டமைப்பு நிமிர்ந்து நிற்கவே செய்யும்.

## ஆசிரியருக்கான கடிதம்


# உமையாள்புரம் குப்பை மேடா?

உமையாள்புரம் 164ஆம் கட்டைப்பகுதியில் பிரதேச சபையினரால் குப்பைகள், நகரக் கழிவுகள் அனைத்தும் கொட்டப்படுகின்றன. இன்னொருசாரார் குப்பைகளுடன் மலக் கழிவுகளையும் இங்கே கொட்டுகின்றனர். இதனால் இந்தப் பகுதி துர்நாற்றம் வீசுவதோடு வாந்திபேதி, டெங்கு போன்ற நோய்களும் தீவிரமாகப் பரவி வருகின்றன. நோய்களின் தாக்கத்தினால் இந்தப் பகுதி மக்கள் 8 ஆண்டுகளாகப் பெரும் துயரைச் சுமக்கின்றனர். குப்பை கொட்டும் பகுதியில் உள்ள நன்னீர் ஆறு இடம்பெயர்வுக்கு முன்னர் விவசாயத்துக்கும் கால்நடைகளுக்கும் குடிநீராகவும் பயன்படுத்தப்பட்டது. தற்போது குறிப்பிட்ட ஆறு குப்பைகளினாலும் மலக்கழிவுகளினாலும் நிரம்பி ஆற்றுநீர் பாவிக்க முடியாத நிலையில் உள்ளது. குப்பை கொட்டும் பகுதியின் அருகில் ஏ9 வீதி உள்ளது. தெற்குப் பக்கம் 500 மீற்றர் தொலைவில் பாடசாலை, இந்துக் கோயில் என்பன உள்ளன. வடக்குப் புறமாக 500 மீற்றர் தொலைவில் ஆணையிறவு உப்புக் கூட்டுத்தாபனம் உள்ளது. இவைகளைக் கவனத்தில் கொள்ளாமல் கண் மூடித்தனமாக ஒரு கிராமத்தைக் குப்பை மேடாக்குவது ஏற்றுக்கொள்ள முடியாதது. உரிய அதிகாரிகள் இந்த விடயத்துக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்துச் செயற்பட வேண்டும்.

*- நலன் விரும்பிகள்*

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.



## 'வாய் பிளந்த' வீதி சாரதிகள் அச்சம்

யாழ்ப்பாணம், டிசெ. 17

ஒட்டுசுட்டானிலிருந்து முத்துஐயன்கட்டு செல்லும் வீதி மழையால் பாதிப்படைந்து வெடித்து சற்றுக் கீழிறங்கிய நிலையில் காணப்படுகின்றது.

அண்மைய மழையை அடுத்து இது மோசமாகிவிட்டது. "இந்த வீதியூடாகப் பயணிக்கும்போது வீதியில் விழுந்து விடுவோமோ என்ற அச்சம் ஏற்படுகின்றது "என்று வாகனங்களின் சாரதிகள் தெரிவிக்கின்றனர். மோட்டார் சைக்கிளில் பயணிப்பவர்களும் இதையேதான் கூறுகின்றனர்.

எனவே வீதியை உரிய தரப்பினர் விரைவில் சீர்படுத்தவேண்டும் என்று அந்த வீதியூடாகப் பயணிப்பவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-500)

# கூட்டமைப்பிலிருந்து உடைந்த 9 கட்சிகள்



**யாழ்ப்பாணம், டிசெ. 17**

**ரெலோவிலிருந்து வெளியேறிய கட்சியின் முக்கியஸ்தர் என்.சிறீகாந்தா தனது புதிய கட்சிக்கான பெயர் குறித்த அறிவிப்பை விடுத்ததை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய மற்றும் வெளியேற்றப்பட்டோர் எனத் தம்மை அடையாளப்படுத்தும் கட்சிகளின் எண்ணிக்கை ஒன்பதாக அதிகரித்துள்ளது.**


ஜனாதிபதித் தேர்தல் முரண்பாடு காரணமாக கட்சியின் பொறுப்பிலிருந்தும் அங்கத்துவத்திலிருந்தும் கட்சியின் தலைமை சிறீகாந்தா உட்பட்ட யாழ்ப்பாணப் பிரதிநிதிகள் சிலரை இடைநிறுத்தியிருந்தது.

அதனை அடுத்து ஊடகச் சந்திப்பை நடத்தியிருந்த சிறீகாந்தா புதிய கட்சி குறித்த அறிவிப்பை விடுத்திருந்தார். இருப்பினும் பெயர், சின்னம் குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள தங்களுடைய கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தமது கட்சி தமிழ்த் தேசியக் கட்சி என்ற வகையில் செயற்படும் என்ற அறிவிப்பை விடுத்துள்ளார்.

சிறீகாந்தா தலைமையில் புதிதாகத் தொடங்கியுள்ள தமிழ்த் தேசியக் கட்சியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் 9 கட்சிகள் ஊடாகத் தங்களை அடையாளப்படுத்தியுள்ளனர்.

கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.), சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி, பொ.ஐங்கரநேசன் தலைமையிலான தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், அனந்தி சசிதரன் தலைமையிலான ஈழ மக்கள் சுயாட்சிக் கழகம், வி.எஸ்.சிவகரன் தலைமையிலான தமிழரசுக் கட்சி ஜனநாயக அணி, எஸ்.வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்குத் தமிழர் கட்சி, எஸ்.ஜெயானந்தமூர்த்தி தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி, சிறீகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி என உருவாகியுள்ளன. (ஒ.5,22)





## வெள்ளத்தில் நீந்தும் மைதானம்

விசுவமடு,டிசெ.17

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு விசுவமடு கிழக்குப் பகுதியில் குளத்துக்கு அருகில் கட்டப்பட்ட விளையாட்டு அரங்கம் தற்போது வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுகின்றது.

விசுவமடு கிழக்கு அட்டைக்குளத்தின் பின்பக்கமாக வலைப்பந்தாட்ட விளையாட்டு அரங்கம், நாடாளு மன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் கம்பெரலிய நிதி உதவியில் அமைக்கப்பட்டது.

இந்த விளையாட்டு மைதானம் அட்டைக்குளத்தின் பின்பக்கமாகக் காணப்படுவதுடன், சுற்றிவர மதிலும் அமைக்கப்பட்டுள்ளது. வெள்ளம் வீதியால் வடிந்தோடி குளத்துக்குச் சென்றடையும் பாதையை மறித்தே விளையாட்டரங்குக்குச் சுற்றுமதில் கட்டப்பட்டுள்ளது அதனால் வெள்ளம் விளையாட்டு மைதானத்தினுள்ளும், அருகில் உள்ள மக்களின் வீட்டுக்காணி களுக்குள்ளும் தேங்கியுள்ளது.

சரியான திட்டமிடல் இல்லாத நிலையில் இந்த விளையாட்டு அரங்கம் கட்டப்பட்டுள்ளதாலும், அட்டைக்குளம் சீரமைக்கப்பட்டுள்ளதாலுமே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (க-ரி3)



## வடமாகாணக் கல்வியை முன்னேற்ற வாருங்கள்!

### வடக்கு கல்வி அமைச்சின் செயலர் அழைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 17

வடக்கு மாகாணத்தின் கல்வித் தரம் பின்தங்கியுள்ளது. இதை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு கல்வியியலாளர்கள் முன்வர வேண்டும் என்று வடக்கு மாகாண விளையாட்டு மற்றும் கல்வி அமைச்சின் செயலர் இ.இளங்கோவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அண்மையில் நடைபெற்றது. அதில் சிறப்புரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.




இலங்கையைப் பொறுத்தவரையில், கல்வி என்ற ஒன்றுதான் அபிவிருத்திக்கான சாவியாகக் காணப்படுகின்றது. இலங்கை அதிக சனத்தொகையில், இளம் வயதினரைக் கொண்ட நாடாகவுள்ளது. எனவே கல்வியை முன்னோக்கிக் கொண்டுவருவதன் மூலமே அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும் என்று மேலும் தெரிவித்தார். நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமியும் ஏனைய விருந்தினர்களாக திறந்த பல்கலைக் கழக பீடாதிபதிகளும் கலந்துகொண்டிருந்தனர். (த)

## நிர்வாகம் தெரிவு

வவுனியா,டிசெ.17

வன்னிப்பட்டதாரிகள் சங்கத்தின் பொதுக்கூட்டமும், நிர்வாகசபைத் தெரிவும் கடந்த சனிக்கிழமை வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தின் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி நூற்றுக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் கலந்து கொண்டனர். இதில் சங்கத்தின் பிரதான போசகராக பேராசிரியர் மோகனதாஸ், தலைவராக ம.ஆனந்தாரஜ், செயலாளராக த.ரஜனிக்காந்த், பொருளாளராக ச. பார்த்தீபன் ஆகியோர் உட்பட 32 பேர் அடங்கிய புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.(க)



## தனியிசையில் மூன்றாமிடம்

அண்மையில் நடைபெற்ற தேசிய மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டியில் ஆண்களுக்கான பிரிவு தனி இசை நாட்டார் நடனப் போட்டியில் மருதங்கேணி செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவன் எ.அபினாஸ் மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டார். (க-70)



## மீனாட்சிபுரத்தில் டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.17

யாழ்ப்பாணம் மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட ஜே.81 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள கொட்டடி மீனாட்சிபுரம் பகுதியில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு வேலைத்திட்டம் கடந்த வாரம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகரசபையும், யாழ். பிரதேச செயலகமும் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்தன.

யாழ்ப்பாணத்தில் டெங்குத் தொற்றின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பொது அமைப்புக்கள் விழிப்புர்ணவு மற்றும் சிரமதானச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன.

அதற்கமைவாக யாழ். மாநகர சபையின் பிரதி மேயர் து.ஈசன் மற்றும் யாழ்.பிரதேச செயலர் சுதர்சன் ஆகியோரின் தலைமையில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இடம்பெற்றன.

இதில் பிரதேச மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர், கிராம அலுவலர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக மட்ட அமைப்பினர், சனசமூக நிலையத்தினர், மாதர் சங்கத்தினர், விசேட அதிரடிப்படையினர் ஆகியோர் பங்குபற்றினர்.

பிரதேசத்தில் காணப்பட்ட உக்கும் உக்காத கழிவுப்பொருள்கள் மாநகர சபையின் கழிவகற்றும் வாகனங்களின் மூலம் அகற்றப்பட்டன. (க-104)


### ராஜபக்ஷக்களை

# 20 ஆண்டுகளுக்கு அசைக்க முடியாது

### அம்மானின் ஆருடம்

மட்டக்களப்பு, டிசெ.17

**கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான இந்த அரசு தொடர்ந்தும் 20 ஆண்டுகளுக்கு ஆட்சியமைக்கும் என்று தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள்பிரதியமைச்சருமானவிநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தெரிவித்தார்.**



கல்குடாப் பிரதேசத்திலுள்ள தமிழர் ஐக்கியசுதந்திர முன்னணியின் ஆதரவாளர்களுக்கான அரசியல் விழிப்புணர்வுக் கூட்டம் வாழைச்சேனையில் முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தியின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. இதில் பங்கேற்று மேற்கண்டவாறு அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

20 ஆண்டுகளுக்கு இந்த அரசின் ஆட்சிதான். கோத்தாபய ஜனாதிபதியாக இந்தத் தடவையும் அடுத்த தடவையும் தொடர்வார். ரணில் அரசை மக்கள் வெறுத்துள்ளனர்.

ரணில், மைத்திரி அரசை கூடுதலாக வெறுத்தவர்கள் சிங்கள மக்கள். இலங்கையைப்பாதாளத்தில்தள்ளியவர்கள் ரணில், மைத்திரி தான் என்று நான் நினைக்கின்றேன். இவர்களது ஆட்சியில் குண்டுவெடிப்பு, பொருளாதார சீர்கேடு, தற்கொலைகள் கூடுதலாகக் காணப்பட்டன. பல பிரச்சினைகளைச்சந்தித்து விரக்தியடைந்த மக்கள் கோத்தாபயவை ஜனாதிபதியாகக்கொண்டுவந்துள்ளனர். இந்த அரசை திறம்பட பயன்படுத்த வேண்டும். சிங்கள மக்கள் தனித்து வாக்களித்து கோத்தாபயவை வெற்றி பெறவைக்காவிட்டால், அமீரலி உங்களை அடித்திருப்பார். நீங்கள் பாசிக்குடா கடலில் விழுந்து இருப்பீர்கள். ஹிஸ்புல்லாஅடித்திருப்பார்.கல்லடிக்கடலில் விழுந்து இருப்போம். ரிசாட் அடித்திருப்பார். மன்னாரில், ஹக்கீம்காலால் உதைத்திருப்பார். முஸ்லிம் இனத்து வேசம் கதைக்கின்ற அனைத்து முஸ்லிமும்சஜித்தோடுதிரிகின்றனர். கடந்த காலத்தில்விட்ட தவறை இனிவிடாமல் இருந்தால்தான் எமது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க முடியும். உரிமைக்காகப்பேசமுடியும். அபிவிருத்திகளைக்கொண்டுவர முடியும். தமிழ்த்தேசியக்கூட்டமைப்புநாடாளுமன்றஉறுப்பினர்களை கோடீஸ்வரர்களாகக் கொண்டு வந்து விட்டு நாம் பிச்சைக்காரர்களாக உள்ளோம்.

இரண்டுதரம்நாடாளுமன்றம்சென்ற யோகேஸ்வரனுக்கு நான்கு கோடி ரூபா பெர்மிட் வழங்கப்பட்டுள்ளது. அதனைச்சுருட்டிவிட்டார். அதை இவர் யாருக்கும் செலவு செய்யமாட்டார். துவிச்சக்கர வண்டிக்கும் வழியில்லாமல் இருந்தவர் தற்போது மூன்றுவாகனங்களுடன் சந்தோசமாக உள்ளார். நாங்கள் கனரக ஆயுதத்தைக் கொண்டுபோர்நடத்தியும்தனிநாட்டை பெறமுடியவில்லை.' சம்பந்தன் போய்க் கதைத்தா நாட்டைத் தரப்போகின்றார்கள்? இன்னும் எவ்வளவு காலத்துக்கு மக்களை ஏமாற்றுவது? வாக்களிப்புவிகிதத்தைக்கூட்டவேண்டும். மட்டக்களப்புமாவட்டத்தில்தமிழர்கள் 60சதவீதத்துக்குமேல்வாக்களிப்பதில்லை. ஆனால் முஸ்லிம்கள் 98 சதவீதம் வாக்களிப்பார்கள். மட்டக்களப்புமாவட்டத்தில் 75 சதவீதம் தமிழ், 25 சதவீதம்தான் முஸ்லிம். ஆனால் 75 சதவீதத்துக்கும் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான். 25 சதவீதத்துக்கும் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான். ஏனெனில் வாக்களிப்பு வீதம் போதுமானதாக இல்லை - என்றார்.

## ஊடகவியலாளர்களுக்கு சுதந்திரம் வழங்குங்கள்!

### மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவைத் தலைவர் கோரிக்கை

தலைமன்னார், டிசெ. 17

"ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் சுதந்திரமாகச் செயற்பட வழி வகை செய்ய வேண்டும். சிலவேளைகளில் ஊடக சுதந்திரம் முடக்கப்படுவதும், ஊடக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதும் கடந்த காலத்தில் கண்டுகொண்ட கசப்பான அனுபவங்கள்" என்று மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவைத் தலைவர் செந்தமிழருவி மஹா.தர்மகுமாரக் குருக்கள் தெரிவித்தார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு 'மாற்றத்தின் ஆக்கபூர்வமான முகவர்கள்' எனும் தொனிப்பொருளில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களில் ஒரு பகுதியினரான ஊடகவியலாளர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு மன்னாரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊடகத்தை ஏன் தர்மம் என்று சொன்னார்கள் என்றால் அது பக்கச்சார்பற்ற தன்மையில் செயற்படக்கூடியது என்பதற்காகவே. ஒருசில ஊடகங்கள் பக்கச்சார்பாகவும் இன்னும் சில ஊடகங்கள் நடுநிலைமையாகவும் செயற்பட்டு வருகின்றன.

இப்பொழுது நடுநிலைமையாக இருந்து செயற்படும் ஊடகங்கள் மட்டுமன்றி ஊடகவியலாளர்களும் பலவிதமான பிரச்சினைகளுக்கு உள்ளாகி வருகின்றனர். அதிகமான ஊடகவியலாளர்கள் கட்சி சார்ந்தோ, அரசியல் சார்ந்தோ செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். சிலவேளைகளில் ஊடக சுதந்திரம் முடக்கப்படுவதும், ஊடக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றமையும் நாம் கடந்த காலத்தில் கண்டுகொண்ட கசப்பான அனுபவங்கள்.

இருந்தும் இவற்றையும் தாண்டி சில ஊடகங்கள் துணிச்சலுடன் செயற்பட்டு வருகின்றன- என்றார். (த-60)

## ரூ.8000 கோடி நட்டம்

இந்த வருடம் இலங்கை மின்சார சபைக்கு 8 ஆயிரம் கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதென, மின்சக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். நட்டத்தில் இயங்கும் 19க்கும் அதிகமான அரச நிறுவனங்களை இலாபம் ஈட்டும் நிறுவனங்களாக மாற்ற திட்டமிடவுள்ளோம் என்று தெரிவித்துள்ளார். (ஒ,5)

## திருப்பாவை விழா

வவுனியா,டிசெ.17

வவுனியா பூந்தோட்டம் சிறி லக்ஸ்மி சமேத நரசிங்கர் ஆலய திருப்பாவை விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 5 மணிக்கு ஆரம்பமாகும். தினமும் திருப்பாவை பூசை இடம்பெற்று, திருப்பாவைப் பாடல்கள் இடம்பெறும். (க-222)

# ரெலோவின் யாழ். மாவட்ட அமைப்பாளராக நிரோஷ்!

## உதவி அமைப்பாளராக ஈசன்

யாழ்ப்பாணம், டிசெ. 17

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளராக வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாண மாவட்ட உதவி அமைப்பாளராக யாழ்ப்பாண மாநகர சபையின் துணை மேயர் துரைராசா ஈசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.


நிரோஷ்


ஈசன்

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளரை ஆதரிப்பது தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவை ஆட்சேபித்தும்தலைமைக்குழுவின் முடிவுகளுக்கு எதிராகவும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் யாழ்ப்பாண மாவட்டக் கிளையில் சச்சரவுகள் ஏற்பட்டிருந்தன.

அதனைத்தொடர்ந்து கட்சியின்தலைமைக்குழுவின் முடிவுக்கு எதிராகச் செயற்பட்டனர் எனத் தெரிவித்து தமிழீழ விடுதலை இயக்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர், யாழ்ப்பாண மாவட்ட உதவி அமைப்பாளர் உள்ளிட்டவர்களைக் கட்சியின் பொறுப்புக்களிலிருந்து கட்சித் தலைமை இடைநிறுத்தியிருந்தது.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அந்த நிர்வாகக் குழுக் கூட்டத்திலேயே தமிழீழ விடுதலை இயக்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளராக வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட உதவி அமைப்பாளராக பிரதி மேயர் துரைராசா ஈசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ,5,22)

## ஆய்வு மாநாடு!

அம்பாறை,டிசெ.17

தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாச்சாரப் பீடத்தின் எட்டாவது சர்வதேச ஆய்வு மாநாடு நாளை புதன் கிழமை நடைபெறும்.

'ஆய்வு மற்றும் புத்தாக்கத்தினூடாக சமுதாய மேம்படுத்தல்' எனும் தலைப்பிலான மாநாடு, பல்கலைக்கழக ஒலுவில் வளாக, கலை, கலாச்சார பீட கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

மாநாட்டில் அரசியல் பொருளாதாரம், கலை, கலாசாரம், சமூகவியல், வரலாறு, புவியியல்,தகவல் தொழிநுட்பம், ஆங்கிலம் உட்பட பல்வேறு தலைப்புக்களின் கீழ் உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆய்வாளர்களால் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. (க-30)

## முன்னாள் போராளி சாவு!

யாழ்ப்பாணம், டிசெ. 17

கிளிநொச்சியில்கடந்த மாதம் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த முன்னாள் போராளி ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

புதியகொலனி மாங்குளத்தைச் சேர்ந்த விஸ்வலிங்கம் பிரபா (வயது -37) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர்செலுத்திச்சென்ற மோட்டார்சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதி விபத்து இடம்பெற்றது என்றும் கடந்த 20 நாள்களாக அவர்சிகிச்சை பெற்று வந்தார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (கு-105)

## விண்ணப்பம் கோரல்

காரைநகர்,டிசெ.17

இலங்கை தொழிற் பயிற்சிஅதிகாரசபையால் காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், தையல், அலுமினியம் பொருத்துநர், உணவுமற்றும்குளிர்பானம் பரிமாறுபவர், அறைப் பராமரிப்பாளர், வெதுப்பாளர், கட்டட நிர்மாண உதவியாளர், நீர்க்குழாய்பொருத்துநர், மரவேலைஆகியதொழில் பயிற்சிநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தத் தொழிற்பயிற்சி நெறிகளைக் கற்க விரும்புவோர் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று நிலைய முகாமையாளர் வே.ஸ்ரீகுகன் அறிவித்துள்ளார்.

பயிற்சிகளை நிறைவு செய்யும் அனைவருக்கும் தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும். மேலதிக தகவல்களுக்கு 0212 211793, 0710318862, 0771289302 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன்தொடர்புகொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## 3 கிராமங்களில் டெங்கு ஒழிப்பு

வவுனியா,டிசெ.17

வவுனியா பூந்தோட்டம், சிறிநகர், பெரியார்குளம் கிராமங்களை உள்ளடக்கியதான டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

கிராமங்களின் இளைஞர்கள், பெண்கள், பொது அமைப்பினர், சுகாதாரப்பிரிவினர் இணைந்து குழுக்களாகப் பிரிந்து, மூன்று கிராமங்களையும் உள்ளடக்கி சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

அனைத்து வீடுகளுக்கும் சென்று டெங்கு நுளம்பு பரவும் வகையில் சூழலை வைத்திருந்தவர்களுக்கு அறிவுரைகளை வழங்கியதுடன், கழிவுப் பொருள்களையும் அகற்றினர்.

வவுனியாவில் கடந்த சில நாள்களாக நீடித்து வரும் மழையுடனான காலநிலையைத் தொடர்ந்து டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ளமையை அடுத்து சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது. (க-110)



## அம்பாந்தோட்டையை பசுமையாக்குவேன்!

### கோத்தாபய சபதம்



அம்பாந்தோட்டை,டிசெ.17

இலங்கையின் முதலாவது பசுமை நிறைந்த மாவட்டமாக அம்பாந்தோட்டையை உருவாக்குவோம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

அம்பாந்தோட்டைக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, அம்பாந்தோட்டையில் இயங்கும் கழிவுப்பொருள் மீள் சுழற்சி ஆலைக்குச் சென்றிருந்தார்.

"அம்பாந்தோட்டை மாவட்டம் முழுவதும் இயற்கை விவசாயத்தை ஊக்குவித்து இரசாயன உரப்பயன்பாட்டை முற்றிலுமாக நீக்க முனைகின்றோம். இதன் மூலம் ஆரோக்கியமான இலங்கையை உருவாக்க முடியும் என்று நம்புகிறேன். நாடு முழுவதும் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்" என்று அவர் அங்கு தெரிவித்தார்.

ஜனாதிபதியுடன், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் சென்றிருந்தார். (க-104)

## வணிகர் கழகத்துடன் முன்னணி சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ.17

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்துக்கும், தமிழ்த் தேசிய முன்னணியினருக்கும் இடையே சந்திப்பு ஒன்று அண்மையில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாணம் வணிகர் கழகத் தலைவர் ஜெ.ஜனக்குமார், இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாணம் வணிகர் கழகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது என்று தெரிவித்தார்.

பண்டிகைக்கால நடைபாதை விற்பனை, நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் நீண்டகாலமாக உரிமம் பெறப்படாது நடத்தப்படும் கடைகள் என்பன போன்ற விடயங்கள் முக்கியமாக இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டன.

இந்த விடயங்கள் தொடர்பாக யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வரிடம் கலந்துரையாடியுள்ளோம். யாழ்ப்பாணம் மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள், ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி உறுப்பினர்களுடனும் விரைவில் சந்தித்துப் பேசவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாணம் வணிகர் கழகத் தலைவர் ஜெ. ஜனக்குமார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் வி. மணிவண்ணன், யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-104)

# பாதாளக் குழுக்களின் கொட்டம் அடக்கப்படும்

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.17

**பா**தாள உலகக் குழுக்கள் மற்றும் போதைப் பொருளை முற்றாக ஒழிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

வெயாங்கொடவில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பாதுகாப்புச் செயலராகக் கடமையாற்றும்போது முன்னாள் பாதுகாப்புச் செயலரும், தற்போதைய ஜனாதிபதியுமான கோத்தாபய ராஜபக் ஷ வின் முன்மாதிரியான நடவடிக்கைகளைக் கவனத்தில் கொண்டு செயற்படுகின்றேன்.

நாட்டு மக்களுக்குப் பெரும் தலையிடியாக அமைந்துள்ள பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதைப் பொருளை இல்லாது ஒழிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் - என்றார். (எ)

# உண்ணிக் காய்ச்சல் தென்மராட்சியில் பரவல்

## சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

சாவகச்சேரி, டிசெ. 17

தென்மராட்சியில் உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் பொதுமக்கள் தனிநபர் சுகாதாரத்தைத் தவறாது கடைப்பிடிக்குமாறு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர்.

டெங்குத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த மக்கள் தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளைத் துப்புரவு செய்வதில் ஈடுபட்டுள்ளனர். பற்றைகள் மற்றும் காணிகளைத் துப்புரவு செய்யும் போது அவற்றில் காணப்படும் உண்ணிகள் ஆடைகளில் ஒட்டியிருந்து கடிக்கின்றமையால் காய்ச்சல் ஏற்படுகிறது என்று முறைப்பாடுகள் பதிவாகின்றன.

துப்புரவுப் பணியில் ஈடுபடுவோர் வேலைகள் முடிவடைந்ததும் தாம் அணிந்துள்ள ஆடைகளைக் களைந்து கழுவுமாறும் நன்கு குளித்த பின்னர் தோய்த்து உலர்ந்த ஆடைகளை அணியுமாறும் சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இந்த வாரத்தில் 15 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் வரணியைச் சேர்ந்தவர்கள் என்றும் உண்ணிக்காய்ச்சலைத் தடுக்க சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# பஸ் சேவையின்மையால் பயணிகள் அவதி

தலைமன்னார், டிசெ 17



மன்னார் நகரிலிருந்து ரயில் நிலையத்துக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையோ தனியார் போக்குவரத்துச் சங்கமோ இணைப்பு சேவை மேற்கொள்ளா ததால் பிரயாணிகள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர் என்று முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

முன்னைய காலங்களில் தலைமன்னாரிலிருந்துகொழும்புக்கும், கொழும்பிலிருந்து தலைமன்னாருக்கும் சேவையில் ஈடுபட்டு வரும் இரவு மற்றும் அதிகாலை ரயில் சேவைக்காக இலங்கைப் போக்குவரத்துச் சபை மன்னார் நகரிலிருந்து இணைப்பு சேவை ஒன்றை மேற்கொண்டு வந்தது என்றும் பிரயாணிகள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பிலிருந்து மன்னாருக்கு ரயில்வே பிரயாணக் கட்டணம் 250 ரூபாவாக இருக்க சுமார் மூன்று கிலோமீற்றர் தூரமுள்ள மன்னார் ரயில்வே நிலையத்திலிருந்து மன்னார் நகருக்கு ஓட்டோவுக்கு 200 ரூபா தொடக்கம் 250 ரூபா வரை கட்டணம் அறவிடுகின்றனர் என்றும் ரயில்வே பிரயாணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதே இடத்திலிருந்த நகருக்குச் செல்ல பேருந்துக் கட்டணம் 19 ரூபாவே என்று கூறும்பயணிகள்இதற்குத்தீர்வாக உடனடியாகப் பேருந்து இணைப்புச் சேவையை வழங்கப்படவேண்டும் என்று கோரியிருக்கின்றனர். இது பற்றி மன்னார் பிரஜைகள் குழுவிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இணைப்புச் சேவை நடத்த வேண்டும் என்றுவடக்குமாகாண இ.போ.ச. சாலையின் பணிப்பாளர், மன்னார் இ.போ.சபை சாலை முகாமையாளர் மற்றும் மன்னார்மாவட்டச்செயலர் ஆகியோரை கேட்டுக்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது - என்று தெரிவிக்கப்பட்டது. (த-60)

## நத்தாருக்காக விற்பனைக் கூடம்

யாழ்ப்பாணம், டிசெ.17

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு கூட்டுறவுச் சங்கங்களின் உள்ளூர் உற்பத்தியாளர் விற்பனைக் கூடம் ஒன்று யாழ். நகரில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன், இந்த விற்பனை கூடம் வீரசிங்கம் மண்டப வளாகத்தில் அடுத்த வாரத்தில் ஆரம்பித்து வைக்கப்படும்.

உள்ளூர் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திப் பொருள்கள் இந்தக் காட்சிக் கூடத்தில் வைத்து சந்தைப்படுத்தப்படும்.

கடந்த தீபாவளித் திருநாளை முன்னிட்டு இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திப் பொருள்கள் சிறப்புக் காட்சிக் கூடத்தில் வைத்து சந்தைப்படுத்தப்பட்டு மிகுந்த வரவேற்பை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-17)

### யாழ். பல்கலை அறிவியல் நகர் வளாகத்தில்

## உலர் வலய விவசாயம் பற்றி சர்வதேச ஆராய்ச்சி மாநாடு




யாழ்ப்பாணம், டிசெ. 17

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி அறிவியல் நகர் விவசாய பீட அரங்கில் 'பசுமை மற்றும் நீல உணவுப் பாதுகாப்பை நோக்கி' என்ற முதன்மைத் தொனிப் பொருளில் இந்தப் பிரதேசத்தை மையப்படுத்தியதாக உலர்வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆராய்ச்சி மாநாடு நடைபெறவுள்ளது.

2015ஆம் ஆண்டு தொடக்கம் இது வருடாந்தம் நடைபெறுகின்றது.

இந்தமுறை நான்காவது உலர்வலய விவசாயத்துக்கான சர்வதேச ஆராய்ச்சி மாநாடாக எதிர்வரும் 19ஆம், 20ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இவ்வாராய்ச்சி மாநாட்டில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரி வாழ்நாள் பேராசிரியர் க. கந்தசாமி கலந்து சிறப்பிக்கவுள்ளார். கௌரவ விருந்தினராக கலாநிதி ரஞ்சனி ஹெட்டியாராச்சி (விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்) கலந்து சிறப்பிப்பதோடு, 'ஏற்றுமதிச் சந்தையை நோக்கிய கோழி வளர்ப்பின் வளர்ச்சி' எனும் தொனிப்பொருளில் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

மாநாட்டின் முதன்மைப் பேச்சாளராக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் கே. ரி.பார்த்திபன், தமிழ்நாட்டிலிருந்து வருகை தருவதோடு 'இந்தியாவில் தொழிற்றுறை விவசாய காடு வளர்ப்பின் மதிப்பீட்டுச் சங்கிலி' எனும் தலைப்பில் முதன்மைப் பேருரையாற்றவுள்ளார்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்களான மு. கார்த்திகேயன், வே. அம்பேத்கார் மற்றும் இலங்கை வயம்ப பல்கலைக் கழக விவசாய பீடாதிபதியும் சிரேஷ்ட பேராசிரியருமான உதித் கே. ஜயசிங்க முதலிகே ஆகியோருடன் இணைந்து பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் கே.டீ. டபிள்யூ. நந்தலால் ஆகியோர் பேருரைகளை ஆற்றவுள்ளனர்.

ஆராய்ச்சி மாநாட்டில் இலங்கை மற்றும் சர்வதேச ஆய்வாளர்களால் பயிராக்கவியல், விவசாய உயிரியல், விலங்கு விஞ்ஞானம், மண், சூழல் மற்றும் பொறியியல் விஞ்ஞானம், உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், நீர், பொருளாதாரம் மற்றும் அறிவூட்டல் ஆகிய உபதொனிப்பொருள்களில் 74 ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

கடந்த வருடங்களில் நடைபெற்ற மாநாடுகளில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளின் முழுமையான விவரணத்தைக் கொண்டதாக விவசாயபீடத்தின் ஆண்டுச் சஞ்சிகையின் 'உலர்வலய விவசாயம்' இன் 5ஆம் இதழும் மாநாட்டில் வெளியிடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# சனசமூக நிலையத்துக்கு புதிய கட்டடம்

வவுனியா, டிசெ.17



வவுனியா நகர சபையின் நிதிப்பங்களிப்பில் சின்னப்புதுக்குளம் துர்க்கா சனசமூக நிலையத்துக்கான புதிய கட்டடம் நேற்றுத் திறக்கப்பட்டது.

சனசமூகத் தலைவர் த. பூலோகசிங்கம் தலைமையில், நகரசபைத் தலைவர் கெ இ.கௌதமனால் கட்டடம் மக்கள் பாவனைக்குத் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன், நகரசபை உபதலைவர் சு. குமாரசுவாமி, செயலாளர் தயாபரன், நகரசபை உறுப்பினர்கள், ஊழியர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர். (க-ரி4)

# மழை ஓய்ந்தும் வீதியில் வெள்ளம்



புதுக்குடியிருப்பு,டிசெ.17
முல்லைத்தீவு புதுக்குடியிருப்புத் தேராவில் குளவீதியில், மழை ஓய்ந்தும், இன்னமும் வெள்ளம் தேங்கியுள்ளது. சரியான திட்டமிடல் இல்லாத வீதிச் சீரமைப்புக் காரணமாக, வீதியை மூடி வெள்ளம் தேங்கியுள்ளது. அதனால் வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
130 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் தேராவில் கிராமத்துக்கான இந்த வீதி, 2017 ஆம் ஆண்டு 5 இலட்சம் ரூபா செலவில் சீரமைக்கப்பட்டிருந்தது. ஆயினும் சரியான முறையில் வீதியை அமைக்காததால் வெள்ளம் வீதியில் தொடர்ந்தும் தேங்கியுள்ளது. தற்போது இந்த வீதியால் மண் கொண்டு செல்லும் டிப்பர்கள், உழவு இயந்திரங்கள் தொடர்ச்சியாக பயணிப்பதால், வீதியால் மக்கள் பயணிக்க முடியாத அவல நிலைமை ஏற்பட்டுள்ளது. (க-ரி3)

# கண்காட்சியும் கலை நிகழ்வும்

கொடிகாமம்,டிசெ.17
வடக்கு மாகாண முன்பள்ளிகளின் கண்காட்சியும், கலை நிகழ்வும் நாளை புதன்கிழமையும் மற்றும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் முற்பகல் 9.30 தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறும்.
வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி திணைக்கள மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்வர்.
(க-159)

# விக்கியை கைது செய்!



கொழும்பு, டிசெ. 17
வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் க. வி. விக்னேஸ்வரனுக்கு எதிராகப் பொலிஸ் தலைமையகம் மற்றும் குற்ற விசாரணைத் திணைக்களத்திடம் சிங்கள தேசிய அமைப்பு முறைப்பாடு செய்துள்ளதுடன் அவரைக் கைது செய்யுமாறும் கோரியுள்ளது.

இலங்கையை பௌத்த நாடாக அடையாளப்படுத்துவதற்கு எவருக்கும் அதிகாரம் இல்லை என்று வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலர் நாயகமுமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.
மகாவம்சம் போன்ற வரலாற்று நூல்கள் பாளி மொழியில் எழுதப்பட்ட புனைகதைகள் என்று அவர் சுட்டிக்காட்டியிருந்தார். இலங்கைப்பௌத்த நாடு என்று அர்த்தப்படுத்துவது முற்றிலும் தவறான விடயம்.
பாளிமொழிமூலம்புனைகதைகளை உருவாக்கி பௌத்த தேரர்களால் சிங்கள சமூகத்துக்குத் தவறான விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.
சிங்கள வரலாறுகள் முதல் பௌத்த தேரர்கள் வரை போலியான புனை கதைகளை கட்டியெழுப்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் இலங்கையில் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் எந்தவொரு சிங்கள பௌத்தரும் வசிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்திருந்தார்.
விக்னேஸ்வரனின் கருத்துக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருக்கும் சிங்கள தேசிய அமைப்பு, இது தொடர்பில் பொலிஸ் தலைமையகம் மற்றும் குற்ற விசாரணை திணைக்களத்திடம் முறைப்பாட்டைப் பதிவு செய்திருக்கிறது.
இது தொடர்பில் கருத்துரைத்துள்ள அந்த அமைப்பு, இலங்கை எந்தவொரு விதத்திலும் சிங்களவர்களின் பூர்வீகம் அல்லவென்றும், இலங்கையின் பூர்வீக மக்கள் தமிழர்களே என்ற காரணத்தால் இலங்கையில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ள கருத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம்.
தேசிய நல்லிணக்கத்துக்கும் நாட்டு மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்கவும் செயற்படும் விக்னேஸ்வரனை உடனடியாகக் கைது செய்ய வேண்டும். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கிறோம் என்று குறிப்பி ட்டுள்ளது.
(ஒ-5)

# 222 பேர் குருதித்தானம்

தெல்லிப்பழை,டிசெ.17
கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் ஆகியன இணைந்து முன்னெடுத்த குருதித்தான முகாமில் இந்த வருடம் 222 பேர் குருதித்தானம் வழங்கியுள்ளனர். 11 ஆவது தடவையாக நடத்தும் குருதித்தான முகாம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் 100 குருதிக் கொடையாளர்கள் பங்கேற்றனர். இந்த வருடம் இடம்பெற்ற மூன்று குருதித்தான முகாம்களில் 222 குருதிக் கொடையாளர்கள் பங்கேற்றனர். அத்துடன் கடந்த வருடம் 208 குருதிக்கொடை யாளர்கள் பங்கேற்றனர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.
(க-222)





படையினரின் ஏற்பாட்டில் நத்தார் பண்டிகையை முன்னிட்டு கரோல் நிகழ்வு, யாழ். புனித மரியாள் பேராலயத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது. நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, கத்தோலிக்க அருட்தந்தையர்கள், யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி, யாழ்.இந்திய துணைத்தூதுவர், முப்படைகளினதும் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். (க)

### வெள்ளை வான் சாரதிகள் இருவரும்

# 'கொள்ளையர்கள்'

## சி.ஐ.டி. கண்டறிவாம்

கொழும்பு, டிசெ. 17

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவின் ஏற்பாட்டில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தம்மை வெள்ளை வானின் சாரதிமார் என்று அறிமுகப்படுத்திய இருவரும் கொள்ளையர்கள் என விசாரணையில் கண்டறிந்துள்ளோம் என சி.ஐ.டியினர் தெரிவித்துள்ளனர். சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்ட அவர்களிடம் 72 மணிநேரம் விசாரணை நடத்தப்பட்டது. விசாரணையின் போதே மேற்படி விடயத்தைக் கண்டறிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. முன்னாள் அமைச்சர் ராஜித நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு இருவருக்கும் சுமார் 30 லட்சம் ரூபா பேரம் பேசப்பட்டுள்ளது. கொழும்பு செட்டியார் தெருவில் மூன்றரைக் கோடி, ஜா எலையில் 75 லட்சம் ரூபா, கந்தானை மற்றும் கொட்டாஞ்சேனையில் தலா 10 லட்சம் ரூபா கொள்ளைச் சம்பவங்களுடன் இவர்கள் தொடர்புபட்டவர்கள். இருவரில் ஒருவர் 'உண்டியல் அத்துல' என்ற மோசடிப் புள்ளி. இந்த விவரங்களை சி.ஐ.டி. கண்டறிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-5)

# மாற்றுத் தலைமைக்கு குறி வைக்கும் சங்கரி!

## அறிக்கையில் பூடகமாக தெரிவிப்பு



*யாழ்ப்பாணம், டிசெ.17*

*தென்னிலங்கை, சர்வதேச சக்திகள் மதிக்கும் ஒரே தமிழ்த் தலைமை நான்தான். நாங்கள் அனைவரும் கூட்டணியில் ஒன்றிணைந்து செயற்பட்டு, போர் நடத்திய தரப்பிடம் எமது கோரிக்கைகளை முன்வைத்து எமது மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வைக் காண்போம்.*

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி.

அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காலத்துக்குக் காலம் தேர்தல் காலங்களில் ஒற்றுமை பற்றிப் பேசுவார்கள். தேர்தல் முடிந்தவுடன் பங்காளிக் கட்சிகளுக்குப் படுகுழி வெட்டுவார்கள். விக்னேஸ்வ ரனுக்கும் இதுதான் நடந்தது.

நான் பகிரங்கமாக விக்னேஸ்வரனைத் தலைமை தாங்கிக் கட்சியை நடத்த வாருங்கள் என்று அழைப்பு விடுத்தேன். நீங்கள் கைகாட்டும் நபரை கட்சியின் செயலாளர் நாயகமாக்குவேன் என்றும் கூறியிருந்தேன். அவர் அதை ஏற்கவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் வந்திருந்தால் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு மாற்று அணி உருவாக்கப்பட்டிருக்கும். அதைச் செய்யாத நிர்வாகத் திறமையற்ற, ஆளுமையற்ற தன்மை போன்ற விமர்சனங்களை இன்று அவர் எதிர்கொள்கின்றார். பெரும்பான்மை மக்கள் அனுமதிக்கும் தீர்வைத்தான் வழங்க முடியும் என்று பிரதமர் கூறியுள்ளார். பெரும்பான்மை மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒரே தமிழ்த் தலைமை என்ற நிலையில் நாம் காலத்துக்குக் காலம் நடுநிலையுடன் தெரிவித்த கருத்துக்களை இன்றும் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த மதகுருமார்கள், புத்திஜீவிகள் மற்றும் சாதாரண மக்களும் ஏற்றுக் கொள்கிறார்கள். பெரும்பான்மைச் சமூகத்துடன் பேசக்கூடிய வல்லமையுள்ள ஜனநாயக அமைப்பு நாம் மட்டும்தான். ஏனையோர் ஒவ்வொரு கால கட்டத்திலும் பக்கம் சார்ந்து செயற்பட்டவர்கள். அவர்களால் நியாயமான கருத்தை முன்வைத்துப் பேரம் பேச முடியாது. அனைவரும் கூட்டணியில் ஒன்றிணைந்து செயற்பட்டு, போர் நடத்திய தரப்பிடம் எமது கோரிக்கைகளை முன்வைத்து எமது மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வைக் காண்போம். என்றுள்ளது. (எ-6)

# முல்லைத்தீவில் பஸ் மீது தாக்குதல்

முல்லைத்தீவு,டிசெ.17

முல்லைத்தீவு சாலைக்குச் சொந்தமான இ.போ.ச பஸ் மீது நேற்று முன்தினம் மாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதில் பஸ்ஸின் கண்ணாடிகள் நொருக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் இருந்து 6. மணிக்கு முல்லைத்தீவு நோக்கிப் புறப்பட்ட பஸ் 7.30 மணியளவில் பரந்தன் சந்தியில் பஸ் நின்றபோது, பஸ்ஸின் பின்பக்கக் கண்ணாடி மீது கற்கள் மற்றும் கொட்டன்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பஸ்ஸின் மீது தாக்குதல் நடத்தியவர்களைப் பஸ்ஸின் சாரதி துரத்திப் பிடித்த போது, அவரை ஒரு குழுவினர் மீட்க முயற்சித்துள்ளனர். சாரதியையும் தாக்கியுள்ளனர். தாக்குதல் நடத்தியவரையும், பயணிகளையும் சாரதி கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளார். பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேவேளை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்பவர்கள் பரந்தன் பகுதியில் இரவு நேரங்களில் அச்ச உணர்வுடனேயே செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் பஸ் தரிக்கும் இடத்தில் மாலை நேரங்களில் குழுவினர் சிலர் அட்டகாசத்தில் ஈடுபடுகின்றனர் என்று தினமும் பயணிக்கும் பயணிகள் தெரிவித்தனர். (க-ரி3)

### ஐயப்ப வழிபாடு

வவுனியா,டிசெ.17

வவுனியா தோணிக்கல் சேக்கிழார் வீதி சிறி நாகாத்தம்மாள் ஆலயத்தில் ஹரிஹரசுதன் ஆனந்த ஐயப்ப சுவாமி மண்டல விரத பூசை எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் பூசைகள் ஆரம்பமாகும். (க-222)

# கிராமியப் பொருளாதாரத்தை அனைவரும் கட்டியெழுப்புவோம்!

## அங்கஜன் எம்.பி அழைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 17

"கிராமியப் பொருளாதாரம் எழும்பும் போது நிச்சயமாக தனிமனித வருமானம் கூடும். வருமானம் கூடும்போது வாழ்க்கைத் தரம் கூடும். கிராம அலுவலர் பிரிவுகளில் இடம்பெறும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் அரசியல் வாதிகளால் திணிக்கப்பட்டவையாக அல்லாமல் சமூகத்தில் கிராமியப் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பக் கூடியவையாக இருக்க வேண்டும்."

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கயன் தெரிவித்தார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் தொடர்பாடல் அலுவலகம் சங்கத்தானையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது: தமிழ் மக்கள் விரும்பியோ விரும்பாமலோ இந்த அரசு ஆட்சிக்கு வந்துள்ளது. தற்போதைய ஜனாதிபதி ஒரு சில மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றார். அபிவிருத்தி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கடந்த நல்லாட்சிக்கு வாக்களித்தோம். எதுவும் நடக்கவில்லை. இந்த 5 வருடங்களில் எமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் பல வேலைத் திட்டங்களைத் தொடங்கவுள்ளோம். வரிக் குறைப்பால் பொருள்களின் விலைகள் குறைவடைந்துள்ளன. இதனூடாக சம்பளம் அதிகரிக்காவிட்டாலும் செலவு குறையும். கிராமியப் பொருளாதாரம் எழும்பும்போது நிச்சயமாக தனிமனித வருமானம் கூடும். வருமானம் கூடும்போது வாழ்க்கைத் தரம் கூடும். அதனூடாக எங்களின் மக்களுக்கு முன்னேற்றம் கிடைக்கும். எங்கள் பிள்ளைகளுக்கு நல்ல கல்வியைப் பெற்றுக் கொடுக்க முடியும். அதனூடாக அடுத்த சந்ததியினரை உருவாக்க முடியும். வறுமைக்கோட்டுக்குள் இருப்பவர்களை முன்னேற்ற வேண்டும். ஒருலட்சம்பேருக்குவேலைத் திட்டங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (து-159)

# 1015 ஏக்கர் வயல் அழிவு

முல்லைத்தீவு,டிசெ.17

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் பெய்த மழை காரணமாக ஆயிரத்து 15 ஏக்கர் வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளன என்று கமநல அபிவிருத்தித்திணைக்களப் புள்ளி விவரம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த மாதத் தொடக்கத்தில் பெய்த கடும் மழை காரணமாக பல குளங்கள் வான்பாய்ந்தும், உடைப்பெடுத்துடன், வால்கட்டும் வெட்டிவிடப்பட்டன. அதனால் வயல்களில் வெள்ளம் தேங்கியுள்ளன. முள்ளியவளை, அளம்பில், குமுழமுனை, கொக்குத்தொடுவாய், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, ஒலுமடு, பாண்டியன்குளம், துணுக்காய், உடையார்கட்டு போன்றகமநலதிணைக்களங்களின் கீழ் உள்ள விவசாய நிலங்கள் வெள்ளத்தால் அழிவடைந்துள்ளன.

464 விவசாயிகளின் ஆயிரத்து 15 ஏக்கர் விவசாய நிலம் வெள்ளத்தால் அழிவடைந்துள்ளது. அத்துடன் ஆயிரத்து 708 விவசாயிகளின் 6 ஆயிரத்து 99 ஏக்கர் விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்று மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-ரி3)

# 25 மாணவர்களுக்கு பிறந்த நாள் பரிசுகள்

வடமராட்சி,டிசெ.17



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்திட்டத்தில், வடமராட்சி தொண்டமானாறு கெருடாவிலைச் சேர்ந்த 25 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. கனடாவில் பிறந்த நாளைக் கொண்டாடும் புரந்தரி என்பவரின் பிறந்த நாள் பரிசாக, அவரது பெற்றோர் உபகரணங்களுக்கான நிதியுதவியை வழங்கினர். (க-222)

# நாடாளுமன்றத் தேர்தலில் யானையிலேயே போட்டி!

## திகாம்பரம் உறுதி

கொழும்பு, டிசெ. 17

நாடாளுமன்ற தேர்தலில் நாம், ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிடுவோம். எமது மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் ஒற்றுமையாக இருந்து வாக்களித்தது போல, நாடாளுமன்றத் தேர்தலிலும் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் எடுத்துக் காட்ட வேண்டும். இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பி.திகாம்பரம் தெரிவித்தார்.

லிந்துல லசிக்க கலாசார மண்டபத்தில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் மக்கள் சந்திப்பு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. அதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மலையக அபிவிருத்திக்கான அரசுக்குப் பொறுப்பு கூற வேண்டிய நிறுவனமான 'அதிகார சபையை' பெற்றுக் கொடுத்துள்ளேன். அது வெறுமனே பெயர்ப் பலகையில் இருப்பதாக மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். எமது காலத்தில் பெற்றுக் கொடுக்கப்பட்ட பிரதேச சபைகளை அனுபவிப்பது போல, ஏனைய விடயங்களையும் அனுபவிக்க அமைச்சரவை அனுமதி அளித்திருந்தது. அதை நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். நல்ல விடயங்கள் நடக்கும் போது எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம், வரவேற்போம், பாராட்டுவோம். மக்களுக்கு அநீதி நடக்கும் என்றால் அதைப் பார்த்துக் கொண்டு இருக்க மாட்டோம்.



ஜனாதிபதித் தேர்தலில் நாம் ஆதரவு வழங்கிய சஜித் பிரேமதாஸ தோல்வி கண்டிருந்தாலும் நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி தோல்வியடையவில்லை. எமது மக்கள் ஒற்றுமையாக இருந்து புதிய ஜனநாயக முன்னணிக்கு பெரும்பான்மை வாக்குகளை அளித்திருந்தார்கள். நாடளாவிய ரீதியில் 55 இலட்சம் வாக்குகளைப் பெற்றிருந்த சஜித் பிரேமதாஸ மீது மக்களுக்கு அனுதாபம் ஏற்பட்டுள்ளது. அவரின் செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் நாம் புதிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிடுவோம். எமது மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் ஒற்றுமையாக இருந்து வாக்களித்தமை போல, நாடாளுமன்றத் தேர்தலிலும் தமது ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் எடுத்துக் காட்ட வேண்டும். இதில் தமிழ் முற்போக்கு கூட்டணி வேட்பாளர்கள் அனைவரும் வெற்றி பெற வாக்களித்து உதவ வேண்டும். நாம் வெற்றி பெற்று அமைச்சர்களாகி மக்களுக்கான சேவைகளைத் தொடர்ந்து முன்னெடுப்போம். - என்றார். (ஓ.5)



# இளவாலையில் டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 17

யாழ்ப்பாணம் இள்வாலை வருத்தப்படாத வாலிபர் சங்க அங்கத்தவர்கள் டெங்கு ஒழிப்புப் பணியில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டனர்.

இளவாலை சித்திரமேழிச் சந்தியில் இது ஆரம்பித்து பிரதான வீதியின் ஓரங்களில் இருக்கும், டெங்கு நுளம்பு பெருக ஏதுவான பொருள்களைச் சேகரித்தனர். தவிர, உக்கக்கூடிய பொருள்கள் நீர் தேங்காத வகையில் சிதைக்கப்பட்டு அப்புறபடுத்தபட்டமையுடன், உக்காத பொருள்கள் தரம்பிரித்து சேகரிக்கப்பட்டு பிரதேச சபையினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் ஒலி பெருக்கி மூலமாக கிராம மக்களுக்கும், விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, உக்காத, நீர்தேங்கக் கூடிய பொருள்களைச் சேகரித்து பிரதேச சபையினரிடம் ஒப்படைக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. சங்கத்தினர் சேகரித்த கழிவுகளை எதிர்வரும் வியாழக்கிழமை பிரதேச சபையினர் சேகரிக்கவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-222)

# அதிக மண் அகழ்வால் காத்திருக்கிறது ஆபத்து

## - எச்சரிக்கின்றார் சிவசந்திரன்

யாழ்ப்பாணம், டிசெ.17



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிளவில் மணல் அகழப்படுமானால் தரைக்கீழ் நீர் முழுவதும் உவர் நீராக மாறும் அபாயம் உள்ளது. இந்த விடயத்தில் உரிய தரப்பினர் அதிக கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக் கழக ஓய்வு பெற்ற புவியியல்துறை பேராசிரியர் ஆர்.சிவசந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது

மண் ஏற்றுவதற்கான நடைமுறைகளை அரசு தளர்த்தியுள்ள நிலையில் மண் அகழ்வு கட்டுப்பாட்டின்றி அதிகரித்துள்ளது. இந்தச் செயற்பாடு தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, புத்தளம், பரந்தன் இவை ஒரு கோட்டின் மேல் சுண்ணாம்புப் பாறையால் ஆனது.

தரைக்கீழ் நீர் வளம் யாழ்ப்பாணத்தில் சிறப்பாக இருந்ததாலேயே இங்கு அதிகம் குடியிருப்புக்கள் தோற்றம் பெற்றன. மண் வளம் குன்றினால் நீர் வளமும் இல்லாது போகும். மன்னாரில் பூநகரி, யாழ்ப்பாணத்தில் தீவகம் போன்ற இடங்களில் மண்வளம் அதிகமாகக் காணப்படுகின்றது.

ஒரு அங்குல மண் உருவாகுவதற்கு 100 ஆண்டுகள் தேவை. மண் அகழ்ந்தால் அது விரைவாக விளையும் என்று கூறப்படும் கருத்துத் தவறு. மண் கட்டுமானத்துக்குத் தேவை என்றபோதும், அதைக் கட்டுப்பாட்டுடன் அகழ வேண்டும்.

மணற்காட்டில் மணல் இல்லாது போகின்றது. இதன் உடனடி விளைவாக நல்ல தண்ணீர் இல்லாது போகும்.

இந்த விடயத்தில் அரசியல்வாதிகள் உடனடியாகத் தலையிட வேண்டும். இல்லாவிட்டால் மண் தொடர்ச்சியாக அள்ளப்பட்டு, நன்னீர் வளம் குறைந்து எமது பிரதேசம் நினைத்துப் பார்க்க முடியாத அளவு பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும். - என்றார். (எ)

# நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.17

ஈரோஸ் அமைப்பின் நிறுவுநர்களில் ஒருவரும், தமிழர் அரசியல் சார்பான ஆய்வு நூல்கள், நாவல்கள் போன்றவற்றின் ஆசிரியருமான . அருட்பிரகாசத்தின் நினைவு நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூரில் உள்ள 'யூரோவில்' மண்டபத்தில் நடைபெறும். யாழ்ப்பாணம் முகாமையாளர் அமைப்பு ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில், தமிழர் அரசியலில் அருட்பிரகாசத்தின் பங்களிப்புக்கள் தொடர்பான கருத்துரைகள் இடம்பெறும். (க)



# விதை வெங்காயம் 50 கிலோ 25ஆயிரம்ரூபா

அச்சுவேலி, டிசெ .17


யாழ்ப்பாணம் மாவட்டத்தின் மரபு வழி செய்கைக்கான விதை வெங்காயத்தின் விலை 50 கிலோ 22 ஆயிரம் ரூபா தொடக்கம் 25 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

அத்துடன் விவசாயிகள் காலபோக வெங்காய பயிர்ச் செய்கைக்காக விதை வெங்காயத்தைக் கொள்வனவு செய்வதற்கு அலைந்து திரிய வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் மரபு வழி பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தும் வெங்காயம் பொருத்தமான அளவு சேமித்து களஞ்சியப்படுத்தி வைக்காத நிலையிலேயே விதை வெங்காயத்துக்குத் தட்டுப்பாடும், விலை அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளது.

வெங்காயப் பயிர்ச் செய்கையின் இடைப்போகமான ஜுலை - ஓகஸ்ட் மாதங்களில் நடுகை செய்து களஞ்சியப்படுத்தி வைத்த வெங்காயமே காலபோக பயிர்ச் செய்கைக்கான விதை வெங்காயமாகப் பயன்படுத்தப்படுவது வழமை.

இந்த வருடம் ஏற்பட்ட காலநிலை முரண்பாடு மற்றும் கடும் வறட்சியால் வெங்காயப் பயிர்ச் செய்கை பெருமளவில் பாதிப்படைந்தது. வெங்காய விளைச்சல் வீழ்ச்சியடைந்தது. இதனால் விதை வெங்காயத்துக்கு விலை அதிகரிப்பும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (க-11)



# டெங்கு விழிப்புணர்வு தெரு நாடக ஆற்றுகை

யாழ்ப்பாணம்,டிசெ .17

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் அனுசரணையுடன், டெங்கு தொடர்பான விழிப்புணர்வு தெரு நாடக ஆற்றுகை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களின் அக்கறையின்மையால் நீர் தேங்கக்கூடிய பொருள்களான ரயர், இளநீர் கோம்பை, ஐஸ்கிறீம் கப்,திறந்த வெற்றுக் போத்தல்கள், பியரின் போன்றவற்றில் மழை காலங்களில் வெள்ள தேங்கக் கூடிய வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. அதனால் டெங்கு நுளம்புகள் பெருகி டெங்குத் தொற்று ஏற்படுகிறது.

இது தொடபில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தெரு நாடக ஆற்றுகை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சங்கானை பஸ் நிலையத்தில் டெங்கு விழிப்புணர்வு நாடகம் நடைபெற்றது. இதில் பொது மக்கள்,சபை உறுப்பினர்கள்,கலைஞர்கள் கலந்து கொண்டனர். இதனை அடுத்து வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் தெரு நாடக ஆற்றுகை தொடர்ச்சியாக இடம்பெறும். (க-7)

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 26.08.1948 | 16.12.2019 |

### திருமதி அருந்ததி குணபாலசிங்கம்

(தலைவர் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானம்,
தம்பளாவத்தை, அளவெட்டி)

தம்பளாவத்தை, அளவெட்டி மேற்கு, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்ததி குணபாலசிங்கம் நேற்று அதிகாலை (16.12.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கலாநிதி அருட்கவி சீ.விநாசித்தம்பிப்புலவர் (ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தான ஸ்தாபகர்) - அன்னம் தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - பூமணி தம்பதிகளின் மூத்த மருமகளும், காலஞ்சென்ற த.குணபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், கீதாகரன் (கனடா), ஞானசுதன் (யா/ தொழில்நுட்பக் கல்லூரி, சாரதி), மாலா (பிரான்ஸ்), கவிநிருபா ஆகியோரின் அன்புத் தாயாரும், குலமகள் (கனடா), கிருபா, நந்தன் (பிரான்ஸ்), ஆனந்தராசா (ஆசிரியர், யா/ ஸ்ரீவேலுப்பிள்ளை வித்தியாலயம், வசாவிளான்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,வினுஷன், மதுஷன், யதுஷா, ரமாஜினி கோவர்த்தனா, மனுவித்தியா, நிருபன், நிதர்ஷன், அக்ஷயா, லிம்ஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஸ்ரீரங்கநாயகி, சிவலிங்கராணி (பிரான்ஸ்), ஸ்ரீதரன் (கனடா), சிவகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரராஜசிங்கம் (கனடா), கனகாம்பிகை, காலஞ்சென்ற திருச்செகநாதன் (ஆசிரியர்) மற்றும் ஜெயமலர் (இராதா -கனடா), மதிவதனி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுக் கொட்டுப்பனை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அளவெட்டி மேற்கு,**
**அளவெட்டி.** (CS/29989)(11,17)

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

**கீதன் - 51 490 91753, சுதா - 077 555 2890**

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி))
## பொது அறிவித்தல் - 2020

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொது மக்கள் / தொழில் நிறுவன உரிமையாளர்கள் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இந்நடைமுறைகளை பின்பற்ற தவறுவோர்மீது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**1) வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2020**

சபை எல்லைக்குள் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்பவர்கள் 2020 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரத்தை 2020.03.31 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**2) சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் - 2020**

1533/16 ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் விதந்துரைக்கப்பட்ட தொழில்களை அல்லது வியாபாரத்தை மேற்கொள்பவர்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் அல்லது ஏற்கனவே சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றவர்கள் உரிமம் காலாவாதி திகதிக்கு மூன்று மாதத்திற்கு முன் விண்ணப்பித்து புதுப்பித்துக் கொள்ளுதல் வேண்டும்.

**3) ஆதன வரி செலுத்துதல் - 2020**

எமது சபையின் உப அலுவலகங்கள் மல்லாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி, காங்கேசன்துறை (மாவிட்டபுரத்தில்) ஆகிய இடங்களில் சேவையை வழங்கி வருகின்றது. மல்லாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி, காங்கேசன்துறை (மாவிட்டபுரத்தில்) பிரதேசங்களில் வசிப்பவர்கள் அந்தந்த உப அலுவலகங்களிற்கு சென்று 2020.03.31 ஆம் திகதிக்கு முன் ஆதன வரியை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் 31.01.2020ஆம் திகதிக்கு முன்னர் ஆதனவரியை செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். 2020.03.31 ஆம் திகதிக்கு முன் வரி செலுத்த தவறின் 15% தண்டமும் வரியும் அறவிடப்படும்.

**4) வீடமைப்பு நாடு நகர அபிவிருத்தி கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரம் அறிவித்தல்**

i) வலி வடக்கு பிரதேச எல்லைக்குள் புதிய கட்டடங்கள் அமைத்தல், எல்லைச்சுவர் அமைத்தல், கொங்கிறீட் தூண் இட்டு முட்கம்பி வேலி அமைத்தல், கிணறுகள், குழாய்க் கிணறுகள் அமைத்தல், கட்டிடங்கள் விரிவாக்கல், திருத்துதல், புதுப்பித்தல் என்பன பிரதேச சபையின் அனுமதி பெற்று செயற்பட வேண்டும். சபையின் அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் எதுவாகினும் அனுமதியற்ற கட்டிடங்களாக கருதி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் அல்லது நட்டஈடு இன்றி அகற்றப்படும்.

ii) கட்டட அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டு ஒரு வருடத்திற்குள் கட்டிமுடிக்கப்படாத கட்டடங்கள் தொடர்பாக காலநீடிப்பு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

iii) அனுமதி பெற்று அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பாக சபைக்கு அறியத்தந்து உரிய கட்டிட அமைவுச்சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**5) துவிச்சக்கரவண்டி உரிமம், மிருக வரி உரிமம் பெற்றுக்கொள்ளல் -2020**

2020 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி, மிருக வரி உரிமங்களை 2020.03.31 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**6) விளம்பரங்களை காட்சிப்படுத்தல்**

சபையின் நிர்வாக எல்லைக்குள் வீதிகளின் இருமருங்காகவும் வீதிக்கு மேலாகவும் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ள விளம்பரங்களிற்கு பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அனுமதியை பெற்றுக்கொள்ளாத வர்த்தகநிலைய உரிமையாளர்கள்/ நிறுவனங்கள்/ முகவர் நிறுவனங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சகல விளம்பரங்களும் அகற்றப்படும்.

**7) முச்சக்கரவண்டி தரிப்பிடம்**

சபையின் எல்லைக்குள் முச்சக்கரவண்டி சேவையை வழங்குபவர்கள் அதற்கென ஒதுக்கப்பட்ட முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் தரித்து நின்று சேவையை வழங்குவதுடன் பிரதேச சபையில் உரிய கட்டணத்தை செலுத்தி பதிவு செய்யப்படலும் வேண்டும்.

**8) மரக்கறி, மீன், இறைச்சி விற்பனை தடைசெய்தல்**

வலி வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் உள்ள சந்தைகளிலிருந்து 500m தூரத்திற்குள் வர்த்தக நிலையங்கள், பாதையோரங்கள் என்பவற்றில் மரக்கறி, மீன், கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

**9) படவரைஞரைப்பதிவு செய்தல் / புதுப்பித்தல் - 2020**

2020 ஆம் ஆண்டுக்கு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் படவரைஞராக பதிவு செய்தவர்களும் 2020.01.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள அல்லது புதுப்பித்துக்கொள்ள முடியும்

**10) பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.**

சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப்பொருட்களை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்கலனில் கழிவுப்பொருட்களை சேகரித்தும், மேலதிக கழிவுகளை அகற்றுவதற்கு எமது சபையின் உப அலுவலகங்களில் உரிய கட்டணத்தை செலுத்தினால் கழிவுகள் அகற்றப்படும் என்பதோடு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**11) பொது சுகாதாரம் பேணல்**

சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள் / பராமரிப்பாளர்கள் பற்றைகளைத் துப்பரவு செய்து பொது சுகாதாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**12) இந்து மயானங்களில் சடலங்களை எரியூட்டுவதற்கு அல்லது புதைப்பதற்கு கட்டணம் அறவிடப்படும்.**

இந்து மயானத்தில் சடலங்களை எரியூட்டுவதற்கு அல்லது புதைப்பதற்கு கட்டணமாக ரூபா1000.00 அறவிடப்படும். இக்கட்டணத்தை அலுவலக வேலை நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை உரிய உப அலுவலகத்திலும் சனி,ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில் உரிய உப அலுவலகத்துக்குரிய பொது நூலகத்திலும் செலுத்தி அனுமதியினை பெற்றுக்கொள்ள முடியும். அனுமதிக்காக மேற்குறித்த இடங்களில் விண்ணப்பத்தை பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் இறப்பு தொடர்பாக கிராம சேவகர் அல்லது வைத்திய அதிகாரியின் கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**13) வீதி ஓரங்களில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குதல் தொடர்பாக**

சபைக்கு சொந்தமான வீதிகள் மற்றம் வீதி அபிவிருத்தி சபை, வீதி அபிவிருத்தித்திணைக்களம் ஆகிய திணைக்களங்களின் பரிபாலனத்துக்குட்பட்ட வீதிகளில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குகின்ற தனியார் நிறுவனங்கள் பிரதேச சபையில் முறைப்படி அனுமதி பெற்ற பின்பே தமது சேவையை ஆரம்பித்தல் வேண்டும்.

**பிரதேச சபையால் வழங்கப்படும் சேவைகள்**

**1) குடிநீர் வழங்கல் சேவை**


எமது பிரதேச சபைக்குட்பட்ட பொது மக்களிற்கான குடிநீர் விநியோகம் 1 லீற்றர் ரூபா 0.50 சதம் என்ற கட்டண அடிப்படையில் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் செலுத்துவதன் மூலம் குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**2) கனரக வாகன சேவைகள்**

மோட்டக்கிரேன்ரர், பக்கோ, கலிபௌசர், றோலர் போன்ற கனரக வாகன சேவைகளை பெறுவதற்கு தலைமைக்காரியாலயத்தில் குறித்த சேவைக்கான கட்டணங்களை செலுத்தி வாகன சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

**சோ.சுகிர்தன்** **17.12.2019**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**காங்கேசன்துறை**

# கருங்குளவிகள் தாக்கி மயங்கினார் இளைஞன்



சாவகச்சேரி,டிசெ.17
மரத்திலிருந்து வீழ்ந்த பனையோலைக்குள்ளிருந்து வெளியேறிய கருங்குளவிகள், அந்த வழியால் வந்த இளைஞனை மோசமாகத் தாக்கின. அதில் இளைஞன் மயங்கி வீழ்ந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கொடிகாமம் பாலாவி தெற்கில் நேற்று இடம்பெற்றது.

இளைஞனை அந்த வழியே வந்தவர்கள் மீட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த 24 வயததடைய இளைஞன் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (க-9)



# மகிந்தானந்தாவுக்கு பறந்துபோக அனுமதி

கொழும்பு, டிசெ.17
மருத்துவ தேவைகளுக்காக இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே சிங்கப்பூர் செல்வதற்கு நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது.

மகிந்தானந்த அளுத்கமகே முன்னர் விளையாட்டுத் துறை அமைச்சராக இருந்தபோது சதொச நிறுவத்தின் ஊடாக விளையாட்டு உபகரங்களை இறக்குமதி செய்தபோது மோசடி இடம்பெற்றது என்று தெரிவித்து அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதையடுத்து அவருக்கு வெளிநாடு செல்ல நீதிமன்று தடை விதித்திருந்தது.

தற்போது அவர் இன்று முதல் எதிர்வரும் 26ஆம் திகதிவரை வெளிநாடு செல்வதற்கு நீதிபதிகள் குழாம் அனுமதி வழங்கியுள்ளது.

மருத்துவ சிகிச்சைக்காக சிங்கப்பூர் செல்வதற்கு அனுமதி கோரி அவர் விண்ணப்பித்ததை அடுத்து இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த வழக்கில் மேலும் ஒரு பிரதிவாதியான சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நளின் பெர்னாண்டோவுக்கு டிசெம்பர் 25ஆம் திகதி முதல் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிவரை மருத்துவ தேவைகளுக்காகச் சிங்கப்பூர் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

நீதிபதிகள் ஆர்.குருசிங்க, அமல் ராணராஜா, சஷி மகேந்திரன் ஆகிய மூவர் அடங்கிய நீதிபதிகள் குழாமே இந்த அனுமதியை வழங்கியது. (எ)

# எம்.சி.சி. உடன்படிக்கையை கோத்தா அரசு நிராகரிக்கும்

## *அத்துரெலிய தேரர் நம்பிக்கை*



கொழும்பு, டிசெ.17
நாட்டை நேசிக்கும் மக்களின் ஆதரவைப் பெற்று அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கோத்தாபய ராஜபக்ஷவின் அரசு அமெரிக்காவின் மிலேனியம் சவால் தேசத் துரோக உடன்படிக்கையில் ஒருபோதும் கைச்சாத்திடாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரெலிய ரத்தன தேரர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் பொலிஸார் சுயாதீனமாகச் செயற்படுகின்றனர். கடந்த அரசில் மருத்துவர் ஷாபிக்கு எதிரான வழக்கு விசாரணைகள் பக்கச் சார்பான முறையில் நடந்தன. அரசியல் தலையீடுகள் காணப்பட்டன. புதிய அரசில் இந்த வழக்கு விசாரணைகள் பக்கச்சார்பின்றி முன்னெடுக்கப்படுகின்றன.- என்றார். (எ)



# பாதித்த மக்களுக்கு சமைத்த உணவு

யாழ்ப்பாணம், டிசெ. 17
யாழ்ப்பாணம் நயினாதீவில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குறிப்பிட்ட குடும்பங்களுக்கு தீவகம் செண்பகம் தமிழ்த் தேசிய செயற்பாட்டுக் குழுமம் சமைத்த உணவுகளை வழங்கியது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உறவினர்கள் வீடுகளில் வசித்த கும்பங்களுக்கே சமைத்த உணவுகள் வழங்கப்பட்டிருந்தன. கடந்த வாரம் மழை பெய்தபோது குறித்த குடும்பங்கள் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறியிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (து)

# எதிர்காலச்சந்ததிக்கு அழகான நாடுதேவை

## *மல்கம் ரஞ்சித் ஆண்டகை அறிவுரை*



கொழும்பு, டிசெ.17
எதிர்காலச் சந்ததிக்காக அழகான நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் இடம்பெற்ற கிறிஸ்மஸ் நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடவுளின் தீர்மானத்தை மாற்றியமைக்கும் வல்லமை எந்தவொரு மனிதருக்கும் இங்கு கிடையாது.

அதற்கான முயற்சிகளை மனிதன் மேற்கொண்டாலும் அது தோல்வியில்தான் முடிவடையும். பிறந்த குழந்தையின் கண்களை உற்றுப் பார்த்தால் அதில் இறைவனைக் காணலாம்.

அப்படியான குழந்தைகளின் எதிர்க்காலத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம் ஒவ்வொருவரிடமும் உள்ளது.

ஆனால், குழந்தைகளின் வாழ்க்கையை அழிக்கும் பல்வேறு செயற்பாடுகள் தற்போது சமூகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

குழந்தைகளே வேண்டாம் என்ற ஒரு சமூகம் உருவாகிக்கொண்டு வருகிறது. பணத்தை மட்டும் வைத்து மகிழ்ச்சியாக வாழ முடியாது என்ற நிதர்சனத்தை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மாட்டுத் தொழுவத்தில் இருக்கும் யேசு கிறிஸ்துவின் சிலைக்கு அன்பைச் செலுத்துவதற்குப் பதிலாக, குழந்தைகள் மீது அன்பைக் காட்டுங்கள் என நான் இந்தவேளையில் கேட்டுக் கொள்கின்றேன்.

அதுதான் உண்மையான அன்பாகும். 60க்கும் மேற்பட்ட குழந்தைகள் ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தார்கள். அந்தத் தாக்குதலால் நூற்றுக்கும் அதிகமான குழந்தைகள் பாதிக்கப்பட்டார்கள்.

அவர்கள் தொடர்பாக முதலில் சிந்திக்க வேண்டும். கிறிஸ்மஸ் பண்டிகையை மகிழ்ச்சியாக கொண்டாடும் அதேவேளை இந்தக் குழந்தைகள் தொடர்பாகவும் அனைவரும் சிந்திக்க வேண்டும்.- என்றார். (எ)

# குளத்தில் மூழ்கியவர் மீட்பு

சாவகச்சேரி,டிசெ.17
குளத்தில் ஆழமான பகுதியில் மூழ்கிய நபரை, அங்கு குளித்துக் கொண்டிருந்தவர்கள், காப்பாற்றி. மருத்துமனையில் சேர்த்தனர்.

இந்தச் சம்பவம் வரணி நாவற்காட்டில் நேற்று இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த 53 வயது குடும்பஸ்தார் காப்பாற்றப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (க-9)



# இலங்கையில் வானொலி சேவை ஆரம்பித்து 94 ஆண்டுகள் பூர்த்தி

இலங்கையில் வானொலி சேவை ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 94 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன.

பிரிட்டன் ஆளுநர் ஹியு கிளிபர்ட் தலைமையில் 1925ஆம் ஆண்டு டிசெம்பர் 16ஆம் திகதி இலங்கையில் வானொலி சேவை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்த வானொலி சேவை 1949ஆம் ஆண்டு ஒக்ரோபர் முதலாம் திகதி ரேடியோ சிலோன் என்ற பெயரில் புதிய திணைக்களமாக மாற்றமடைந்தது. ஜோன் ஏ லெம்ஸன் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிரதான பணிப்பாளராவார். 1967ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் திகதி இலங்கை வானொலி திணைக்களம் கூட்டுத்தாபனமாக மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

அதன் முதலாவது தலைவராகவும், பணிப்பாளராகவும் நெவில் டி ஜயவீர செயற்பட்டார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தற்போது வரை தேசிய ரீதியில் மூன்று சிங்கள சேவைகளையும், இரண்டு தமிழ் சேவைகளையும் மற்றும் ஆங்கில சேவையையும் ஒலிபரப்பி வருகிறது.

ஐந்து வெளிநாட்டுச் சேவைகளும் இடம்பெறுகின்றன. யாழ்ப்பாணம், ரஜரட்ட, ருஹுனு, மலையக, வயம்ப ஹற்றன், ஊவா ஆகிய இடங்களில் வானொலி மற்றும் பிறை எப்.எம் ஆகியன ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய சேவைகளாக உள்ளன. தெற்காசியாவில் முதல் வானொலி ஒலிபரப்பை ஆரம்பித்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஆசியாவின் பிரதான இசைத் தட்டு களஞ்சியசாலை தற்போதும் காணப்படுவது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தானத்தில் ஆகும்.

உலக பிரசித்திபெற்ற பல மக்கள் தலைவர்களின் குரல் பதிவுகளும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியசாலையில் காணப்படுகின்றது. சிங்கள வர்த்தக சேவை, சிற்றி எப்.எம், தென்றல், தமிழ் தேசிய சேவை ஆகியவற்றை இணைத்தளத்தின் ஊடாகச் செவிமடுப்பதற்கான வசதிகளும் காணப்படுகின்றன. (எ)

# தமிழர் மனதை வெல்ல என்னால் முடியும்!

## சொல்கிறார் விஜயதாச ராஜபக்ஷ



**கொழும்பு, டிசெ. 17**
**தமிழ் பேசும் மக்களின் மனங்களை வெல்லும் வகையிலும் அவர்களின் அபிமானத்தை பாதுகாக்கும் வகையிலும் செயற்பட ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ விசேட வேலைத்திட்டத்தை அரசின் ஊடாக முன்னெடுக்க வேண்டும். இதற்குத் தனியான அமைச்சை உருவாக்க வேண்டும். இவ்வாறு ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

தமிழ் பேசும் அரசியல்வாதிகளை அல்லாமல், மக்களை இணைத்துக் கொண்டு இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். அந்த பொறுப்பை என்னிடம் வழங்கினால் நான் சிறப்பாக வழிநடத்தி, வடக்கையும் தெற்கையும் இணைப்பேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் தமிழ் பேசும் மக்களின் மனங்களை நாங்கள் வெல்ல வேண்டியுள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு நடத்துவதில் அர்த்தமில்லை. காரணம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், புலம்பெயர் தமிழ் மக்களும் ஒருபோதும் தமிழ் மக்களின் நலனுக்காகச் செயல்படவில்லை. அவர்கள் தங்களின் நலனுக்காகவே கடந்த காலங்களில் செயற்பட்டார்கள்.
நாம் நேரடியாக தமிழ் மக்களுடன் ஈடுபாட்டுடன் செயற்படுவதற்கான ஒரு வழியை புதிய அரசு ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும். தற்போது ஜனாதிபதி கோத்தாபய தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள அரசு மக்களின் மனதை வெல்லும் வகையில் செயல்பட்டு வருகின்றது. தமிழ் மக்களின் மனங்களை வெல்லும் வகையில் அரசு ஏதாவது சில திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது.
தமிழ் மக்களின் பிரச்சினைகள் என்ன, அவர்களின் உணர்வுகள் என்ன, தமிழ் மக்களின் அபிமானத்தைப் காப்பாற்றுவது எப்படி போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய விசேட திட்டமொன்றை அரசு முன்னெடுப்பது அவசியமாகிறது. இதற்காக தனியானதொரு அமைச்சை உருவாக்க வேண்டும். வடக்கையும்தெற்கையும்இணைக்க வேண்டும். தமிழ் மக்களும், சிங்கள மக்களும் முன்னர் ஒன்றிணைந்து ஈடுபாட்டுடன் செயல்பட்டனர். 1978ஆம் ஆண்டின் பின்னரே நிலைமை மாற்றமடைந்தது. இரண்டு சமூகங்களும் இணைந்து புரிந்துணர்வுடன் பணியாற்றும் சூழல் உருவாக்கப்பட வேண்டும். அது கடினமானது அல்ல.
அது ஒரு சாத்தியமான விடயம். ஆனால் தமிழ் மக்களுடன் நேரடியாக அரசு ஈடுபட வேண்டும். அதற்காகவே இந்த விடயத்துக்கு தனியானதொரு அமைச்சை உருவாக்குவது சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன்.
தன்னுடன் தமிழ்பேசும் மக்களை அரவணைத்துச் செல்ல வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கருதுகிறார்.
அதனை முன்னின்று கொண்டு செல்ல நான் தயாராக இருக்கின்றேன். அந்தப் பொறுப்பை என்னிடம் தந்தால் நான் அதைச் சிறப்பாக வழிநடத்தி செய்து முடிப்பேன்- என்றார். (ஒ.5)

# ஓவியம் பறித்தது உயிரை!

கொழும்பு, டிசெ. 17
இலங்கையை அழகுபடுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் ஓவியம் வரைந்து கொண்டிருந்த பாடசாலை மாணவன் உயிரிழந்துள்ளார்.
பொத்துபிட்டிய பிரதேசத்திலுள்ள பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியரின் வாகனத்திலேயே மாணவன் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.
வீதி ஓரத்தில் ஓவியம் வரைந்து கொண்டிருந்த மாணவன் மீதே வாகனம் மோதுண்டுள்ளது. உயிரிழந்த மாணவன் கலைத் துறையில் மிகவும் திறமையானவர் என்று கூறப்படுகின்றது. (ஒ.5)

# எம்.சி.சி. ஒப்பந்தத்தில் அரசு இரட்டை நிலை

## சாடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, டிசெ.17
அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தில் அரசு இரட்டை நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கின்றது மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.
கட்சித் தலைமையகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த விஜித ஹேரத் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
தேர்தல் காலத்தில் மிலேனியம் சவால்கள் ஒப்பந்தம் தொடர்பாகப் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்கள் இப்போது ஒப்பந்தத்தைப் பாராட்டுகின்றனர்.
எம்.சி.சி. ஒப்பந்தம் தேசிய பாதுகாப்பைப் பாதிக்கின்றது என்று தெரிவித்து அதை நிராகரிப்போம் என்று அரசு தேர்தல் காலத்தில் உறுதியளித்திருந்தது.
எம்.சி.சி. ஒப்பந்தத்தின் மூலம் இலங்கைக்கு நிதியை வழங்கி தனது நோக்கத்தை நிறைவேற்றுவதே அமெரிக்காவின் நிலைப்பாடு. இத்தகைய திட்டங்கள் அடிப்படையிலேயே நிராகரிக்கப்பட வேண்டும், என்றார். (எ)

# சிறிலங்கன் எயார்லைன்ஸ் தலைவர் பத்திரகே

கொழும்பு, டிசெ.17
சிறிலங்கன் விமான சேவையின் புதிய தலைவராக அசோக் பத்திரகே நியமிக்கப்பட்டுள்ளார். அரச நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளை நியமிப்பதற்கு பரிந்துரை செய்வதற்கான குழுவின் தலைவரான கலாநிதி நாலக்க கொடஹேவா இதனைத் தெரிவித்தார். சொப்ட் லொஜிக் ஹோல்டிங் பி எல் சி நிறுவனத்தின் தலைவரான அஷோக் பத்திரகே நாட்டின் முன்னிலை வர்த்தகராவார். (எ)



# கோத்தாவின் 'ருவிற்று'க்கு போரிஸ் பதில்

கொழும்பு, டிசெ. 17
இலங்கையுடன் சிறந்த இருதரப்பு நல்லுறவை முன்னெடுத்துச் செல்வதற்கு பிரிட்டன் மக்களும், தானும் எதிர்பார்த்துள்ளோம் என பிரிட்டன் பிரதமராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள போரிஸ்ஜோன்சன் தெரிவித்துள்ளார்.
அவரது தேர்தல் வெற்றியை அடுத்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ தனது டுவிட்டர் தளத்தில் வெளியிட்ட வாழ்த்துச் செய்திக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் மற்றும் அந்நாட்டு மக்களுக்கும் அனைத்து நன்மைகளும் கிட்ட வேண்டும் என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருந்தார். (ஒ.5)





கொக்குவில் மேற்கு ஜே.127 பிரிவில் முதியோர் சங்கக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. கூட்டத்தில் அமெரிக்காவில் வசிக்கும் முத்துக்குமாரசாமி பரமேஸ்வரன் மற்றும் நல்லூர் பல. நோ. கூ. சங்க முன்னாள் தலைவர் பெ. கனகசபாபதி , லயன்ஸ் ரஜிகலா ஆகியோர் முதியவர்களுக்கு அரிசிப் பொதிகளை வழங்கினர். (க)

# இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், டிசெ.17
நீர்வேலி அரசசேகரிப் பிள்ளையார் ஆலயத்தில் விநாயகர் விரதத்தை முன்னிட்டு தினமும் இலட்சார்ச்சனை இடம்பெற்று வருகின்றது. கடந்த 12ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சிறப்பு அபிசேகம் பூசை வழிபாடுகளுடன் விநாயகர் விரதம் ஆரம்பமானது.
தொடர்ந்து மாலை 6 மணிக்கு பூசை வழிபாடுகளுடன் இலட்சார்ச்சனை ஆரம்பமாகி தொடர்ந்து 21 நாள்கள் இடம்பெறும். (க-17)

# புத்தாண்டு ராசிபலன் 2020



## துலாம் ராசிக்காரர்களுக்கு அடிக்கப்போகும் அதிர்ஷ்டம்!




துலாம் ராசிக்காரர்களே, உங்களுக்கு 2020 ஆம் ஆண்டு நல்ல பலன்களை தரப்போகிறது. யோகங்கள் வரப்போகிறது. உங்கள் ராசிக்கு மூன்றாம் அதிபதி வலுவாக ஆட்சி பெற்று அமர்ந்துள்ளார். அதே போல நான்காம் அதிபதி நான்காம் வீட்டில் ஆட்சி பெற்று அமரப்போகிறார். சனி உங்கள் ராசியில் உச்சம் பெறும் கிரகம், அவர் ஆட்சி பெற்று அமர்வது அற்புதமான யோகங்களை தரப்போகிறது.

**யோகமான ஆண்டு**

2020 ஆம் ஆண்டு அற்புதமான யோகம் நிறைந்த ஆண்டாக உள்ளது. மாற்றங்களும் ஏற்றங்களும் நிறைந்த ஆண்டாக உள்ளது. உங்களுடைய ராசிக்கு சனி கேதுவால் இது அற்புதமான ஆண்டு சனி மூன்றாம் வீட்டில் இருந்து நான்காம் வீட்டிற்கு பெயர்ச்சி அடைகிறார்.

சனி நான்காம் வீட்டில் ஆட்சி பெற்று அமர்வது யோகம், பித்ரு தோஷம் விலகப் போகிறது. அரசுப் பணியில் இருப்பவர்களுக்கு இது நல்ல காலம் பதவி உயர்வோடு இடமாற்றம் கிடைக்கும். செல்வ வளம் கிடைக்கும்

**அதிர்ஷ்டம் தேடி வரும்**

குரு மூன்றாம் வீட்டில் ஆட்சி பெற்று அமர்கிறார். பலமான அமைப்பு திருமண யோகம் கை கூடி வருகிறது. காரணம் குருவின் பார்வை உங்கள் ராசிக்கு ஏழாம் வீட்டின் மீது விழுகிறது.

பெண்களுக்கு நல்ல வேலை வாய்ப்புக்கள் அமையும். பெண்களுக்கு மனதிற்கு பிடித்த கணவன் அமைய வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் சுபகாரியங்கள் வந்து சேரும்.

**தொழில் வளர்ச்சி**

சனி நான்காம் வீட்டில் அமர்ந்தாலும் உங்கள் ராசியின் மீது பார்வை விழுகிறது. வளர்ச்சி அதிகரிக்கும். வேலை யில் மாற்றம் வரும் கூடவே முன்னேற்றமும் வரும். பாதுகாப்பான நல்ல வேலை கிடைக்கும். புதிய தொழில் தொடங்குவீர்கள். நல்ல வளர்ச்சியும் வருமானமும் கிடைக்கும். உங்கள் ராசிநாதன் சுக்கிரன் மெதுவாக நகர்கிறார். பதவிகள் தேடி வரும்.

**மாணவர்களுக்கு**

இந்த ஆண்டில் கேது மூன்றாம் வீட்டில் இருக்கிறார். துன்பங்கள் விலகும். வெளிநாடு செல்லும் யோகம் வரும். மாணவர்களுக்கு உயர்கல்விக்கு யோகமான ஆண்டு.

பாக்ய ஸ்தானத்தை குரு பார்க்கிறார். நினைத்த பல் கலைக்கழகங்களில் படிக்கும் யோகம் வரும். என்றாலும் சனி நான்காம் வீட்டில் இருப்பதால் அதிகமாக கவனம் எடுத்துப் படிப்பது அவசியம்.



## சமையலறை அமைக்கும் முன்பாக கவனிக்கவேண்டிய வாஸ்து முறைகள்!!

அக்னி மூலையான தென் கிழக்கு மூலையில் தான் சமையலறை அமைக்கவேண்டும். மாறாக வட கிழக்குப் பகுதியில் அமைத்தால் செல்வத்தை எரிப்பதற்கு சமம் ஆகும். இதனால் வறுமை அதிகமாகும். வீட்டில் சமையல் செய்பவர்கள் கிழக்குத் திசையை பார்த்தவாறு நிற்கும் படி இருப்பது நல்லது.

சமையல் அறையில் சமைப்பவரின் வலது பக்கத்தில் பாத்திரம் கழுவும் தொட்டியை வைக்க வேண்டும். தெற்கு மற்றும் மேற்குத் திசையில் சமையல் பொருள்களை வைக்க உதவும் பரண் அல்லது அலமாரி அமைவது நல்லது. எந்தெந்த திசைகளில் சமையல் அறை அமைந்தால் என்ன பயன் என்று இப்போது பார்க்கலாம்.

கிழக்குத் திசையில் சமையலறை அமைவதால் வம்ச விருத்தி, குடும்ப தலைவி உடல்நலம் பாதிக்கப்படும். தென் கிழக்குத் திசையில் அமைந்தால் உணவின் சுவை அதிகரிக்கும். சுப நிகழ்ச்சிகள் எந்த தடையும் இல்லாமல் இனிதே நடக்கும்.

தெற்குப் பகுதியில் சமையறை அமைத்தால் வருமானத்தை விட செலவுகள் அதிகமாக இருக்கும். கடன் தொல்லை அதிகமாகும். தென் மேற்கில் சமையலறை அமைந்தால் தேவையற்ற மனக் குழப்பங்கள் ஏற்படும். மேற்கு மற்றும் வடமேற்கில் சமையலறை அமைந்தால் நிம்மதியின்மை, சண்டைகள், வீண் செலவுகள் ஏற்படும். வடக்கில் சமையலறை அமைந்தால் குடும்பத்தில் உள்ள நபர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு சண்டை வரலாம்.

வடகிழக்கில் சமையலறை அமைந்தால் தீய பலன்கள் நடக்கும். சாப்பிடும் போது வடக்கு அல்லது கிழக்கு நோக்கிச் சாப்பிட்டால் உடல் நலம் சீராக இருக்கும். நோய்கள் வராது.



## சிவனை வழிபட ஏற்ற முறைகள்

சிவபெருமானின் நெற்றிக்கண்ணின் கோபப்பார்வையிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது. அதேசமயம் சிவபெருமானை குளிர்விப்பதும் மிகவும் எளிமையானதாகும். சில பொருள் சிவபெருமானுக்கு மிகவும் பிடிக்கும், அவற்றை வைத்து வணங்கும்போது சிவபெருமான் குளிர்ந்து வேண்டுவதை அருளுவார்.

**பால்:** பால் அனைத்துக் கடவுள்களுக்கும் படைக்கப்படும் ஒரு பொருளாகும். சிவபெருமானும் பாலை அதிகம் விரும்புவார். முடிந்தளவு சுத்தமான பாலை சிவபெருமானுக்கு படைக்க முயலுங்கள். கடைகளில் விற்கும் செயற்கை இராசயனங்களால் தயாரிக்கப்பட்ட பாலை சிவபெருமானுக்கு படைப்பது உங்களுக்கு எந்த பலனையும் தராது.

**சந்தனம்:** இயற்கையிலேயே கோபக்கார கடவுளாக அறியப்படுகிறார். இந்த சூழ்நிலையில் அரைத்த சந்தனம் சிவபெருமானின் கோபத்தை குறைத்து அவரை குளிர்ச்சியடையச் செய்யும் என புராணங்கள் கூறுகிறது.

**விபூதி:** சிவபெருமான் மிகவும் எளிமையான கடவுள் ஆவார். ஏனைய கடவுள்களுக்கு படைப்பதை போன்ற பொருட்கள் சிவபெருமானுக்கு தேவையில்லை. எனவே சிவலிங்கத்தை சுத்தமான பாலில் அபிஷேகம் செய்து திருநீறால் மூன்று பட்டையிட்டு வணங்கினாலே போதும் சிவபெருமானின் அன்பைப் பெற்றுவிடலாம்.

**வில்வம்:** நீங்கள் சிவபெருமானை வழிபட எத்தனை இலட்சங்கள் செலவு செய்தாலும் அவை அனைத்தும் சிறிது வில்வ இலைகளை வைத்து வழிபடுவதற்கு ஈடாகாது. அதிலும் சிவனின் திரிசூலம் வடிவில் இருக்கும் மூன்று வில்வ இலைகளை சிவபெருமானுக்குப் படைத்தால் கூடுதல் அருள் கிடைக்கும்.

## சுவிஸ்...

மையாக இட்டுக்கட்டப்பட்ட கதை எனவும் அவரிடம் தெரிவித்தார்.

'சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரி கடத்தல் என்று கூறப்படுவது கட்டுக்கதை என்பது இப்போது நன்கு நிறுவப்பட்டுள்ளது. ஊபர் அறிக்கைகள், தொலைபேசி உரையாடல்கள் மற்றும் சி.சி.ரி.வி. காட்சிகள் போன்ற மறுக்க முடியாத சான்றுகள் இந்த உண்மையைச் சுட்டிக்காட்டுகின்றன.

என்னையும் எனது அரசையும் இழிவுபடுத்துவதற்குத் தூதரகப் பெண் அதிகாரி, சில தரப்பினரால் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கக்கூடும். ஆனால், பாதிக்கப்பட்டவர்கள் ஏன் இப்படி நடந்துகொண்டார்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லை. எனினும், தனது அதிகாரியின் முறைப்பாடு தொடர்பில் சுவிஸ் தூதரகம் எடுத்த நடவடிக்கைகளில் எந்தத் தவறும் இல்லை.

சம்பவம் தொடர்பில் தூதரகத்தின் செயற்பாடுகள் நியாயமானதே. தூதரக ஊழியர்களில் ஒருவர் சிக்கலில் இருப்பதாக முறையிட்டால் அதில் தூதரகம் தலையிடுவதே தார்மீகப் பொறுப்பு. குறித்த விசரணைகளை முடிவுக்குக் கொண்டுசெல்ல சுவிஸ் தூதரகம் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்' எனவும் தூதுவரிடம் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

'இலங்கைக்கு எந்தத் தீங்கும் விளைவிக்கும் நோக்கம் சுவிஸ் நாட்டுக்கு இல்லை. இரு நாடுகளின் நலனுக்காக நாங்கள் ஒன்றிணைந்து செயற்பட விரும்புகின்றோம். இந்தப் பதற்றமான சூழ்நிலையை நாம் முறியடிக்க வேண்டும்' என்று இதன்போது ஜனாதிபதியிடம் சுவிஸ் தூதுவர் தெரிவித்தார். (ம-22)

## சரிவராது...

'70 வருடங்களாக அதிகாரப் பகிர்வு தொடர்பில் அரசியல்வாதிகள் கருத்துக்களை மாத்திரமே வெளியிட்டு வருகின்ற நிலையில், அது தொடர்பில் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கவில்லை. இலங்கையில் வாழ்கின்ற அனைத்து மக்களும் சமவுரிமையுடன் வாழவேண்டும்என்றநிலைப்பாட்டிலேயே நாம் உள்ளோம். அதிகாரப் பகிர்வு என்பது ஒரு அரசியல் மயப்பட்ட விடயம் மாத்திரமே. நாட்டில் அபிவிருத்திகளை மேற்கொள்வதன் ஊடாகவே தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

இலங்கையில் தமிழ் மக்கள் கௌரவமாக வாழ முடியாத நிலைமை இருக்கின்றது எனத் தமிழ் அரசியல்வாதிகள் கூறுகின்றனர். தமிழ் மக்கள் ஏன் இங்கு கௌரவமாக வாழ முடியாது? அப்படியான நிலைமை இங்கு இல்லை. பெரும்பான்மை சிங்கள மக்களினால் நிராகரிக்கப்படும் அதிகாரப் பகிர்வு, சமஷ்டி (கூட்டாட்சி) போன்ற விடயங்களை அவர்களின் அனுமதியின்றி தமிழ் மக்களுக்கு எவ்வாறு வழங்குவது?

இந்த நாட்டில் ஆட்சியிலிருந்த அனைத்து அரசியல்வாதிகளும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டார்களே தவிர, மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை. எனவே, நாட்டு மக்களின் பிரச்சினைகளை முதலில் தீர்க்க வேண்டும்.

அதிகாரப் பகிர்வு என்ற விடயமானது முற்றிலும் பொய்யான ஒன்று. பெரும்பான்மை சிங்கள மக்கள் இருக்கின்ற நாட்டைப் பிரித்து அதிகாரப் பகிர்வை வழங்குவதென்பது சாத்தியமற்ற ஒன்று. தமிழ் மக்களின் வாக்குகள் இன்றி நான் ஜனாதிபதியாகியுள்ள போதிலும், நான் அனைவருக்கும் இந்த நாட்டில் ஜனாதிபதி. தமிழ் மக்களுக்கு சிறந்த சேவை யாற்றக்கூடிய அமைச்சராக டக்ளஸ் தேவானந்தாவை நான் நியமித்துள்ளேன். அவர் தமிழ் மக்களுக்கான அனைத்து சேவைகளையும் உரிய முறையில் முன்னெடுப்பார்' - என்றார். (ம-22)

## கைது...



சொல்லப்பட்ட சுவிஸ் தூதரகத்தின் பெண் அதிகாரி கானியா பெனிஸ்ரர் பிரான்சிஸை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுக் கைதுசெய்தனர்.

அவரைக் கைதுசெய்யுமாறு சட்டமா அதிபர், குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தை அறிவுறுத்தியிருந்தார். போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரசை இக்கட்டான நிலைக்குத் தள்ளியமை காரணமாக அவர் கைதுசெய்யப்பட்ட வேண்டும் என்று சட்டமா அதிபர் தெரிவித்திருந்தார். இதையடுத்தே நேற்று இந்தக் கைது இடம்பெற்றது. எதிர்வரும் 30ஆம் திகதி வரையில் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். குறித்த அதிகாரி நேற்றுக் காலை மனநல பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டிருந்தார்.

இந்தக் கைதால் சர்வதேச சமூகத்தின் பகையை இலங்கை அரசு தேடிக்கொண்டுள்ளது என அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் சர்வதேச சமூகத்தின் மட்டில் இலங்கை அரசுக்கு இருக்கும் நெருக்கடி இன்னும் அதிகரிக்கும் என்றும் கருதப்படுகின்றது. (ம-22)

## காணாமல்...

வதே சிறந்ததொரு தீர்வாக இருக்கும் என நான் நம்புகின்றேன்' இவ்வாறு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

ஊடக நிறுவனங்களின் ஆசிரியர்களுடன் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடத்திய சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

'போர்க்காலத்தில் வடக்கில் மாத்திரமன்றி தென் பகுதியிலும் பலர் காணாமல்போயிருந்தார்கள். எனவே, போர்க்காலத்தில் காணாமல்போனோர் உயிரிழந்திருக்கலாம். எனினும், அதனை அவர்களின் பெற்றோரால் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும் என்னால் உணர முடிகின்றது. இதனாலேயே காணாமல்போனோர் உறவினர்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். எனவே, காணாமல்போனோருக்கான சான்றிதழை வழங்குவதே சிறந்ததாக அமையும்' என்றார்.

**19 திருத்தம் இரத்து**

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், 'அரசமைப்பின்19ஆவது திருத்தமானது, பலகுறைபாடுகளுடனானதிருத்தமாகும். எனவே, இந்தத் திருத்தச் சட்டத்தை விரைவில் இரத்துச் செய்து, புதியதொரு அரசமைப்பு திருத்தத்தை கொண்டுவர விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.' - என்றும் குறிப்பிட்டார். (ம-22)

## சாட்சியத்தில்...

அந்தச் சம்பவம் நடக்காத ஒன்றாகும். குறித்த பெண் அதிகாரியின் வாக்குமூலத்தில் மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

ஊடக நிறுவனங்களின் ஆசிரியர்களுடன் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடத்திய சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இவ்வாறான சம்பவம் இடம்பெறவில்லை என்பது விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. சி.சி.ரி.வி காட்சிகள் மற்றும் அலைபேசி தரவுகளின் ஊடாகவும் அவ்வாறான சம்பவம் நடைபெற்றிருக்கவில்லை எனத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

தனது அதிகாரி கடத்தப்பட்டமை தொடர்பில் விசாரணைக்குக் கோரிக்கை விடுக்கும் பொறுப்பு குறித்த சுவிஸ் தூதரகத்துக்கு இருந்தது. இந்த விடயம் தொடர்பில் சுவிஸ் தூதரகத்துக்கும் எமக்கும் எந்தவித முரண்பாடுகளும் கிடையாது. இந்தச் சம்பவம் தொடர்பில் பிரதமர் விசார ணைகளுக்கு உத்தரவிட்டார். அதற்கமைய விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன' -என்றார். (ம-22)

## உதவிப்...

டுள்ளனர்.

குறித்த வீடு பூட்டியிருந்த நிலையில் வீட்டின் மேல் பகுதியிலிருந்து புகை வந்ததினை அவதானித்த அயலவர்கள் வீட்டின் வளவினுள் சென்று பார்வையிட்ட சமயத்தில் வீட்டின் ஒரு பகுதி தீக்கிரையானமை தெரியவந்தது. இதனையடுத்து அயலவர்கள் உடனடியாக நகரசபை தீயணைப்பு பிரிவினருக்கு தகவலை வழங்கியதுடன் தண்ணீர் ஊற்றி தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டனர். பின்னர் தீயணைப்புப் படையினரின் உதவியால் தீ கட்டுப்படுத்தப்பட்டது. (ம)

## மடக்...

குறித்த பகுதியில் கசிப்பு விற்பனை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது என்று கிராம அலுவலருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அவர்களைப் பிடிக்கக் கிராம அலுவலர் திட்டமிட்டார். அதற்காக பொதுமக்கள் சிலரின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொண்டு அவர்களுடன் சேர்ந்து குறித்த பகுதிக்குள் அதிரடியாகக் களமிறங்கி இருவரை மடக்கிப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தார். (த-6)

## ஐயன்...

தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றையதினம் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் கனகரத்தினம் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதியிலும் அளவுகணக்கற்று கிரவலும் ஆற்று மணலும் அகழப்படுகின்றன. குறிப்பாக அம்பகாமம், உப்புமாவெளி, உடுப்புக்குளம், பாண்டியன்குளம் என பல இடங்களிலும் மண் அகழப்படுவது தொடர்பில் பலமுறை முறையிடப்பட்டும் அதற்கான நடவடிக்கை இல்லை என கூட்டத்தின் போது சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்து உடனடியாக இராணுவம், பொலிசின் உதவியுடன் மணல் கடத்தல்காரர்களை கைது செய்து சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது. (ம-105)

## குறைந்தது...

அரசு தீர்மானித்துள்ளது. இதற்கமைய, 36 ரூபா ஒன்றிணைந்த தீர்வை வரியை நீக்கி அதற்கு பதிலாக 8 ரூபா விசேட வர்த்தக பொருட்கள் வரியை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தப் புதிய விசேட வர்த்தக பொருள் வரி விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளதாக நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் பிரதமர் மகிந்த ராஜபக்ஸவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## யாழில்...

கலந்துகொள்ள வேண்டும் என்று ஏற்பாட்டுக் குழு அழைத்துள்ளது. (ம)

கொடிபதி கப்ருக
சீட்டிழுப்பு வாரம்: 533
திகதி: 2019 டிசம்பர் 15
வர்ணம்: மஞ்சள் ஞாயிறு
F 04 17 18 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 81,426,545/-

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 823
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.12.16
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 74,139,045/-
வெற்றி இலக்கங்கள்
28 38 68 73 H

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல: 3275 திகதி: 2019.12.16
நீலம் திங்கட்கிழமை
சுப்பிரி தனஸ்
9631
வெற்றி இலக்கங்கள்
14 16 26 57 G
32,643,135/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1092
சீட்டிழுப்பு திகதி 2019.12.15 ஞாயிற்றுக்கிழமை
N 29 31 36 43

ராசி அதிர்ஷ்டம்
திகதி 16.12.2019 வெற்றி வாரம் 2709 வர்ணம் மஞ்சள்
மேஷம்
வெற்றி இலக்கங்கள் 23 39 46 54
செவ்வாய்க்கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,460,070/=
17.12.2019 ம் திகதி செவ்வாய்க் கிழமை சிவப்பு
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

# இன்றைய நாள்

**மேடம்:** சங்கடமான சூழ்நிலையை எதிர் கொள்ள நேரிடலாம். நண்பர் உதவுவார். தொழில், வியாபாரம் சுமாராக இருக்கும். பெண்கள் நகை இரவல் கொடுக்க வேண்டாம். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**இடபம்:** பல நாள் இருந்த சிரம சூழ்நிலை விலகும். மனதில் நிம்மதியும் பெருமிதமும் ஏற்படும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க கூடுதல் பணி புரிவீர்கள்.

**மிதுனம்:** சிலரது செயல் சங்கடம் தரலாம். நண்பரின் ஆலோசனை நம்பிக்கை தரும். பண வரவை விட செலவு அதிகரிக்கும். உணவு உண்பதில் கட்டுப்பாடு வேண்டும்..

**கடகம்:** உங்கள் மனதில் அன்பும், கருணையும் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழிக்க அனுகூல காரணி பலம் பெறும். பண வரவு சீராகும். வழக்கு, விவகாரங்களில் சாதகமான தீர்வு கிடைக்கும்.

**சிம்மம்:** மாறுபட்ட நிகழ்வினால் மன வருத்தம் கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க புதிய யுக்தி பயன்படுத்த வேண்டும். பண வரவை விட செலவு அதிகரிக்கும்.

**கன்னி:** பணிகளில் சமயோசிதமாக செயல்படுவீர்கள். முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். உபரி பண வரவு வந்து சேரும். அரசியல்வாதிகளுக்கு பதவி பெற அனுகூலம் உண்டு.

**துலாம்:** எளியவருக்கு உதவும் மனப்பாங்கு கொள்வீர்கள். சிறிய செயலும் முழு அளவிலான வெற்றியை தரும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூல தனம் செய்வீர்கள்.

**விருச்சிகம்:** கடந்த கால சிரமம் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறி வளர்ச்சி ஏற்படும். கூடுதல் பண செலவு ஏற்படலாம்.

**தனுசு:** திட்டமிட்ட செயலை மறக்கும் சூழ்நிலை ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். புதிய இனங்களில் பண செலவு ஏற்படும்.

**மகரம்:** உங்கள் செயல்களில் புதிய பரிமளிப்பு உருவாகும். தொழில், வியாபாரத்தில் அபரிமித மான வளர்ச்சி உண்டு. நிலுவை பணம் வசூலாகும்.

**கும்பம்:** முன்னர் தவறு நிகழ்ந்த பணியை சரி செய்வீர்கள். பலரும் உங்களிடம் அன்பு பாராட்டு வர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி திருப்திகரமாகும்.

**மீனம்:** சிலரது பேச்சு உங்களை சங்கடப்படுத்தலாம். சொந்த பணியில் கவனம் கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற தாமதமாகும். சேமிப்பு பணம் செலவாகும்.

# ட்ரம்ப் இப்படியொரு சாதனை



வொஷிங்டன், டிசெ. 17

சமூக வலைத்தளமான டுவிட்டரை அதிகம் பயன்படுத்தும் உலக தலைவர்களில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முக்கியமானவர். தனது அரசின் புதிய திட்டங்கள், அன்றாட அரசியல் நிகழ்வுகள் பற்றிய பார்வை மற்றும் முக்கிய முடிவுகளை ட்ரம்ப் டுவிட்டரில்தான் வெளியிடுவார்.

2 மணி நேரத்தில் 123 பதிவுகளை வெளியிட்டு ட்ரம்ப், டுவிட்டரில் புதிய சாதனை படைத்துள்ளார். தன்னைப் பதவி நீக்குவதற்கு நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபையில் ஜனநாயக கட்சியினர் கொண்டு வந்துள்ள தீர்மானம் தொடர்பான நிலைப்பாட்டை தெரிவிக்கும் வகையில் ட்ரம்ப் இந்தப் பதிவுகளை வெளியிட்டுள்ளார்.

ஒரு பதிவில் அவர், தன்னைப் பதவியை விட்டு நீக்குவது நியாயமல்ல என்றும், தாம் எந்தத் தவறும் செய்யவில்லை என்றும் உருக்கமாக குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவின் பொருளாதார முன்னேற்றத்துக்காகத் தாம் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் பட்டியலிட்டுள்ளார்.

தமக்கு எதிராக செய்திகளை ஒளிபரப்பும் ஊடகங்களின் நம்பகத்தன்மையை விமர்சித்துள்ள ட்ரம்ப், அமெரிக்க ஜனாதிபதிகள் அனைவரையும் இனி பதவி நீக்கம் செய்வார்கள் என்று ஜனநாயக கட்சியினரைச் சாடியுள்ளார். (ஒ,5)



## உலக அழகியாக ஜமைக்கா பெண் தெரிவு

லண்டன், டிசெ. 17

69ஆவது உலக அழகிப் போட்டியில் (மிஸ்வேள்ட்) ஜமைக்காக நாட்டைச் சேர்ந்த டோனி ஆன் சிங் வெற்றி பெற்றார். லண்டனில் கிழக்கு பகுதியில் உள்ள எக்செல் மையத்தில் நவம்பர் மாதம் 20ஆம் திகதி உலக அழகிப் போட்டி தொடங்கியது. 111 நாடுகளை சேர்ந்த அழகிகள் பங்கேற்றனர். அழகிகளுக்கு பல்வேறு போட்டிகள் மற்றும் உடல் அழகு குறித்து ஆய்வு என்பன நடத்தப்பட்டன. 40 அழகிகள் இறுதிக்குத் தேர்வாகினர்.

2019ஆம் ஆண்டுக்கான உலக அழகி தேர்வு செய்யப்படுவதற்காக இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடந்தது. 40 அழகிகளில் 10 பேர் இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றனர். இறுதிச்சுற்றில் அழகிகளின் அறிவுத்திறனை சோதித்துப் பார்ப்பதற்கான கேள்விகள் கேட்கப்பட்டன. இதன் முடிவில் உலக அழகியாக ஜமைக்கா நாட்டை சேர்ந்த டோனி ஆன் சிங் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## நேச நாடுகளாகும் அமெ. - சீனா

பீஜிங், டிசெ. 17

உலகின் இரு பெரும் பொருளாதார நாடுகளான அமெரிக்கா சீனா இடையிலான வர்த்தகப் போரை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் இருதரப்புக்கும் இடையில் முதல் கட்ட ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் விளைவாக சீனப் பொருள்கள் மீதான 15 சதவீத கூடுதல் வரி விதிப்பை அமெரிக்கா நீக்கியது.

இந்த நிலையில் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 10 சதவீதம் கூடுதல் வரி விதிக்கும் முடிவை சீனா கைவிட்டுள்ளது. இதனை சீனாவின் நிதி அமைச்சகம் நேற்றுமுன்தினம் அறிவித்தது.

அமெரிக்கப் பொருள்கள் மீதான கூடுதல் வரிவிதிப்பு நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைக்கு வர இருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ,5)



# பிறந்த நாளில் எரிமலைக்கு இரையாகிய பெரும் சோகம்

வெலிங்டன், டிசெ. 17

நியூசிலாந்தின் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான வையிட் தீவில் உள்ள எரிமலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெடிப்பு ஏற்பட்டது. இதில் நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஜெர்மனி, சீனா, இங்கிலாந்து மற்றும் மலேசியாவைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் 47 பேர் சிக்கிக் கொண்டனர்.

உடனடியாக மீட்பு பணிகள் முடுக்கி விடப்பட்டன. எரிமலை வெடிப்பில் சிக்கி 9 பேர் உயிரிழந்தார்கள். 30 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். 8 பேர் மாயமாகினர். அவர்களில் 6 பேர் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டனர். மேலும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் நேற்றுமுன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதன் மூலம் உயிரிழப்பு எண்ணிக்கை 16 ஆக உயர்ந்துள்ளது.




எரிமலை வெடிப்பில் சிக்கி உயிரிழந்தவர்களின் விவரங்களை நியூசிலாந்து அரசு வெளியிட்டுள்ளது. ஆஸ்திரேலியாவை சேர்ந்த இளம் பெண் தனது பிறந்தநாளை கொண்டாட குடும்பத்தோடு வையிட் தீவுக்குச் சுற்றுலா சென்றபோது எரிமலை வெடிப்பில் சிக்கி அவர் உயிரிழந்தமை தெரியவந்துள்ளது. அவர் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரைச் சேர்ந்த கிரிஸ்டல் ஈவ் புரோவிட் (வயது21). மருத்துவக் கல்லூரியில் கால்நடை மருத்துவம் படித்து வந்தார்.

இவர் தனது பிறந்தநாளை கொண்டாடும் விதமாக தாய், தந்தை மற்றும் சகோதரியுடன் நியூசிலாந்தின் வையிட் தீவுக்குச் சுற்றுலா சென்றார்.

எரிமலை வெடிப்பில் சிக்கி கிரிஸ்டல் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். அவரது தந்தை மற்றும் சகோதரிக்கு பலத்த தீக்காயம் ஏற்பட்டது. அவரது தாய் எந்தவித காயங்கள் இன்றி உயிர்தப்பினார். கிரிஸ்டலின் இறப்பு அவரது குடும்பத்தினரைச் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (ஒ,5)

# வெங்காயத்தால் கோடீஸ்வரன்!





பெங்களூர், டிசெ. 17

சமையலில் தவிர்க்க முடியாத பொருளாக வெங்காயம் உள்ளது. கடந்த ஒரு மாதத்தில் அதன் விலை கிடுகிடுவென உயர்ந்தது. தற்போதைய சூழலில் இந்தியாவில் ஒரு கிலோ வெங்காயம் 200 ரூபாவைத் தாண்டியது. வெங்காய விலையை கேட்டே பொதுமக்கள் கண்ணீர் வடித்தனர்.

வெங்காயம் பயிரிட்ட விவசாயிகளுக்கு இலாபம் கிடைத்து வருகிறது. வெங்காய விலை உயர்வால் ஒரே மாதத்தில் கர்நாடகத்தைச் சேர்ந்த விவசாயி கோடீஸ்வரராகி உள்ளார்.

சித்ரதுர்கா மாவட்டம் தொட்டசித்தவன ஹள்ளி கிராமத்தைச் சேர்ந்தவர் மல்லிகார்ஜுன் (வயது42). இவருக்கு சொந்தமாக 10 ஏக்கர் நிலம் உள்ளது. 2004ஆம் ஆண்டு தொடக்கம் வெங்காயம் பயிரிட்டு வருகிறார். கடந்த ஆண்டு ரூ. 5 லட்சம் அவருக்கு இலாபம் கிடைத்தது.

இந்த ஆண்டு அவர் தனது 10 ஏக்கர் நிலம் உள்பட மேலும் 10 ஏக்கர் நிலத்தை குத்தகை அடிப்படையில் வாங்கி ரூ.15 லட்சம் செலவில் வெங்காயம் பயிரிட்டார். வெங்காய விலை உயர்ந்த நிலையில் அவர் தான் பயிரிட்ட வெங்காயத்தை அறுவடை செய்து விற்று வருகிறார். கடந்த ஒரு மாதத்தில் மட்டும் மல்லிகார்ஜுன் 240 தொன் அளவுக்கு வெங்காயத்தை அறுவடை செய்து விற்பனை செய்துள்ளார். கடந்த மாதத்தில் மட்டும் ஒரு கோடி ரூபா வருமானமாகப் பெற்று கோடீஸ்வரராகி உள்ளார். இதுகுறித்து மல்லிகார்ஜுன் தெரிவித்ததாவது:

நான் வெங்காயம் பயிரிடுவதற்காக கடன் வாங்கி இருந்தேன். ரூ. 5 லட்சம் முதல் ரூ. 10 லட்சம் வரை லாபம் கிடைக்கும் என்ற நோக்கத்தில் கடன் தொகை உள்பட ரூ. 15 லட்சத்தில் வெங்காயம் பயிரிட்டேன். ஒக்ரோபர் மாதம் வெங்காய விலை குறைவாக இருந்தது. மிகவும் மனம் உடைந்து விட்டேன்.

நவம்பர் மாதத்தில் அதிர்ஷ்டவசமாக வெங்காய விலை உயர்வு எனக்கு கை கொடுத்தது. நவம்பர் மாதம் முதல் வாரத்தில் வெங்காயத்தை ரூ. 7 ஆயிரத்துக்கு விற்பனை செய்தேன். சில நாள்களில் ரூ.12 ஆயிரத்தை தொட்டது. எனக்கு அதிக லாபம் கிடைத்தது. எனது கடனை அடைத்துவிட்டேன். புதிதாக வீடு கட்ட திட்டமிட்டுள்ளேன். மேலும் நிலம் வாங்கி விவசாயத்தை விரிவுபடுத்த உள்ளேன், என்றார்.

மல்லிகார்ஜுனிடம் தினமும் 50 பேர் விவசாயப் பணியாற்றி வருகிறார்கள். வெங்காய விலை உயர்வால் திருட்டை தடுக்கும் பொருட்டு மல்லிகார்ஜுன் மற்றும் அவருடைய குடும்பத்தினர் இரவில் தோட்டத்தில் காவல் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

குடியுரிமை

# திருத்தச் சட்டத்துக்கு எதிராகப் போராட்டம்

டில்லி, டிசெ. 17

குடியுரிமைத் திருத்த சட்டம் இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தை எதிர்த்து வடகிழக்கு மாநிலங்களில் தொடர் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. பங்களாதேஷிலிருந்து வடகிழக்கு மாநிலங்களில் சட்டவிரோதமாகக் குடியேறியவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கக் கூடாது என்று போராட்டக் குழுக்கள் வலியுறுத்தி வருகின்றன.

காங்கிரஸின் தேசிய மாணவர் கூட்டமைப்பு, ஜாமியா மிலியா இஸ்லாமிய மாணவர் சங்கம் சார்பில் டில்லி ஜாமியா நகரில் நேற்றுமுன்தினம் போராட்டம் நடைபெற்றது. இது கலவரமாக மாறியது. மாணவர்கள் மீது பொலிஸார் வன்முறைத் தாக்குதலில் ஈடுபட்டனர் எனக் குற்றச்சாட்டுகள் எழுந்து வருகின்றன.

இந்த நிலையில், பிரதமர் மோடி தனது ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவுகளில் தெரிவித்ததாவது:

தேசிய குடியுரிமைச் சட்டம் 2019 நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அமோக ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. பெரும்பாலான அரசியல் கட்சிகள் இதற்கு ஆதரவு அளித்துள்ளன. இந்தச் சட்டம் இந்தியா ஆண்டாண்டு காலமாக கடைப்பிடித்து வரும் ஏற்றுக்கொள்ளுதல், ஒற்றுமை, சகோதரத்துவம், கருணை ஆகியவற்றைப் பறைசாற்றுகிறது.

குடியுரிமைச் சட்டத்துக்கு எதிரான வன்முறைப் போராட்டங்கள் துரதிர்ஷ்டவசமானவை. அவை மிகுந்த வருத்தம் அளிக்கின்றன. விவாதமும், ஆலோசனைகளும் எதிர்க் கருத்தும் ஜனநாயகத்தின் அடிப்படை. ஆனால், அந்த ஜனநாயக மரபைக் கடைப்பிடிப்பதில் பொதுச் சொத்துகளுக்கு பங்கமோ இயல்பு வாழ்க்கைக்கு நெருக்கடியோ ஏற்படுத்துவது நெறியாகாது.

எனது சக இந்தியர்களுக்கு நான் இந்த வேளையில் ஒன்றை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். தேசிய குடியுரிமைச் சட்டம் எந்த ஒரு குடிமகனுக்கும் பாதிப்பை ஏற்படுத்தாது.

எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவரையும் பாதிக்காது. அதனால் எந்த ஓர் இந்தியரும் இச்சட்டம் குறித்து கவலைகொள்ளத் தேவையில்லை.

இந்தச் சட்டம் ஆண்டாண்டு காலமாக வெளியில் ஒடுக்குமுறையைச் சந்தித்துவிட்டு இந்தியாவைத் தவிர வேறு எங்கும் செல்ல முடியாமல் வந்தவர்களுக்கு ஆதரவானது.

இந்தத் தருணத்தின் தேவை அனைவரும் கைகோத்து இந்தியாவின் மேம்பாட்டுக்காகப் பாடுபடவேண்டும். ஒவ்வொரு இந்தியரின் கரமும் வலுப்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக ஏழை, நசுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

இது அமைதி காக்க வேண்டிய நேரம். ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் பேண வேண்டிய தருணம். அதனால், வதந்திகளில் இருந்து உண்மைக்கு மாறாக பரப்பப்படும் தகவல்களில் இருந்து விலகி நிற்குமாறு அனைவரையும் வேண்டுகிறேன். சிலர் சுய லாபத்துக்காக ஊறு விளைவித்து நம்மைத் துண்டாட அனுமதிக்க முடியாது என்று மோடி தெரிவித்துள்ளார். (ஒ.5)


ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 . 04 . 1947



மறைவு 28 . 12 . 2018

அமரர் கைலாசபிள்ளை கணேசையா

(மண்கும்பான் கிழக்கு 4 ஆம் வட்டாரம்)

நித்தம் எமைக் காத்து நிழலாய் சீர் வளர்த்து
வித்தகராய் உயர எமை விதைத்திட்ட வளமே!
உத்தமனே உயர் விளக்கே உண்மையுள்ள உள்ளழகே!
சித்தம் கலங்குகின்றோம் சீர் வளர்ப்பே உன் நினைவால்....

சிவகுருலேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.
077 959 5142



உடனடி வேலைவாய்ப்பு

RIB Group (Pvt) Ltd.

1. கணக்காளர் (Accountant)
தகைமை : HNDA/ B.Com/AAT/ CIMA/ Chartered.
Accounts துறையில் அனுபவம்.
வயது 35 இற்கு குறைவாக.
கணினி பாவனையில் அனுபவம்.

2. வாடிக்கையாளர் சேவை அனுபவம் (Customer Care Officer)
தகைமை : G.C.E. O/L / A/L
வயது 27 இற்கு குறைவாக.
கணினி அனுபவம் (Ms Office)

நேர்முகத்தேர்வு - 19.12.2019 (10.00am - 12.00pm)
முகவரி - 83, காதி அபூபக்கர் ரோட், யாழ்ப்பாணம்.
மேலதிக தகவல்களுக்கு: (CS 2970)04.07

077 388 3879 / 076 138 9356



கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 26.08.1948 இறப்பு 16.12.2019

திருமதி
அருந்ததி குணபாலசிங்கம்

(தலைவர் - ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம். அளவெட்டி)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது தேவஸ்தானம் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி !

ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
அளவெட்டி
ஆலயப் பொதுப்பரிபாலன சபையினர்.

# கே.ஸி.ஸி.ஸி வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.17
அமரர் பா.மயூரதன் ஞாபகார்த்தமாக நடைபெறும் கே.ஸி.ஸி.ஸி கிண்ணத்துக்கான கூடைப் பந்தாட்டத் தொடரில் ஆண்களுக்கான பிளே ஒவ் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம் பெற்ற ஆண்களுக்கான பிளே ஒவ் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி 64 : 51 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)



# பளுதூக்கலில் கொக்குவில் இந்து மாணவிக்கு வெண்கலப் பதக்கம்



யாழ்ப்பாணம், டிசெ.17
இலங்கை பளுதூக்கல் சம்மேளனம் தேசிய மட்டத்தில் நடத்திய இளையோர்களுக்கான பளுதூக்கல் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி வெண்கலப் பதக்கங்களைச் சுவீகரித்தனர்.

டொறிங்ரன் உள்ளக விளையாட்டரங்கில் இடம் பெற்றது 17வயதுக்குட்பட்ட பெண்களுக்கான பளு தூக்கல் போட்டியில் திலக்சனா 45கிலோ எடைப் பிரிவில் 69 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (23)




# அண்ணா வி.க. மகுடம் சூடியது




வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் நவரட்ணராஜா ஞாபகார்த்த தலைவர் கிண்ணத்துக்கான வலிகாம மட்ட கால்பந்தாட்டத் தொடரில் அண்ணா விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு. இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் மின் ஒளியில் இடம் பெற்ற வலிகாம மட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் அராலி அண்ணா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்துதாவடிகாளி அம்பாள்
விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பதிவு செய்ய ஆட்டம் சநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சிறந்த கோல் காப்பாளராக அண்ணா வி.க. வீரர் கோகுலராஜ் தெரிவானார். சிறந்த வீரராக அண்ணா வி.க. வீரர் கபில்ராஜ் தெரிவானார்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின்தலைவர் அனுரடிசில்வா, சிறப்புவிருந்தினர்களாக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி முதல்வர் அருட்தந்தை கொட்விறி ஜோயெல், இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் பொதுச் செயலர் ஜஸ்வர் உமர், இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் பிரதி செயலர் நிர்வாகம் எ.அருளானந்தசோதி, இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் பிராந்திய தலைவர் ஆர்.புவனேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (23)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.17
அமரர் பா.மயூரதன் ஞாபகார்த்தமாக நடைபெறும் கே.ஸி.ஸி.ஸி கிண்ணத்துக்கான கூடைப் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

# வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.17
யாழ். மாவட்ட வலைப் பந்தாட்டச் சங்கத்தின் ஊடாக 2018ஆம் ஆண்டு நடுவர் தரப்படுத்தலுக்கான பரீட்சைக்கு தோற்றிய அனைத்து தர (A,B,C) பரீட்சார்த்திகளுக்கும் மற்றும். யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட நடுவர்களுக்குமான கலந்துரையாடல் நாளை புதன் கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து வலைப்பந்தாட்ட நடுவர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்க செயலர் த.அபிதா அறிவித்துள்ளார். (422)

# யங்கென்றிஸ் - சென்.நியூஸ்ரார் இணைச் சம்பியனாகின



யாழ்ப்பாணம், டிசெ.17
வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் நவரட்ணராஜா ஞாபகார்த்த தலைவர் கிண்ணத்துக்கான வலிகாம மட்ட கால்பந்தாட்டத் தொடரில் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழக அணி. துணைவி சென்.நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணிகள் இணைச் சம்பியின் ஆனது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணிக்கு இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட மட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து துணைவி சென்.நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் எந்தவித கோல்களையும் பதிவு செய்யாது போக ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

போட்டி முடிவடைவதற்கு 15 நிமிடங்கள் இருக்கையில் மழை காரணமாக மைதானத்தில் வெள்ளம் ஏற்பட்டது. இதனால் தொடர்ந்து சமநிலை தகர்ப்பு உதை வழங்கக் கூடியதாக மைதானம் இல்லாத காரணத்தால் போட்டி ஏற்பாட்டளர்களால் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழக அணி, துணைவி சென்.நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணிகள் இணைச் சம்பியினாக அறிவிக்கப்பட்டு கிண்ணம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் அனுர டி சில்வா, சிறப்புவிருந்தினர்களாக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி முதல்வர் அருட்தந்தை கொட்விறி ஜோயெல், இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் பொதுச் செயலர் ஜஸ்வர் உமர், இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் பிரதி செயலர் நிர்வாகம் எ.அருளானந்தசோதி, இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் பிராந்திய தலைவர் ஆர். புவனேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (23)

# ஆளுமை மிக்க வீரராக பென்ஸ்டோக்ஸ் தெரிவு



பி.பி.சி. செய்திச் சேவை வழங்கிய 2019ஆம் ஆண்டுக்கான ஆளுமை மிக்க விளையாட்டு வீரர் என்ற விருதை இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சகல துறை ஆட்டக்காரர் பென் ஸ்டோக்ஸ் பெற்றுள்ளார்.

2019ஆம் ஆண்டுக்கான ஒருநாள் உலகக் கிண்ணம் மற்றும் ஆஷஸ் தொடர் போன்றவற்றில் சிறந்த ஆற்றலை வெளிப்படுத்தியமைக்காவே அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

அதன்படி பென்ஸ்டோக்ஸ் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணத் தொடரில் 5 அரை சதங்கள் உள்ளடங்கலாக மொத்தம் 465 ஓட்டங்களைக் குவித்தார். அவரது சராசரியும் 66.42 ஆக உயர்ந்து காணப்பட்டது.

அத்துடன் உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியிலும் அவர் ஆட்டமிழக்காது, 84 ஓட்டங்களை குவித்து ஆட்ட நாயகன் விருதையும் பெற்றார்.

ஆஷஸ் தொடரில் 2 சதம், 2 அரைசதம் உள்ளடங்கலாக மொத்தமாக 441 ஓட்டங்களை குவித்திருந்தார்.

கடந்த 2005ஆம் ஆண்டு இந்த விருதை இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் அண்ட்ரூ பிளின்டொப் பெற்றதற்கு பின்னர் இந்த விருதை பென் ஸ்டோக்ஸ் பெற்றுள்ளார்.

அத்துடன் கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்ட இங்கிலாந்து கிரிக்கெட் அணி ஆண்டின் சிறந்த அணியாக பி.பி.சி.யினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## உலக டூர் பூப்பந்தாட்டத் தொடரில்

# கென்டோ மொமோட்டா கிண்ணம் வென்றார்




சீனாவில் நடைபெற்ற உலக டூர் இறுதி சுற்று பூப்பந்தாட்டத் தொடரில் ஜப்பான் வீரர் கென்டோ மொமோட்டா கிண்ணம் வென்றார்.

முன்னிலை 8 வீரர்கள் மட்டுமே பங்கேற்றுள்ள உலக டூர் இறுதி சுற்று பூப்பந்தாட்டப் சம்பியன்ஷிப் போட்டி சீனாவின் குவாங்ஜோவ் நகரில் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஜப்பானைச் சேர்ந்த கென்டோ மொமோட்டா இந்தோனேசியாவைச் சேர்ந்த இளம் வீரரான அந்தோணி சினிசுகாவை எதிர்கொண்டார். முதன்நிலை வீரரான கென்டோ மொமோட்டாவுக்கு அந்தோணி சினிசுகா கடும் சவாலாக விளங்கினார்.

இதனால் முதல் செற்றை அந்தோணி 21:7 எனக் கைப்பற்றினார். ஆனால் 2ஆவது செற்றில் மொமோட்டா சிறப்பாக விளையாடி அதை 21:17 என்ற கணக்கில் தன்வசமாக்கினார்.

ஆனால் வெற்றியை தீர்மானிக்கும் 3ஆவது செற்றில் அந்தோணி முன்னிலை பெற்றிருந்தாலும், அதன்பின் கோட்டை விட்டதால் கென்டோ மொமோட்டா 21:14 எனக் கைப்பற்றி கிண்ணத்தை சுவீகரித்தார்.

3ஆவது செற்றில் மொமோட்டா ஒரு கட்டத்தில் 5:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் பின்தங்கியிருந்தார். அதன்பின் சிறப்பாக விளையாடி புள்ளிகளை அள்ளினார். 17:14 என முன்னிலைப் பெற்றிருந்தபோது, அந்தோணி காயம் அடைந்தார். அதன்பின் 21:17 என மொமோட்டா வெற்றி பெற்றார்.

# டோனியின்சாதனையை சமன் செய்த ஹட்மயர்

இந்தியாவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் 139 ஓட்டங்கள் எடுத்ததன் மூலம் டோனியின் சாதனையை சமப்படுத்தினார் ஹெட்மயர்.

சேப்பாக்கம் மைதானத்தில் 3ஆவது வீரராக களம் இறங்கிய ஹெட்மயர் வாணவேடிக்கை காட்டினார். 26 வயதான அவர் 106 பந்துகளில் 139 ஓட்டங்கள் குவித்தார். இதில் 11 நான்கு ஓட்டங்களும், 7 ஆறு ஓட்டங்களும் அடங்கும். இது அவது 5ஆவது சதமாகும்.

வெற்றிகரமான சேசிங்கில் அதிக ஓட்டங்கள் எடுத்த மேற்கிந்தியத்தீவுகளின் வீரர் என்ற சாதனையை அவர் புரிந்தார். இதற்கு முன்பு 1999ஆம் ஆண்டு ரிக்கார்டோ போவெல் 124 ஓட்டங்கள் எடுத்து இருந்தார். இதை முறியடித்தார்.

மேலும் இந்திய மண்ணில் வெற்றிகரமான சேசிங்கில் அதிக ரன் எடுத்தவர்களில் 2ஆவது இடத்தை பிடித்தார். ஜெயசூரியா 1997ஆம் ஆண்டு ஆட்டமிழக்காமல் 151 ஓட்டங்கள் பெற்று முதல் இடத்தில் உள்ளார். சேப்பாக்கம் மைதானத்தில் 139 ஓட்டங்கள் குவித்ததன் மூலம் ஹெட்மயர் அதிக ஓட்டங்கள் எடுத்த 2ஆவது இடத்தில் உள்ள டோனியை சமன் செய்தார். டோனி 2007ஆம் ஆண்டு ஆசிய லெவன் அணிக்காக சேப்பாக்கத்தில் ஆப்பிரிக்க லேவனுக்கு எதிராக ஆட்டமிழக்காமல் 139 ஓட்டங்கள் பெற்றிருந்தார். சயீத் அன்வர் 1997 ஆம் ஆண்டு 194 ஓட்டங்கள் குவித்ததே இன்னும் சாதனையாக உள்ளது.



# மே.இ.தீவுகளின் வீரர்களை பாராட்டிய விராட் கோக்லி

சென்னையில் நடைபெற்ற ஆட்டத்தில் தோல்வியடைந்ததையடுத்து விராட் கோக்லி மேற்கிந்தியத்தீவுகளின் வீரரை பாராட்டினார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான முதலாவது போட்டியில் இந்திய அணி படுதோல்வியத் தழுவியது. இந்த தோல்வி குறித்து கோக்லி தெரிவிக்கையில்;

நானும், ரோகித்சர்மாவும் சரியான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. ரிஷப்பண்ட், ஷிரேயாஸ் அய்யர் இருவரும் சிறப்பாக ஆடினார்கள்.

என்னை பொறுத்தவரை மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர்கள் உண்மையிலேயே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். ஹெட்மயர் பிரமாதமாக ஆடினார். ஹோப்பும் நன்றாக விளையாடினார்.

ஆனால் வேகப்பந்து வீரர்கள் சிரமப்பட்டார்கள். பந்தை பிடித்து நேர்த்தியாக வீச திணறினார்கள். இது ஒரு கடுமையான மாற்றம் இல்லை. ஆனால் சிறிய அளவில் மாற்றம் இருந்தது. ஒட்டு மொத்தத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர்கள் எங்களை விட நன்றாக ஆடினார்கள் - என்றார்.



தாமதமான பந்துவீச்சு

# மேற்கிந்தியத் தீவுகளுக்கு விதிக்கப்பட்டது தண்டம்!

பொலார்ட் தலைமையிலான மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு 80 சதவீதம் அபராதம் விதித்து ஐசிசி அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.

சென்னையில் நேற்றுமுன்தினம் இந்தியா, மே.இ.தீவுகள் அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் ஆட்டம் நடந்தது. இந்த ஆட்டத்தில் இந்திய அணியை 8 விக்கெட்டில் வீழ்த்தியது மே.இ.தீவுகள் அணி.

இந்தப் போட்டியில் முதலில் பந்து வீசிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் பந்துவீசாமல் அதிகமான நேரம் எடுத்துக்கொண்டது. குறிப்பாக கடைசி 4 பந்துப்பரிமாற்றங்களை வீசுவதற்கு அதிகமான நேரத்தை மே.இ.தீவுகள் அணியினர் எடுத்துக்கொண்டனர். இதையடுத்து, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் பந்துவீசாத மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு அபராதம் விதித்து ஐசிசி உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து ஐசிசி வெளியிட்ட அறிவிப்பில் 'ஐசிசியின் விளையாட்டு வீரர்களுக்கான விதிமுறைகள்படி, போட்டியில் பந்துவீச நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் பந்துவீசாமல் கூடுதல் நேரம் எடுத்துக்கொண்டால் குறைந்தபட்சம் 20 சதவீதம் வீரர்கள் அனைவருக்கும் அபராதம் விதிக்கப்படும். ஆனால், மே.இ.தீவுகள் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தைக் காட்டிலும் கூடுதலான நேரத்தை எடுத்து 4 பந்துப்பரிமாற்றங்கள் வரை வீசியுள்ளனர். ஆதலால், 80 சதவீதம் அபராதம் விதிக்கப்படுகிறது' எனத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக பொலார்ட்டிடம் எந்தவிதமான முறையான விசாரணையும் நடத்தப்படவில்லை. போட்டி முடிந்தபின் தங்கள் மீதான அபராதம் விதிப்புக்கு மே.இ.தீவுகள் கேப்டன் பொலார்ட் சம்மதம் தெரிவித்துள்ளார். (ம)

துரித தபால்கள் பொதிகள் சேவை
எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில் 11Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு
UK - 525/=
Germany - 625/=
Australia - 850/=
Swiss - 850/=
TCN EXPRESS
கொழும்பு, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி.
Hotline - 077 755 4528

வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் பிரபல நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1). வரவேற்பாளர்கள்
2). சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள்
3). விநியோக ஊழியர்கள் (இரவு, பகல்)

தகுதியானவர்கள் இன்று 17.12.2019 (செவ்வாய்க்கிழமை) முற்பகல் 10.00-02.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.
முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உதயன் பணிமனை
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



பிறப்பு 29 .... 01 .... 1942
இறப்பு 16 .... 12 .... 2019

## கந்தையா சரஸ்வதி

பொன்னையா லேன், தாவடி வடக்கு, கொக்குவிலை பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டை அரசடி கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சரஸ்வதி நேற்று (16.12.2019) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். CS2998(16/17)

தகவல்: குடும்பத்தினர்.

# ரி20 உலகக்கிண்ணத்தில் விளையாடுவார் டோனி



ஆஸ்திரேலியாவில் அடுத்த ஆண்டு நடைபெறும் ரி-20 உலகக் கோப்பைப் போட்டியில் டோனி நிச்சயம் விளையாடுவார், ஓய்வு பெறமாட்டார் என்று மே.இ.தீவுகள் வீரர் டிவைன் பிராவோ நம்பிக்கை தெரிவித்துள்ளார்

உலகக்கோப்பை அரையிறுதியில் இந்திய அணியின் தோல்வி அடைந்து வெளியேறியபின் டோனி எந்தவிதமான போட்டிகளிலும் பங்கேற்காமல் இருந்து வருகிறார்.

டோனி ஓய்வு அறிவிப்பாரா அல்லது தொடர்ந்து விளையாடுவாரா என்பது ரசிகர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது. ஜனவரி மாதம் வரை எதுவும் கேட்காதீர்கள் என்று சமீபத்தில் டோனி ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் உலகக்கிண்ணத் தொடரில் டோனி விளையாடுவார் என்றுள்ளார் பிராவோ.

ஆஸ்திரேலியாவில் அடுத்த ஆண்டு நடக்கும் ரி20 உலகக் கோப்பைப் போட்டி வரை விளையாடுவார் என்று நினைக்கிறேன். கிரிக்கெட்டுக்கு வெளியில் இருந்து புறக்காரணிகள் ஏதும் தன்னை பாதிக்காமல் டோனி கவனமாக இருப்பார். எங்களுக்கும் டோனி கற்றுக்கொடுத்துள்ளார் என்று பிராவோ மேலும் தெரிவித்தார். (ம)

தேவை
தையல்வேலை நன்கு அல்லது ஓரளவு தெரிந்தவர்கள் தேவை.
வேலை இடம் - யாழ். சுண்டிக்குழி
077 807 6158, 077 217 4741

வேலையாள்கள் தேவை
யாழ் நகரில் உள்ள பாசல் மற்றும் பலசரக்கு வியாபார நிலையத்திற்கு சிட்டை எழுதுநர், விற்பனைப் பிரதிநிதி, உதவியாள்கள் உடன் தேவை ஆண்கள். யாழ் நகரிற்கு அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:-077 766 7715

வகுப்புக்கள் மீளாரம்பம்
18-12-2019 இல் இருந்து
வழமையான நேரசூசிக்கமைவாக
கொக்குவில் 1.40 - 5.40
மல்லாகம் 2.00 - 5.00
குறிப்பு: டெங்கு அனர்த்தத்தின் நிமித்தமாக யாழ் மாவட்டச் செயலகம் வழங்கிய பணிப்புரைக்கமைய இடைநிறுத்தப்பட்ட கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் யாவும் மீளாரம்பிக்கப்படுகின்றன.
அகரம் உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.